# புலம் பெயரும் மண்வாசம்

(தாயக புலம்பெயர் மக்களிடையே ஒரு நோக்கு!)



K.ARUNTHAVARAJAH

# புலம் பெயரும் மண் வாசம்

(தாயக, புலம் பெயர் மக்களிடையே ஒரு நோக்கு)

V. Sivarajah
Am Windhövel 18a
47249 Duisburg
Germany

க. அருந்தவராஜா
(B.A, Dip in Edu.Med)

15/12/09

கலை இலக்கியப் பேரவை

ஜெனீவா

சுவிற்சர்லாந்து

# நூல் விபரத்தரவு


நூற்றலைப்பு - புலம்பெயரும் மண்வாசம்

நூலாசிரியர் - க.அருந்தவராஜா

பதிப்புரிமை - ஆசிரியருக்கு

பக்கங்கள் - XIV + 109

அட்டைப்பட வடிவமைப்பு - ந.அன்பழகன் (சுவிற்சலாந்து)

அச்சுப்பதிப்பு - றண்யாஸ் கிறபிக்ஸ், வெள்ளவத்தை

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book : PULAM PEYARUM MANVASAM

Author : K.ARUNTHVARAJAH

Copy right : to Author

No.of Pages : XIV + 109

Cover Designing : N.Anpalagan (Switzerland)

Printing : Ranyas Graphics, Colombo 06

# பதிவுகள்


| | | பக்கம் |
|---|---|---|
| i) | சமர்ப்பணம் | iv |
| ii) | முன்னுரை | v |
| iii) | அணிந்துரை | ix |
| iv) | வாழ்த்துரை | xiv |
| 1 | தமிழர் கண்ட நகர்வு | 01 |
| 2 | தாயக வாழ்வு | 11 |
| 3 | கண்ணீர்ப் பயணம் | 21 |
| 4 | புலம் பெயர் தமிழர் வாழ்வு | 36 |
| 5 | வீதி | 54 |
| 6 | பெரியபிள்ளை | 83 |
| 7 | கலாசார வாழ்வு | 92 |
| 8 | புலம்பெயர் வாழ்வில் புதியதேவைகள் | 106 |

## சமர்ப்பணம்

அகதியாகி

அகிலமெல்லாம்

அலையும்

அருந்தமிழர்

அனைவருக்கும்

அன்புடன்

அர்ப்பணம்.

# முன்னுரை

பரந்து விரிந்து கிடக்கின்ற இந்தப் பூமிப்பந்தில் ஒரு மையத்தில் மட்டும் கருக்கொண்டு உருப்பெற்ற இனமாகத் தமிழர்கள் காணப்படுகின்றனர். ஆசியாவின் இந்திய நிலத்தகட்டின் தென் அந்தத்திலும் இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதியிலும் தமிழ்மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வருகின்றனர்.

வெப்ப வலயத்தில் அயன வலயக் காலநிலையை அனுபவிக்கின்ற இப்பிரதேசங்கள் அதிக வெப்பத்தையும் கணிசமான மழைவீழ்ச்சியையும் பெற்றுக்கொள்கின்றன. பருவக்காற்றுக்கள் இப்பகுதிக்கு அதிக மழைவீழ்ச்சியைப் பெற்றுக் கொடுப்பதால் நெற்பயிர்ச்செய்கை மற்றும் தோட்டச் செய்கை என்பவற்றுக்கு சாதகமாக அமைந்துவிடுகிறது. காலநிலை, நிலவளம், நீர்வளம் என்பன இம்மக்களை விவசாயம்சார் தொழிலாளர்களாக உருவாக்கிவிட்டிருக்கின்றன. நிலப்பற்றாக்குறை காலநிலை மாற்றம் இயற்கை அனர்த்தங்கள் காரணமாக விவசாயம் அதிகளவில் பாதிக்கப்படக்கூடிய நிலையில் இருக்கிறது. இவ்வாறான பாதக நிலைமைகளால் உற்பத்தி பாதிக்கப்படும்போது அவர்கள் வறுமையுள்ளவர்களாக மாற்றம் பெறுகின்றனர். தமிழர்களில் பெரும்பாலானவர்கள் விவசாயிகளாக இருந்ததனால் அவர்களில் பலர் பிழைப்புத்தேடி வெளிநாடுகளுக்குப் புலம் பெயர்ந்து செல்ல வேண்டிய அவல நிலை ஏற்பட்டது. இலங்கையை விட இந்தியாவில் அதிக சனத்தொகை காணப்பட்டதனாலும் அவர்கள் வறுமை நிலையில் இருந்ததாலும் இத்தகைய வறுமை சார்புப் புலப்பெயர்வு பிரித்தானிய காலணித்துவ ஆட்சிக் காலத்தில் கி.பி. 1800 களில் ஒப்பந்தக் கூலிகளாகவும் கீழ்நிலை அரசபணியாட்களாகவும் தமிழர்களைப் புலம் பெயர் வாழ்வுக்குத் தள்ளியது. இலங்கையின் தேயிலைத் தோட்டங்கள், மலேசியாவின் றப்பர் தோட்டங்கள், பிஜித்தீவின் கரும்புத்தோட்டங்கள், தென் ஆபிரிக்காவில் விவசாயம் மற்றும் சுரங்க வேலைகளுக்குமாக தமிழர்கள் அதிகளவில் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டு கூலிகளாக அமர்த்தப்பட்டனர். இவ்வாறு தொழில் தேடிச் சென்றவர்கள் அந்நாடுகளில் நிரந்தரமாகவே தங்கி வாழ்ந்து வருகின்றனர்.

அவர்களில் பெரும்பாலானவர்கள் தங்கள் மொழியையும் கலாசாரங்களையும் மறந்தவர்களாக மாற்றம் பெற்று வருவது இனம் சார்பான இருப்புக்களைக் கேள்விக்குரியதாக மாற்றிவிடுகிறது. மேற்காட்டிய நாடுகளுக்கு புலம் பெயர்ந்து சென்றவர்கள் தங்கள் தாய்மொழியை மறந்தவர்களாகவும் இன்று அந்நாடுகளின் மொழிகளைப் பேசுபர்களாகவும் மாற்றம் பெற்றுவிட்டனர். அவர்களின் பெயர்களில் தமிழ் மொழி இருக்கும் வழிபடும் தெய்வங்களில் தமிழ்க்கடவுளர் இருப்பர். ஆனால் பேசும் மொழியில் அவர்களின் தாய்மொழி இருப்பதில்லை. அந்நாடுகளில் தங்கள் இனத்துக்கான தனித்துவத்தை இழந்து விடுகின்றனர்.

கிபி. 9 ஆம் நூற்றாண்டுக்குப்பின் சோழர்களால் தென்கிழக்காசிய நாடுகள் பல கைப்பற்றப்பட்டபோது இந்தியத்தமிழர்கள் பலர் இலங்கை, இந்தோனேசியா, போர்ணியோ, பர்மா, சுமத்திரா, பாலித்தீவு எனப்பல தேசங்களுக்குக் குடிபெயர்ந்து சென்றனர். சோழராட்சி அந்நாடுகளில் முடிவுக்கு வந்தபோது பலர் தாயகத்துக்குத் திரும்பினர். இன்னும்பலர் அந்நாடுகளிலேயே தொடர்ந்தும் தங்கியிருந்தனர். அவர்கள் இன்றும் தமிழ் கலாசாரங்களைப் பின்பற்றி வருகின்றனர். அந்நாடுகளிலுள்ள இந்துக்கோயில்களில் வழிபடுகின்றனர். ஆனால் தமிழ் மொழியை மறந்தவர்களாகவே வாழ்ந்து வருகின்றனர். அந்நாடுகளின் சுதேசிய இனங்களுடன் கலப்புற்று வாழப் பழக்கப்பட்டு விட்டனர்.

இலங்கைத் தமிழர்கள் எண்பதுகளுக்குப் பின்னர் இனமுரண்பாட்டு நெருக்கடியில் ஏற்பட்ட உயிர்வாழ்வதற்கான அச்சநிலை காரணமாகவும் சிலர் பொருளாதார நோக்கங்களோடும் புலம் பெயர்ந்து இந்தியா உட்பட உலகின் பல நாடுகளுக்கும் சென்றனர். இந்தியாவைத்தவிர மற்றைய எல்லா நாடுகளிலும் அந்நாடுகளின் மொழிகளையே பேச வேண்டிய நிலையில் உள்ளனர். இருப்பினும் தமிழ் மொழியையும் கலாசாரத்தையும் காப்பற்றிக் கொள்வதற்கான வேலைத்திட்டங்களை உருவாக்கி செயற்பட்டு வருகின்றனர். ஆயினும் இந்நிலை எவ்வளவு காலத்துக்கு நீடிக்கப்போகிறது? காலப்போக்கில் அந்தத் தமிழர்களும் தாய்மொழியை மறந்து விடுவர்களா? என்ற ஐயப்பாடு இல்லாமலும் இல்லை.

புலம் பெயர் உறவுகளுக்கும் தாயக உறவுகளுக்கும் இப்பொழுது காணப்படுகின்ற நேசஉறவுகள் தொடர்ந்தும் நீடிப்பதே ஆரோக்கிய மானதாகும். மண்ணையும் மக்களையும் நேசிப்பதன் மூலம் தாயகப்பற்றைத் தக்க வைத்துக்கொள்ள முடியும். புலம் பெயர் நாடுகளிலுள்ள இளந் தலைமுறையினர் மற்றும் அடுத்த தலைமுறையினர் மத்தியில் தாயகம்பற்றிய தெளிவான கருத்துருவாக்கம் ஏற்படுத்தப்படுவதுடன் தாயகத்திலுள்ள இளந்தலைமுறையினரும் புலம்பெயர் நாடுகளின் உறவுகளின் வாழ்வு நிலை பற்றிய தெளிவான விளக்கம்பெறுவதும் காலத்தின் தேவையாகும். தாயக உறவுகளுக்கும் புலம்பெயர் உறவு களுக்குமான ஒரு இணக்கப்பாட்டை உருவாக்குவதன் மூலமாக மெல்லத்தமிழ் இனிச்சாகும் என்ற நிலையை மாற்றி புலம்பெயர் நாடுகளிலும் தமிழ் துளிர்விட்டுத் தளைக்கும். என்ற நனவு நிலையை உருவாக்க வேண்டும். முற்காலங்களைப்போல் புலம் பெயர்ந்த தமிழர்கள் தாய் மொழியை மறவாது எந்நாடுகளில் வாழ்ந்தாலும் தாயகப் பற்றை ஊட்டிக் கொள்வதன் மூலமாக தாய் மொழியையும் அவர் பண்பாடுகளையும் தற்காத்துக் கொள்ள முடியும் என்ற கருத்தியலை எட்டுவதற்காக இந்நூலுருவாக்கம் இடம் பெறுகிறது.

வரலாற்று ரீதியாக தமிழர்களுடைய இடப்பெயர்வுகள் எவ்வாறு இடம்பெற்றிருக்கிறது தாயகத்தில் உள்ள மக்களுடைய வாழ்க்கை முறைகள் எப்படி அமைந்திருக்கிறது, இலங்கையிலிருந்து தமிழர்கள் அகதிகளாக மேலைத்தேய நாடுகளுக்குப் பயணித்தபோது எதிர்கொள்ளப்பட்ட இடர்கள், புலம் பெயர் நாடுகளிலுள்ள மக்களின் வாழ்க்கை நிலைமைகள், கலாசார வாழ்வியல் போன்ற விடயங்களை சாதாரண மொழி வழக்கில் இந்நூலில் குறித்துக் காட்டப்படுகிறது.

இந் நூலாக்கத்துக்கான அணிந்துரை வழங்கிச் சிறப்பித்த எனது நண்பரும், விமர்சன இலக்கியவாதியும்,இலங்கை கல்வி வெளியீட்டுத் திணைக்கள பிரதி ஆணையாளருமான திரு லெனின் மதிவானம் அவர்களுக்கு நட்புடன் கூடிய நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலாக்கத்திற்குப் பெரிதும் துணை நின்ற

நண்பரும் இலங்கைக்கல்வி அமைச்சிக் தமிழ் மொழிப் பிரிவுக்கான பணிப்பாளருமாகிய கவிஞர் திரு.சி. இதயராஜா அவர்களுக்கும் நன்றிகள் கூறுவதில் மகிழ்ச்சியடைகிறேன். புலம் பெயர்ந்து வாழ்ந்துவரும் நிலையில் நூலாக்கத்துக்கான தூண்டுகைகளை எனக்குள் ஏற்படுத்திய ஜெனீவா மருத்துவத்துறை நண்பர்களான Dr. Lauent Subilai, Dr. Barbana Whitaker இருவருக்கும் என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நூல் வெளியீட்டுக்கான ஆக்கமும் ஊக்கமும் அளித்துதவிய ஜெனீவா கலை இலக்கியப் பேரவையினருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். இந்நூலினை சிறப்பான முறையில் அச்சிட்டு உதவிய வெள்ளவத்தை றண்யாஸ் கிரபிக்ஸ் நிறுவனத்தினருக்கும் என்றும் எனது நன்றிகள்.

FARNWEG - 19
5074 ELKEN
SWITZERLAND.
arun.raj @ live.de

க.அருந்தவராஜா

# அணிந்துரை

இலங்கைத் தமிழரின் புலம்பெயர் கலாசாரப் பண்பாட்டுப் பாரம்பரியமானது தனித்துவத்துடன் விளங்குகின்றது. பண்பாட்டாய்வுத் துறையின் ஜனநாயகப் பண்பு வளர வளர இதன் முக்கியத்துவம் சிறப்பாக உணரப்பட்டு வருகின்றது. தமிழ்ப் பண்பாட்டின் இப்புதிய முனைப்பை உணர்ந்ததன் விளைவாக புலம்பெயர் இலங்கைத் தமிழர் மத்தியிலிருந்து ஆரோக்கியமான கலாசாரப் பண்பாட்டு ஆய்வு முயற்சிகள் இடம்பெற்று வருவதனைக் காணக் கூடியதாக உள்ளன. அந்தவகையில் புலம்பெயர் இலங்கைத் தமிழரின் உணர்வுகளை அவர்தம் வாழ்க்கையை கவிஞர் வ.ஐ.ச ஜெயபாலன் தன் சரித்திர தூரிகை கொண்டு புதியதோர் நாகரிகத்திற்கான சித்திரத்தை இவ்வாறு ஆக்குகின்றார்.

"உலகெங்கும்
வாழ்வை இழந்து வசதி பொறுக்குகின்ற
மனித சருகுகளாய் புரள்கின்றேன்
என்ன நம் தாய்நாடு
ஓயாமல் இலையுதிர்க்கும்
உயிர்ப்பிழந்த முதுமரமா.....?

யாழ்நகரில் என் பையன்
கொழும்பில் என் பெண்டாட்டி
வன்னியில் என் தந்தை
தள்ளாத வயதினில்
தமிழ் நாட்டில் அம்மா.......

என்ன நம் குடும்பங்கள்
காற்றில் விதிக்குரங்கு கிழித்தெறியும்
பஞ்சுத் தலையணையா.....?
பாட்டனார் பண்படுத்தி
பழ மரங்கள் நாட்டி வைத்த
தோப்பை அழியவிட்டு
தொலைதேசம் வந்தவன் நான்
என்னுடைய பேரனுக்காய்
எவன் வைப்பான் பழத்தோட்டம்......?

இலங்கையில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகள் காரணமாக இலங்கைத் தமிழர் குறிப்பாக வடகிழக்கு பிரதேசத்தில் வாழ்ந்தவர்கள் வேறு நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து செல்வதற்கான நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இப்புதிய சூழலில் இவர்கள் எதிர் கொண்ட அனுபவங்களும் சவால்களும் தனித்துவமானவை. இப்பின்னணியே **புலம்பெயர் இலங்கைத் தமிழர்;**; (Sri Lankan Tamil Diasphora) என்ற சமூக இருப்பைத் தோற்றுவித்துள்ளது. புலம்பெயர் இலங்கைத் தமிழர், அவர்கள் எங்கு வாழ்ந்தாலும் நசிந்து சிதைவுக்குள்ளான வடகிழக்கின் வாழ்க்கை குறித்த மனித நேயத்தை பதிவாக்கத் தவறவில்லை. அவ்வகையில் தன் வேள்வி வீழ்ந்து விடாமல் தொடர்வதற்குரிய பலத்தை பிரதிபலிக்கும் குரலாகவும் இதனை அர்த்தப்படுத்தலாம்.

இலங்கைத் தமிழரின் புலம்பெயர்வு அவ்வக் காலகட்டங்களில் திட்டுகளாகவும் தீவுகளாகவும் இடம்பெற்று வந்திருப்பினும் புலப்பெயர் இலங்கைத் தமிழர் என்ற சமூக இருப்பை நிலைநிறுத்தும் அம்சமாக அவை அமையவில்லை. 1960, 1970 களில் குறிப்பாக வடகிழக்கு தமிழர் மத்தியிலான புலம்பெயர்வு கல்வி, தொழில் நிர்ப்பந்தம் காரணமாக இடம்பெற்றது. இவர்கள் மேட்டுக்குடி சமூகமாக இருந்ததுடன் எண்ணிக்கையும் மிக சிறு தொகையாகவே காணப்பட்டது. நமது நாட்டின் வரிப்பணத்திலும் மற்றும் அடக்கியொடுக்கப்பட்ட மக்களின் உழைப்பையும் உதிரத்தையும் கொள்ளையடித்து சம்பாதித்த பணத்திலும் பெற்ற கல்வியை மேலும் விருத்தி செய்து அதனூடே தமது அங்கீகாரத்தையும் அந்தஸ்த்தையும் மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கே இவர்களிடம் முனைப்புற்றுக் காணப்பட்டன. இவர்களில் பலர் தமிழுணர்வு உடையவர்களாக இருந்துள்ளனராயினும் பெரும்பாலும் அவர்களது அக்கறை சமுதாயத்தில் மேட்டுக் குடியினரையே சார்ந்திருந்தது. எனவே இவர்களின் உணர்வுகள் புலம்பெயர் தமிழர் என்ற அடையாளத்துடனான சமூக இருப்பாக மலரவில்லை. 1983 க்குப் பின்னர் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் சமூகப் பொருளாதார நெருக்கடிகள், இன வன்முறைகள் காரணமாக இந்தியாவிற்கும் ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கும் இலங்கைத் தமிழர் புலம்பெயர்ந்து சென்றனர்.

இலங்கையில் இடம்பெற்ற தமிழ் தேசிய போராட்டமானது இம்மக்களின் புலப்பெயர்வை அதிகரிக்கச் செய்தது. இந்த சூழலில் சமூகத்தின் வாய்ப்பும் வசதியும் பெற்ற மேட்டுக் குடியினர் பிரித்தானியா,

கனடா, அவுஸ்திரேலியா, சுவிற்சலாந்து மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகளுக்கு புலம் பெயர்ந்து சென்றனர். வசதியற்றவர்கள் தமது சொத்துக்களை அடமானம் வைத்தும் கடன் பெற்றும் இத்தகைய நாடுகளுக்குச் சென்றனர். இத்தகைய புலம்பெயர்வில் வயது முதிர்ந்தோர் சிலர் சென்றனர் என்ற போதிலும் பெருந்தொகையினர் இளைஞர்களாகவே காணப்படுகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் தொழில் தேடி சென்றவர்கள் என்பதை விட தமது உயிருக்கு அஞ்சிப் புகலிடம் தேடிச் சென்றவர்களே என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதொரு அம்சமாகும்.

இந்தியாவிற்கு புலம்பெயர்ந்து சென்றவர்கள் அங்குள்ள கலாசாரப் பண்பாட்டு பாரம்பரியமானது இலங்கைத் தமிழரின் பண்பாட்டு பாரம்பரியத்தோடு பெரிதும் ஒத்திருந்தமையினால் அங்கு நிலைத்து வாழ எண்ணியோருக்கு அச்சூழலுக்கு தம்மைப் பழக்கப்படுத்துவதும் சங்கமமாவதும் ஓரளவிற்கேனும் சாத்தியமாயிற்று. ஐரோப்பிய நாடுகளின் நிலைமை வேறு விதமாக அமைந்திருந்தது. இச்சூழலில் இவர்களின் தாயக ஏக்கங்களும் தாய் மண்ணை இழந்து செல்கின்றோம் என்ற உணர்வுகளும் புதிய கலாசாரப் பண்பாட்டுச் சூழலில் சுய அடையாளத்தைத் தேட வேண்டிய நிர்ப்பந்தத்தை உருவாக்கியது. புலம்பெயர்ந்த நாடுகளில் இவர்களின் சுய அடையாளங்கள் கேள்விக்குள்ளாக்கப்பட்டதுடன் அந்நாடுகளில் இவர்கள் அந்நிய மனிதர்களாகவும் கறுப்பர்களாகவும் அடையாளப்படுத்தப்பட்டனர். தமது நாட்டிலே கல்வி, தகுதி அடிப்படையில் உயர் தொழிலில் ஈடுபடவேண்டியவர்கள் அந்நிய தேசத்தில் தோட்டங்கள், உணவுச் சாலைகள், பெற்றோல் நிலையங்கள், தொழிற்சாலைகள் போன்ற இடங்களில் சாதாரண தொழில்களில் ஈடுப்படுகின்றவர்களாகவும் காணப்படுகின்றனர். காலத்திற்குக் காலம் இந்நாடுகளில் கொண்டு வரப்படுகின்ற குடிவரவுச் சட்டங்களும் அந்நாட்டு மக்களிடையே வளர்ச்சி பெற்று வருகின்ற கறுப்பின எதிர்ப்புணர்வுகளும் புலம்பெயர் இலங்கைத் தமிழரைப் பாதிக்கவே செய்கின்றன.

தமது இருப்புக் குறித்தும் புதிய சூழலில் எதிர் நோக்குகின்ற சவால்கள் குறித்தும் புலம்பெயர் இலங்கைத் தமிழர் பல சிக்கல்களை எதிர் நோக்கி வருகின்றனர். ஒரு புறத்தில் மரபையும் பண்பாட்டையும் இறுக்கமாகப் பின்பற்றுகின்ற நிலையையும் புலம்பெயர் இலங்கைத்

தமிழரிடம் காணக்கூடியதாக உள்ளது. அதன் பின்னணியில் தமது சாதி பற்றிய மேட்டிமைத் தனத்தையும் குறுகிய தமிழ்த் தேசிய சிந்தனைகளையும் இவர்கள் நிலைநிறுத்தத் தவறவில்லை. இந்தியாவிலிருந்து வெளிவருகின்ற வணிக நோக்கிலான வீடியோக்களும் திரைப்படங்களும் இவர்களின் சிந்தனையை ஆக்கிரமிக்கத் தொடங்கியுள்ளன.

மறுபுறமாக சமுதாய அக்கறையும் நேர்மையும் கொண்டவர்கள் இந்த புதிய சூழலில் தமது வாழ்க்கையை அமைத்துக் கொள்வது தொடர்பாகவும் புதியதோர் நாகரிகத்திற்கான வேள்வியைத் தொடங்குவது தொடர்பிலும் ஆரோக்கியமான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர். இந்நிலையில் இவர்களின் செயற்பாடுகள் கலாசாரப் பண்பாட்டு மீளமைப்பு முயற்சிகள் நம்பிக்கை தரக்கூடியனவாகவுள்ளன. அத்தகையதோர் மானுட தளத்தில் தடம் பதித்து நிற்கின்ற இந்நூலாசிரியர் க.அருந்தவராஜா இந்நூலினை ஆக்கியிருப்பது சிறப்பானதொரு அம்சமாகும்.

இந்நூலாசிரியரை பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னரே நானறிவேன் என்னுடன் ஏற்பட்ட நட்பு பின் குடும்ப நட்பாக மாறி இன்றுவரை அவ்வுறவு பலமடைந்து வந்துள்ளது(வருகின்றது). அவரது சிந்தனையின் பலம் மானுட நலன் சார்ந்த நோக்கில் தான் தங்கியுள்ளது என கூறுவது பொருத்தமானது.

புலம்பெயர்ந்த வாழ்வின் அனுபவங்கள் குறித்து எழுத முற்பட்ட இந்நூலாசிரியர் புலம்பெயர் தமிழராக இருப்பது இந்நூலை எழுதுவதற்குரிய முக்கிய தகுதியாக கருதுகின்றேன். இவ்வாழ்க்கை அனுபவங்கள் குறித்து தமது அறிவினால் மட்டுமன்று உணர்வாலும் உணர்ந்திருக்கிறார் என்பதை இந்நூலிலுள்ள கட்டுரைகள் எடுத்துக் காட்டுகின்றன.

புலம்பெயர் மக்களின் அரசியல் பொருளாதார சமுதாயம் பற்றிய தரிசனத்தையும் சத்திய வேட்கையையும் திரித்துக் கூறவும் திரையிட்டு மூடவும் அவற்றுக்கு சமாதி கட்டவும் முயன்று வந்த சக்திகளை மீறி அம்மக்களின் சமூக பண்பாட்டுத் தளங்கள் எவ்வாறு தனித்துவ அடையாளங்களுடன் வளர்ந்தோங்கி நிற்கின்றன? இதன் பின்னணி என்ன?

போன்ற கேள்விகளுக்கு வரலாற்று அடிப்படையிலும் விஞ்ஞான அடிப்படையிலும் புவியியல் அடிப்படையிலும் விடை காணும் முயற்சியாகவே இந்நூல் அமைந்துள்ளது. அவற்றை தக்க ஆதாரங்களுடனும் மேற்கோளுடனும் உதாரணங்களுடனும் எடுத்துக் காட்டுகின்றார். இந்நூல் மூலம் புலம்பெயர் இலங்கைத் தமிழரின் சமூக அனுபவங்கள் பண்பாடு குறித்து வரலாற்றில் நமக்கு அத்தியாவசிய மானதோர் சரித்திரத்தேவை பூர்த்தியாகின்றது என்று கூறலாம்.

என்றாலும் வரலாறு என்பது எந்த ஒரு கட்டத்திலும் முற்றுப் புள்ளி வைத்து முடிவு பெறுவதில்லை. ஒரு காலகட்டத்தின் முடிவு அடுத்த காலத்தின் தொடக்கமாகும். அந்தவகையில் புலம்பெயர்ந்தோர் தொடர்பில் பல புதிய புதிய விடயங்களைக் கண்டறிந்து வரலாற்றை செழுமையாக்கி வளர்ப்பதற்கு இந்நூலாசிரியரின் பணி தொடர வேண்டும் என்பது என் அவா.

**லெனின் மதிவானம்**
*19/10 திம்புல்ல வீதி,*
*ஹட்டன்,*

*பிரதி ஆணையாளர்/ தலைவர்- தமிழ்ப் பிரிவு*
*கல்வி அமைச்சு,*
*இலங்கை.*

leninmathivanam@gmil.com

# வாழ்த்துரை

தாயகத்தில் இருந்து புலம் பெயர்ந்து பலஇன மக்கள் வாழ்கின்ற பல மொழிகள் பேசப்படுகின்ற ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாட்டு மையமாகத் திகழ்கின்ற ஜெனீவா நகரில் கால் பதித்த திரு அருந்தவராஜா அவர்களின் முயற்சி இந்த நகரின் பன்முகத் தன்மைகளோடு வலுச்சேர்க்கின்றது.

அவர் இந்த நூலில் குறிப்பிடுகின்ற நகர்வை இரண்டு வயதுக் குழந்தையாகவே கண்டவள் நான். இடம்பெயர்வு என்பது எனக்கு நினைவு தெரியும் பருவத்திற்கு முன்பே நடந்தேறிவிட்டது. தாயக வாழ்வு முறை, தமிழ் மக்களின் பண்பாடு , தமிழ் மொழி, வரலாறு என அனைத்தையும் எனது பெற்றோரூடாகவும் திரு அருந்தவராஜா போன்ற எழுத்தாளர்களின் பதிவுகள் ஊடாகவுமே அறிய மற்றும் உணரவும் ஆரம்பித்தேன். இந்த வகையில் **புலம் பெயரும் மண் வாசம்** நூலின் முக்கியத்துவம் இன்றியமையாதது.

ஒவ்வவொரு இனத்தின் வாழ்க்கைப் பயணமும் சம காலப்பகுதிகளில் எழுத்துருவாக்கம் பெறப்பட வேண்டும். திரு அருந்தவராஜா அவர்களின் இந்த நூல் ஒரு வரலாற்றுப் பதிவு. புலம் பெயர் வாழ்வை ஒவ்வொரு மனிதனும் வேறு வேறு வடிவங்களில் உள்வாங்கிக் கொள்வார்கள். இங்கு நீங்கள் திரு க.அருந்தவராஜா அவர்களின் கண்கள் ஊடாக இந்த அந்நிய வாழ்வியக்கத்திலும் தாயகத்திலும் அவருடைய சிந்தனைகளைப் புரிந்து கொள்ளலாம்.

அவருடைய இந்த அரிய முயற்சிக்கு என்னுடைய மனமார்ந்த பாராட்டுக்களையும், அனைவரும் புரியும் வண்ணம் எளிமையான மொழியில் ஆழமான சிந்தனைகளைப் படைத்த திரு அருந்தவராஜா அவர்களுக்கு எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். அவர் மென்மேலும் பல படைப்புக்களைத் தந்து தமிழ் இலக்கிய உலகில் பயணிக்க எனது வாழ்த்துக்கள்.

நன்றி

**சுபா. பார்த்தீபன்** . B.Soc.Sc (Hons), MA in International Affairs
ஜெனீவா, சுவிற்சலாந்து

# 1

## தமிழர் கண்ட நகர்வு

புவிதோன்றிய காலத்தில் இருந்தே இடப்பெயர்வுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. உலகில் காணப்படுகின்ற இனங்களில் தமிழர்கள் இன்று சிறப்புக்குரிய நிலையில் இருந்தாலும் அவர்கள் காலங்காலமாக புலப்பெயர்வுகளுக்கு உள்ளாகி வருகின்றமையால் தமக்கான தனித்துவமான கட்டுமானங்களை ஓரிடத்தில் உருவாக்கிக் கொள்ள முடியாத நிலையிலேயே உள்ளார்கள். இடப்பெயர்வுகளை இடைநிறுத்திக் கொள்ளவும் கட்டுமாணங்களை எட்டிக் கொள்ளவும் உலகளாவிய தமிழர்கள் புதிய சிந்தனைகளை ஏற்படுத்தி ஒன்றுபட்டுழைக்க வேண்டும்.

அகன்ற வான்வெளியில் பலபில்லியன் ஆண்டுகளுக்கு முன்னே சூரியகிரகம் மட்டுமே இருந்ததாகவும் பின்னர் அக்கிரகத்தில் ஏற்பட்ட அக முரண்பாடுகள் காரணமாக வெடிப்பு ஏற்பட்டு பலதுண்டங்களாக வெளியே வீசப்பட்டதாகவும் வானியல் விஞ்ஞானிகள் ஆதாரங்களுடன் விளக்கம் தருகின்றனர். இவ்வாறு வீசப்பட்ட துண்டங்களே கட்டித்து இறுகிக் கோள்களாக உருப்பெற்றன என மேலும் அவர்கள் விளக்கம் தருகின்றனர். இந்தப் பரந்த அண்டவெளியில் முதன்முதல் உருவான இடப்பெயர்வாக இதனைக் கருதலாம். சூரியனில் இருந்து வெளிவீசப்பட்ட அத்துண்டங்களில் ஒன்றே புவிக்கிரகமாக உருப்பெற்று நிலை பெற்றிருக்கிறது என்பது ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அதேவேளை புவியின் மேலோடும் காலாகாலமாக இடப்பெயர்வுக்குள்ளாகி வருகிறது என்பதும் உண்மையாகிறது. ஆரம்பத்தில் புவியில் ஒரே ஒரு நிலத்திணிவு (கண்டம்) இருந்ததாகவும் அதனைப் பஞ்சியாக் கண்டம் என்றும் அழைத்துள்ளனர். புவியினுள் ஏற்பட்ட அக முரண்பாட்டுச் செயற்பாடுகளால் புவியோடு வெடிப்புக்குள்ளாகிப் படிப்படியாக நகர்வடைந்து இன்றுள்ளநிலையை அடைந்துள்ளது. அதாவது ஒரு கண்டமாக இருந்த நிலத்திணிவு இன்று ஏழு கண்டங்களாகப் பிளவுபட்டு இடப்பெயர்வுக்குள்ளாகியிருக்கின்றது. இதுவே புவியில் ஏற்பட்ட முதலாவது இடப்பெயர்வாக நோக்க முடிகிறது.

மேற்காட்டிய புவியியற் பின்னணியில் புவியொரு புலம் பெயர்ந்த பொருளாயின் அதற்கு தாயகம் என ஓரிடம் இருக்க வேண்டும் என்ற யதார்த்த வினா எழுகையில் அதன் தாயகம் சூரியன் என்பது ஏற்றுக் கொள்ளப்படவேண்டியதாகிறது. புலம்பெயர் உறவுகளுக்கும் தாயக உறவுகளுக்கும் இருக்கின்ற தொடர்புகள் கொடி உறவைப்போல சூரியனுக்கும் பூமிக்கும் கருவறைத் தொடர்பு இருக்கின்றது.

சூரியன் மிகவும் வெப்பமான நிலையில் இருப்பதால் அவ்வெப்பத்தில் ஒரு பொருளும் உருகாது இருக்க முடியாது. அவ்வாறெனில் சூரியன் எப்போதும் கொதிநிலையில் இருக்கின்ற நெருப்புக் குழம்பாகிய கோளமாகவே இருக்க முடியும். பூமியினுள் தீக்குழம்பு எப்போதும் கொதிநிலையில் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. எரிமலைக்கக் குகைகளின்போது இதனைத் தெளிவாகக் காண முடியும். இத் தீக்குழம்பே சூரியனுக்கும் பூமிக்கும் உள்ள கருவறைத் தொடர்பை வெளிக்காட்ட உதவுகிறது.

மேற்காட்டிய புவியியல் மற்றும் வானியல் ஆதாரங்களுடன் நோக்கும்போது இலங்கைத்தீவும் ஒரு புலம்பெயர்ந்த நிலத்திணிவாக இருப்பதை அவதானித்துக் கொள்ள முடிகிறது. ஆதியில் புவியில் ஒரே ஒரு நிலத்திணிவு இருந்தவேளை இலங்கையென்று தனியான தீவு இருந்திருக்க முடியாது. இலங்கையென்று இன்று அழைக்கப்படுகின்ற தனியான தீவு முன்பு இந்திய நிலத்திணிவுடன் இருந்திருக்கிறது. பின்நாளில் இப்புவியோட்டுப் பகுதியில் ஏற்பட்ட வெடிப்புக் காரணமாக சிறிய நிலத்திணிவு தெற்காக நகர்ந்து தனித்தீவாக அமைவு பெற்றுள்ளது என்றும் ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். இந்தக் கருத்தியல் அடிப்படையில் இலங்கை ஒரு புலம்பெயர்ந்த பொருளாயின் அதன் தாயகமாக இந்தியாவைக் கருதுவதில் தவறேதும் இல்லை.

சூரியனில் ஏற்பட்ட முரண்பாடு ஒரு புலப்பெயர்வை உண்டாக்கி புவியை உருவாக்கியிருக்கிறது. புவியில் உண்டான முரண்பாடுகள் இடப்பெயர்வுகள் மூலமாக பல கண்டங்களை உருவாக்கியிருக்கிறது. கண்டங்களில் ஏற்பட்ட முரண்பாடுகள் கண்டநகர்வுகள் ஊடாக தனித்தீவுகளை உருவாக்கியிருக்கின்றது.

இயற்கையில் ஏற்பட்ட இத்தகைய முரண்பாடுகளும் அதனால் ஏற்பட்ட உடன்பாடுகளில் இருந்தும் மனித இனம் நிறையவே கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. உதாரணமாக சூரியனில் ஒரு முரண்பாடு தோன்றாமல் இருந்திருக்குமாயின் புவியென்றொரு கோள் உருவாகி உயிரினம் நிலை பெற்றிருப்பதற்கு வாய்ப்பில்லாமல் போயிருக்கும். இதேபோல முரண்பாடுகள் உள்ள சமூகத்தில் வலிமையான இனம் அந்த இடத்தில் நிலைபெற, வலிமை குறைந்த இனம் புலம்பெயர்ந்து செல்கின்ற நிலைமை வரலாறுகளில் அவதானிக்கப் பட்டாலும் புலம் பெயர் தளங்களினூடாக அந்த இனத்தின் இருப்பை நிலை நிறுத்திக் கொள்ள, உவப்பான பல ஆற்றுகைகளையும் மேற்கொள்ள முடியும். இவ்வாறான கண்ட, சமூக இடப்பெயர்வுகள் ஒரு இனத்துக்கு சாதகமாகவும் மற்றைய இனத்துக்குப் பாதகமாகவும் அமைந்து விடுகிறது. பாதகங்களினூடாக சாதகங்களுக்கான புதிய வாய்ப்புக்கள் உருவாக்கப்படுவதற்கான வழித்தடங்களை கண்டறிந்து கொள்வதே ஆரோக்கியமானது.

கண்டவோட்டின் இடப்பெயர்வு காரணமாக பல பிரதேசங்கள் நீரினுள் மூழ்கிப் போகக்கூடிய அபாயங்கள் இருக்கின்றன. உதாரணமாக

இந்திய நிலத்திணிவினில் இருந்து இலங்கை பிளவு பட்டபோது பல பிரதேசங்களுக்குள் கடல்நீர் உள்வாங்கப்பட்டதால் அப்பிரதேசங்கள் அழிவுக்குள்ளாக நேரிட்டது. இற்றைக்கு ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டில் இத்தகைய கடல்கோள் ஏற்பட்டு அழிவுக்குள்ளானமை பற்றிய குறிப்புக்கள் பண்டைய தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. அந்தக் கடல்கோள் காலங்களில் இந்தியாவின் தெற்குப்பகுதியில் தமிழர்களின் ஆட்சி சிறப்புற்றிருந் திருக்கின்றது. இந்தக் கடல்கோளினால் ஆயிரக் கணக்கான தமிழர்கள் பலியாக அவர் ஆட்சிக்குட்பட்ட நிலத்தின் பெரும் பகுதியை கடல்கள் காவு கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் இந்தியாவின் வடக்கே சிந்து நதிப்பள்ளத்தாக்கில் சிறப்பான நாகரிகம் இருந்து அழிவடைந்து போயுள்ளமையை அகழ்வாராய்ச்சிகள் உறுதிப்படுத்துகின்றன. மொகஞ்சதாரோ, ஹரப்பா ஆகிய இடங்களில் பெரிய நகரங்கள் சிறப்பான கட்டிட அமைப்புக்கள், வீதி வடிகால்கள், மாடிக்குடியிருப்புக்கள் போன்ற வசதிகளுடன் இருந்து அழிவடைந்திருக்கின்றன. இப்பிரதேசங்களில் வாழ்ந்தவர்கள் திராவிடர்கள் என்றும் அவர்கள் சிவவழிபாட்டைக் கொண்டிருந்தனர் என்றும் வெளிநாட்டுத் தொல்பியல் ஆய்வாளர்கள் உறுதிப்படுத்துகின்றனர். இவ்வாறு செல்வச் செழிப்புடன் வடஇந்தியாவில் வாழ்ந்த திராவிடர்கள் , ஏன் தெற்காகப் புலம் பெயர்ந்தனர் என்பதற்குப் பல கருத்துமுரண்பாடுகள் காணப்படுகின்றன. வட இந்தியாவின் 'கைபர்'கண வாயூடாக உள்நுழைந்த ஆரியர்கள் சிறப்புற்றிருந்த திராவிடர்களை தெற்காக விரட்டினரெனவும் அதனால் இந்தியாவின் தெற்குப்பகுதியை நோக்கித் திராவிடர்கள் புலம் பெயரவேண்டியேற்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்தப் புலப் பெயர்வே திராவிடர்கள் எதிர்நோக்கிய முதலாவது புலப்பெயர்வாக நோக்க முடிகிறது. வட இந்தியாவில் இருந்த திராவிடர்கள் அந்த இடத்திலேயே நீடித்து இருந்திருக்க முடியுமாயின் இந்திய இலங்கை நாடுகளின் இன,மொழி, அரசியல் ரீதியாக வேறுபாடான சூழலே இருந்திருக்கும். இதேபோல இந்திய நிலத்திணிவில் இருந்து இலங்கை பிளவுபட்டிருக்காவிட்டாலும் அத்தகைய நிலைமைகளே நீடித்து நிலைத்திருக்கும்.

இலங்கை பற்றிய குறிப்புகளை நாம் முதன்முதலாக இராமாயண இலக்கியத்தில் இருந்தே அறிய முடிகிறது. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஆரிய இனத்தவரான வான்மீகியால் இராமாயணம் வட மொழியில் எழுதப்பட்டது. வரலாறுகளை அல்லது இலக்கியங்களை எழுதுவோர் தாம் சார்ந்த பக்கமாக நின்று எழுதுவது உண்மைத் தன்மைகளை மலினப்படுத்துவதாக அமையும். வரலாறுகளை திரிபுபடுத்திக் கூறுவது சமூகக் கொலைக்கு ஒப்பானதாக அமையும்.

இராமனின் புகழை எட்டுவதற்காகக் கட்டப்பட்ட இராமாயணம் உச்சத்தில் இருந்த இராவணனின் புகழைக் கீழே வீழ்த்தியிருக்கிறது. ஆரியரின் புகழை ஏற்றி கூறுவதும் திராவிடர்களின் புகழைத் தூற்றிக் கூறுவதுமான வரலாற்று மறைப்பை இராமாயணத்தின் ஊடாக வான்மீகி நிறைவேற்றியிருக்கிறார்.

இலங்காபுரியை ஆட்சிசெய்த இராவணன், திராவிடர் இனத்தவன். சிறந்த சிவபக்தன் என்பதை வெளிப்படுத்த விரும்பாத இராமாயணம் அவனை மனித குலத்துக்கு அப்பாற்பட்ட அரக்கர்குலமென்று குறிப்பிடுவதன் மூலமாக திராவிட இனத்தவர்களை இழிவுபடுத்தும் இன முரண்பாட்டுச் சூழலைத் தோற்றுவிக்கவும் வழிசெய்கிறது.

இலங்கையின் வரலாற்றைக் குறிப்பிடுகின்ற மகாவம்சம் என்ற பௌத்த வரலாற்றுநூல் இலங்கையின் ஆதிக்குடிகளாக இயக்கர், நாகர் என்பவர்கள் பற்றிக் குறிப்பிடுகிறது. வட இந்தியாவில் இருந்து வந்த ஆரியர்களுடன் இயக்கர்கள் கலப்புற்று நாகரிகத்தில் சிறப்புற்றிருந்தனர் எனவும் அந்தக் கலப்பினால் உருவான புதிய இனமே சிங்களவர் என்றும் குறிப்பிடுகிறது. சிங்களவர்கள் நாகரிகத்தில் உயர்ந்தவர்கள் என்று குறிப்பிடுவதன் மூலமாக தமிழர்களை தரம் குறைத்து நோக்குகின்ற இன முரண்பாட்டுச் சூழலைப் பௌத்த மகாவம்சம் நிறைவேற்றி யிருக்கிறது. வரலாறுகள் இலக்கியங்கள் யாரால் எந்நோக்கங்களுக்காக எழுதப்படுகிறனவோ அந்நோக்கங்கள் நிறைவேறும் ஆனால் உண்மைகள் புலம்பெயரும் அல்லது சாகடிக்கப்படும்.

கி.பி முதலாம் நூற்றாண்டளவில் தமிழ்நாட்டை சேர, சோழ, பாண்டியர்கள் என்ற முடியுடை தமிழ்வேந்தர்கள் மாறிமாறி ஆட்சி புரிந்துள்ளனர். இக்காலப்பகுதியில் தமிழை வளர்ப்பதற்காக தமிழ்ச் சங்கத்தை நிறுவிப்பல இலக்கியங்களை உருவாக்கி தமிழ்கூறும்

நல்லுலகுக்கு அளித்துள்ளனர். இலங்கையில் இருந்து தமிழ்ப்புலவர்கள் இந்தியாவுக்குச் சென்று தமிழ்ச்சங்கத்தில் பல நூல்களை அரங்கேற்றிப் பரிசில்களும் பெற்றிருக்கின்றனர் என்பதற்கு இலக்கியங்களில் சான்றுகள் காணப்படுகின்றன. இக்காலப்பகுதியிலேயே தமிழ்நாட்டின் பல பிரதேசங்கள் கடல்கோளுக்குள்ளாகி அழிவடைந்திருப்பது பற்றியும் இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

கி.பி ஒன்பதாம் நூற்றாண்டில் வலிமை பெற்றிருந்த சோழமன்னர்கள் தெற்காக இலங்கை, வடக்காக இமயமலை, தென் கிழக்காக நகர்ந்து தென்கிழக்காசிய நாடுகளான பர்மா, இந்தோனேசியா, யாவா, சுமாத்திரா, போர்ணியோ என பல பிரதேசங்களையம் கைப்பற்றி தமது ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவந்தனர். தாம் கைப்பற்றிய நாடுகளில் இந்துக் கோவில்களைக் கட்டியும் அவற்றை ஆதரித்தும் வந்துள்ளதோடு தமிழர்கள் பலர் அந்நாடுகளில் சென்று குடியேறியும் வாழ்ந்துவந்தனர். சோழமன்னர்கள் இலங்கையைக் கைப்பற்றி பொலநறுவையை தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்துள்ளனர். பொலநறுவையில் பல கோவில்களை கட்டி சைவசமய வளர்ச்சிக்கும் பெரும்பங்காற்றினர். பொலநறுவைச் சிவன் கோவில் சோழமன்னர்களால் கட்டப்பட்ட முக்கியமான கோவிலாகக் கருதப்படுகிறது.

தமிழ்மன்னர்களின் வரலாறுகளை நோக்கும்போது அவர்கள் வீரத்துக்கு கொடுக்கும் அதியுன்னத இடத்தை வேறு ஒன்றுக்கும் கொடுக்கவில்லை. வீரமற்ற வாழ்க்கையை விரும்பாமல் தங்கள் உயிர்களைத் துறந்தவர்களின் வரலாறுகளை இலக்கிய நூல்களில் காண்கிறோம். இவ்வாறான வீரம்மிக்க வாழ்க்கையை வாழ்ந்த தமிழ் மன்னர்கள் ஏன் பின்நாளில் பலமிழந்து போனார்கள். எதற்காகத் தாங்கள் கைப்பற்றிய நாடுகளில் இருந்து விலகிச்சென்றார்கள்? என்ற வினாக்களுக்கு விடை காண்பது அவசியமானதாகும். தமிழ்மன்னர்கள் தங்களுக்குள்ளேயே மோதிக் கொண்டதாலும் காட்டிக் கொடுப்புகளுக்குத் துணை போனதாலும் வலிமையிழந்து பிடித்த நாடுகளையும் இழந்து விலகிச் செல்ல வேண்டிய அவலம் ஏற்பட்டிருக்கிறது.

கி.பி 1250ம் ஆம் ஆண்டில் இலங்கையில் நல்லூரை தலைநகராகக் கொண்டு யாழ்ப்பாண இராட்சியத்தை தமிழ் மன்னர்கள் ஆட்சிபுரிந்து வந்துள்ளனர். போர்த்துக்கேயர் இலங்கையில் கால் பதித்தபோது மூன்று தனியரசுகள் இருந்துள்ளன. கண்டி இராட்சியம், கோட்டை இராட்சியம்,

யாழ்ப்பாண இராட்சியம் என்பனவே அவையாகும். யாழ்ப்பாண இராட்சியத்தை போர்த்துக்கேயர் கைப்பற்றுவதற்கு அவர்களின் ஆயுத பலத்தைவிட தமிழர்களிடம் இருந்த காட்டிக் கொடுப்புச் சந்தர்ப்பவாதமே துணைபுரிந்திருக்கிறது. இந்த வரலாற்றுப் பின்னணியில் யாழ்ப்பாண இராட்சியம் போர்த்துக்கேயரால் கைப்பற்றப்பட்டது என்று நோக்குவதை விட அவ் இராட்சியம் இடப்பெயர்வுக்குக் கூட இடமில்லாமல் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது என்று நோக்குவதே பொருத்தமாக அமையும்.

யாழ்ப்பாண இராட்சியம் போர்த்துக்கேயரிடம் வீழ்ச்சி அடைந்ததன் பின்னர் ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என்போர் மாறிமாறி அவ் இராட்சியத்தைக் கைப்பற்றி தமது ஆளுகைக்குள் வைத்திருந்துள்ளனர். இவ்வாறு ஐரோப்பியர்கள் கண்டம் விட்டுக் கண்டமாக நகர்ந்து நாடுகளைக் கைப்பற்றுவதற்கு அவர்களிடம் இருந்த ஆட்பலத்தை விட ஆயுதபலமே துணையிருந்தது என்பது குறிப்பிடத்தக்கதாக இருப்பினும் போர்த்துக்கேயர் யாழ்ப்பாண இராட்சியத்தை கைப்பற்ற பல தந்திரங்களைக் கையாண்டுள்ளனர். ஆயுதங்களால் மோதி தங்கள் தரப்பில் அதிக உயிரிழப்புக்களை தவிர்ப்பதற்காக சூழ்ச்சிகள் பல செய்தே அவ் இராட்சியத்தை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர் என்பது கவனிக்கத்தக்கது.

தமிழ் மக்களின் சர்வதேச புலப்பெயர்வுகள் காலாகாலமாக ஏற்பட்டு வந்தாலும் மிகத் தெளிவானதும், வலுவானதுமான இடப்பெயர்வுகள் இந்தியாவில் 19ம் நூற்றாண்டில் பிரித்தானியர் வருகையுடனும் இலங்கையில் 1983 யூலைக் கலவரத்தின் பின்பும் தெளிவாக அவதானிக்க முடிகின்றது. பிரித்தானியர்களால் இந்தியாவில் இருந்து தமது காலணித்துவ நாடுகளுக்கு ஒப்பந்தக் கூலிகளாகவும், அடிமட்ட அரச பணியாளர்களாகவும் தமிழர்கள் கொண்டு செல்லப்பட்டனர். இவர்கள் காடு வெட்டுதல் , வீதி அமைத்தல் , தோட்டப்பயிர்ச்செய்கையில் ஈடுபடுதல், சுரங்கவேலை போன்ற கடினமான வேலைகளிலும் ஈடுபடுத்தப்பட்டனர். இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பர்மா போன்ற ஆசிய நாடுகளிலும் தென் ஆபிரிக்கா, மொரிஷியஸ், மடகஸ்கார் போன்ற ஆபிரிக்க நாடுகளிலும் கயானா போன்ற தென் அமெரிக்க நாடுகளிலும் இவ்வாறு புலம் பெயர்ந்த நிலையில் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறு வாழ்ந்து வருபவர்களில் பெரும்பான்மையானவர்கள் தம் தாய் மொழியை மறந்தவர்களாக இருப்பதுடன் இந்நாடுகளில் சுதேச இனங்களுடன் கலப்புற்று வாழப் பழக்கப்பட்டும் விட்டனர். தாம்

வாழுகின்ற சூழலில் தமது தாய்மொழியைப் பேசவும், எழுதவும் சந்தர்ப்பம் இல்லாமற் போகின்ற இனக்குழுமங்கள் காலப்போக்கில் தமது தனித்துவத்தை இழந்து திரிபடைந்து தம்மை இன்னொரு இனக்குழுவில் நுழைத்து உருமாற்றம் செய்து கொள்ளும். அப்போது அவர்கள் தங்கள் தாய்மொழியையும் பண்பாடுகளையும் மறந்தவர்களாகவே இருப்பர். இவ்வாறான நிலைமாற்றுச் சூழலை நோக்கியதான நகர்விற்கு இடம்பெயர் தமிழர்கள் எதிர்காலத்தில் தள்ளப்படுவதற்கான சூழல்களே அதிகம் காணப்படுகின்றன.

இலங்கைத் தமிழர்கள் **1983**ஆம் ஆண்டின் ஆடிக்கலவரத்தைத் தொடர்ந்து சர்வதேச ரீதியாகப் புலப்பெயர்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறு புலம் பெயர்ந்தவர்கள் சுமார் ஆறு லட்சங்களைக் கடந்திருப்பதாகக் கணிக்கப்படுகின்றது. இவர்களில் பெரும்பான்மை யானவர்கள் ஐரோப்பாக் கண்டத்தில் பிரான்ஸ், பிரித்தானியா, ஜேர்மனி, சுவிஸ், இத்தாலி, நோர்வே, சுவீடன், டென்மார்க் போன்ற மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் , கனடா, ஐக்கிய அமெரிக்கா உள்ளிட்ட வட அமெரிக்க நாடுகளிலும், தென்னரைக் கோளத்தில் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய ஓசானிய கண்ட நாடுகளிலும் புலம் பெயர்ந்து வாழ்ந்து வருகின்றனர்.

புவியில் இருவிசைகள் தொடர்ச்சியாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றை இழுவிசை, தள்ளுவிசை என அழைப்பார்கள். இழுவிசை காரணமாக புவியில் பள்ளத்தாக்குகளும் தள்ளுவிசை காரணமாக மலைகளும் உருவாகின்றன. இதே ஓடுகளே சிலவேளைகளில் கண்ட நகர்வுகளுக்கும் உள்ளாகின்றன. இலங்கையின் இன முரண்பாட்டுச் சூழல் தமிழ் மக்களைத் தள்ளுவிசை கொண்டு தள்ளி வெளியேற்றிக் கொண்டிருக்கின்றன. அமைதியற்ற சூழல், உயிர் வாழ்வுக்கான அச்சம், எதிர்காலம் மீது நம்பிக்கையிழப்பு என்பன வெளிவீச வைத்த வெளிவீசிக் கொண்டிருக்கின்ற தள்ளுவிசைகளாகும். பிறநாடுகளில் கிடைக்கின்ற அகதியந்தஸ்து அதன் மூலமாக உயிர்வாழ்வுக்கான உத்தரவாதம், எதிர்காலம் மீதான நம்பிக்கை என்பன அந்நாடுகள் காட்டுகின்ற இழுவிசைகளாகும். எனவே இழுவிசை தள்ளுவிசை என்பன தொழிற்பட்டுக் கொண்டிருக்கும் வரை புலப்பெயர்வுகளும் இடம்பெற்றுக் கொண்டுதானிருக்கும்.

தமிழ்மக்களின் புலப்பெயர்வு என்பது இலகுவானதாக இருக்கவில்லை. அது உயிர்வாழ்வதற்கான போராட்டமாகவே நடந்தேறிக் கொண்டிருக்கிறது.

தமிழ் அகதிகள் கடல் கடந்து இந்தியாவுக்குச் சென்ற வேளைகளில் பாரிய சவால்களை எதிர்கொண்டனர். இரவுகளிலேயே இத்தகைய படகுப் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன. பலர் படகுகவிழ்ந்து குடும்பம் குடும்பமாக மாண்டு போயினர். உயிர்ப்பாதுகாப்புக்காக ஊரை விட்டு ஓடியவர்கள் நடுக்கடலில் உயிரை விட்டுச் சென்ற பரிதாபம். தாயின் கண்முன்னே பிள்ளையை நீர் அடித்துச் செல்லும் பரிதாபம். நீரில் மூழ்கிக் கொண்டிருப்பவர்கள் ஓலமிடும் அவலம். இவ்வாறு எத்தனை துன்பங்களையும் இடர்களையும் பாக்குநீரிணையில் அகதிகள் எதிர்நோக்கியிருந்தனர்.

இலங்கைத்தமிழர்களின் கண்டப்புலப் பெயர்வுகளும் இலகுவானதாக இருக்கவில்லை. துயரமிக்க சரித்திரம் கொண்டவை. கண்டப் பனிக்கட்டியாறுகளின் மீது நடந்திருக்கிறார்கள். அவர்களில் பலர் ஆறுகளால் இழுத்துச் செல்லப்பட்டு மரணித்துப் போயிருக்கி றார்கள். கடுங்குளிர்காலங்களில் கால் விறைக்க நடந்திருக்கிறார்கள். அவர்களில் பலர் குளிரில் இறுகி விறைத்து உயிர் மாண்டுபோனார்கள். இன்னும் பலர் கடும் பசி, தாகங்களால் பயண வழிகளில் உயிர் நீத்திருக்கிறார்கள். கடற் பயணங்கள் செய்து, கண்ட நகர்வுகளை மேற்கொண்ட பலர் படகுகளில் நோய், பசி, தாகம் என்பவற்றால் இறந்திருக்கிறார்கள். இறந்தவர்களின் உடலைத் தூக்கிக் கடலில் வீசி மிகுதித் தூரத்தைக் கடந்து வந்த பயணிகள் இன்னும் பலர். இந்த அகதிப் பயணங்களில் மரணங் கண்டவர் பலர். மரணப்பயம் கண்டவர்கள் இன்னும் பலர்.

எவ்வாறு இந்தப்புவியோடு ஒரு நிலத்திணிவாக பஞ்சியாக் கண்டமாக இருந்து பிளவுபட்டு ஏழு துண்டங்களாகத் தன்னிடம் விட்டு நகர்ந்ததோ, அதே போல ஒன்றாய் இருந்த ஈழத்தமிழர்களும் பல திசைகளாகப் பிரிந்து கண்டம் விட்டுக் கண்டமாக நகர்வடைந்து சென்றுள்ளனர். கண்ட நகர்வுகளின்போது புவியோடு வலு இழப்பதைப் போல தமிழர்களுடைய புலப்பெயர்வுகளும் தாயக இருப்பை வலுவிழக்கச் செய்யும் என்பதில் ஐயமில்லை. இவ்வாறான வரலாற்று நிகழ்வுகளில் தாயக மக்களின் வாழ்வுக்கு வளமூட்டுவதும் வலுவூட்டு வதும் புலம் பெயர்ந்த மக்களுடைய தார்மீகப் பொறுப்புகளாகும்.

இனமுரண்பாடு மீண்டும் மீண்டும் எரிமலை போல செயற்பட்டுக் கொண்டிருப்பதால் இனிவருங்காலங்களில் புதிதாய் ஒரு கிரகம் கண்டுபிடிக்கப்பட்டு அங்கு மனிதன் வாழலாம் என உறுதிப்படுத்தப் படுமாயின் அங்கும் ஈழத்தமிழர்கள் அகதியாய் வாழ கிரகப் பெயர்வுக்கும் தயாராகவே இருக்கின்றனர்.

2

## தாயக வாழ்வு

ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் தாயக வாழ்க்கை மகிழ்ச்சிக்குரியவை. வசந்தங்கள் மிக்கவை. வாழ்விடங்களின் அழகும் உறவுகளின் துணையும் நண்பர்களின் தொடர்பும் வாழ்க்கையை மகிழ்ச்சிக்குரியதாக மாற்றிவிடுகிறது. கிராமிய விவசாயம், கடற்றொழில், சிறுகைத்தொழில் என்பன தாயக வாழ்வுக்கு உரமூட்டும் ஜீவனோபாய முயற்சிகளாகும். யுத்தம், இடப்பெயர்வு என்பன மக்களின் வாழ்க்கை முறைகளில் மாற்றங்களைக் கொண்டு வந்துவிடுவதோடு, அவர்களின் மகிழ்ச்சிக்குரிய வாழ்க்கையையும் ஆட்டம் காண வைத்துள்ளது.

தமிழ் மக்களுடைய வாழ்வியலில் தாய்மைக்கு அதிகம் முக்கியத்துவம் கொடுத்துவருகின்றனர். அன்பு, இரக்கம், பொறுமை என்பவற்றுக்கு தாயைப்போல இன்னொரு உறவை உருவகிக்க முடியாது. பூமியை 'பூமித்தாய்' எனவும், மொழியினைத் 'தாய்மொழி' எனவும் கடலினை 'அடல் அன்னை' என அழைப்பதும் தாய் மண்மீது கொண்ட அன்பின் பெருக்கினால் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். தாய்மீது கொண்ட அதே பாசத்தினைத் தாம் பிறந்த நாட்டின்மீதும், பேசும் மொழி மீதும் வைத்துப் போற்றுகின்றனர் என்பதும் இதன் மூலம் புலனாகிறது.

தாயிடமிருந்து பிறப்பெடுக்கும் குழந்தை எவ்வாறு தாயின் அரவணைப்பில் சுகம்கண்டு, தாய்ப்பாலில் பசியாறி பாசப்பிணைப்பில் உருகிவரும் உறவினைப்போல் இந்த மண்மீது பிறந்தவர்களும், மண்மீது தவழ்ந்து, நடைபயின்று, மண்விளையாடி மொழிபயின்று காணும் சுகத்தையும் இலகுவில் மறந்து விடமாட்டார்கள். தாய்மீது கண்ட சுகத்தை தாம்பிறந்த மண்மீதும் காண்கிறார்கள். தாய்மண்ணுக்கு வரும் அவலத்தைத் தாய்க்கு வரும் அவலமாகக் கருதுகிறார்கள். 'ஈழமாதா' எனத் தாயகத்தை அழைப்பதும் யாழ்அன்னை, மடுமாதா, திருமலைத்தாய், மன்னார் மாதா எனத் தாயக ஊர்களை அழைத்துக் கொள்வதும் அந்த மண்மீது கொண்டுள்ள பற்றினை உறுதிப்படுத்துவதாகும்.

தமக்கெனவொரு காணி அதனுள்வீடு, நீர் எடுக்கச் சிறுகிணறு, அதனருகில் வாழை, மா, பலா எனச் சில கனிதரும் மரங்கள். காணியின் எல்லையில் காவலராய் தென்னை, பனை எனச் சில பயன்தரு மரங்கள். நாய், பூனை என செல்லப்பிராணிகள். ஆடு, மாடு, கோழி எனப் பயன்தரவும் வேறும் பிராணிகள். எல்லையில் பூவரசு, சீமைக்கிழுவை மரங்கள். தென்னை பனை ஓலைகளாலும், மட்டைகளாலும் வரிசையாய் கட்டப்பட்ட அழகான வேலி, ஈழத் தமிழரின் வாழ்விடத்தை அடையாளப்படுத்தும் குறிகாட்டிகள்தாமிவை. பெண்ணுக்குத் தாலியும் வீட்டுக்கு வேலியும் பாதுகாப்புத்தரும் தாயக அடையாளங்கள்.

குடும்பங்கள் கலாசாரத்தின் விதைநிலமாகவும், கிராமங்கள் அவற்றின் விளைநிலமாகவும் இருந்து வருகின்றன. ஆசைக்கு அப்பா, அன்புக்கு அம்மா, செல்லச் சண்டைக்கு அண்ணன் , தங்கை, கதைசொல்ல தாத்தா பாட்டி என குடும்ப உறவுகளின் அன்புக்கும்

பண்புக்கும் வீட்டு வாழ்க்கையில் பஞ்சமில்லை.

அம்புலிகாட்டி விஞ்ஞானம் விளக்கும் தந்தை, நிலாக்காட்டி சோறூட்டும் தாய் , நிலவுகாட்டி கதை சொல்லும் தாத்தா பாட்டி, நிலவு பார்த்து உரிமை கேட்டு சண்டைபிடிக்கும் அண்ணன் தங்கை. இப்படி குடும்ப வாழ்வு தரும் சுகத்தை எந்த வாழ்வு தரும்? கோடுகள் கீறி கிளித்தட்டு விளையாடி, மரத்தில் ஏறி மாங்காய் பிடுங்கி, நிலத்தில் புரண்டு மண் விளையாடி களைத்துப் போவதும் இந்த குடும்ப வாழ்வில்தான். சயிக்கிளில் ஏறி சவாரி செய்வதும் குளத்தினில் நீந்தி மறுகரை தொடுவதும், வரம்பினில் ஓடிச் சறுக்கி விழுவதும் இந்தக் கிராம வாழ்வில்தான்.

ஆலடியில் பிள்ளையார், முச்சந்தியில் முருகன் என ஊரெல்லாம் கடவுளர்க்கு கோவில். கோவிற்பாட்டு ஊர்முழுக்க கேட்டு பக்தியின் வாசம் அங்கெல்லாம் பரவும். பக்தியும் காதலும் கூடிப்பிறந்தவை. கோவிலின் முகவரியில் இனிதாய் நிறைவேறும் அவற்றின் திருவிழா. மண்ணிலே புரண்டு பிரதட்சணை செய்து, தோளிலே சுமந்து காவடியாடி, தலையிலே சுமந்து பாற்குடம் காவி வேண்டுதல் செய்யும் பக்தர்கள் கூட்டம். மத்தளம் கொட்ட, மங்கையர் பவனிவர, வடம் பிடித்து வாலிபர் அழகாய் தேரிழுக்க ஊரெல்லாம் காணும் இறைவனின் முகவரியில் கிராமத்தின் திருவிழா. அழகழகாய் சேலைகட்டி கொலுசுதனைக் காலில் மாட்டி கைவீசும் பெண்களின் வளையல்கள் ஓசைதர, நெற்றியில் திலகமிட்டு பூமாலை தலைசூடி, நாணமாய் பெண்கள் நிலம் பார்த்து நடந்துவர கோவிலின் முகவரியில் இனிதாய் நிறைவேறும் இளமையின் இன்னொரு திருவிழா.

கடதாசிக் கண்ணாடி கலர் கலராய் ஊரைக்காட்ட பையினில் கடலையும், வாயினில் விசிலும் வடிவாய் ஊதி வீதியில் பவனிவர, காய்க்காத பழங்கள் வகை வகையாய் சுவையூட்ட கோவிலின் முகவரியில் இனிதாய் நிறைவேறும் சிறுவருக்கும் ஒரு பெருவிழா. கோவிற் பெருவெளியில் மணல்மீது கால்புதைத்து புழுதிப் படுக்கையை இருக்கைகளாக்கி முதிர்ந்த விரல்களால் கச்சானை உடைத்து அன்புப் பெருக்கினால் மச்சானென்று அழைத்து உண்டு பேசி மகிழ ஆலயப் பெருவெளியில் அரங்கேறும் முதியோர்க்கும் ஒரு திருவிழா.

இப்படித்தான் தாயக வாழ்வு வீடு, குடும்பம், கிராமம் என மகிழ்ந்து, விரிந்து செல்கிறது. குடும்ப உறவினர்கள் கிராமங்களில் நெருக்கமாக வாழ்கிறார்கள். குடும்ப நிகழ்வுகளில் யாவரும் கலந்து கொண்டு

சிறப்பிக்கிறார்கள். கிராம விழாக்களைப் பொதுவாக யாவரும் கலந்து சிறப்பிக்கிறார்கள். தாயக வாழ்வின் அமைதியான காலங்கள்தான் ஈழத்தமிழர்களின் வசந்தகாலம்.

இலங்கையில் தமிழர்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பரந்து வாழ்ந்து வருகின்றனர். இப்பிரதேசங்களை மரபுவழித் தாயகம் என்று உரிமை போற்றிவருகின்றனர். கொழும்பு உள்ளிட்ட மேல்மாகாணப் பகுதியில் தொழில், கல்வி மற்றும் பல்வேறு தேவைகள், நோக்கங்களுக்காகவும் அதிகளவில் வாழ்ந்து வருகின்றனர். மலையகப் பகுதியில் பெருமளவில் வாழும் தமிழர்கள் இந்திய வம்சாவழித் தமிழர்கள் என அழைக்கப்படுகின்றனர். பொதுவாக இலங்கையில் வாழ்ந்து வருகின்ற தமிழர்கள் மொழி, மதம், கலாசாரம் என்பவற்றால் ஒன்றிணைக்கப்பட்டவர்கள். இவ்வாறான வரலாற்றுப் பின்னணியில் இலங்கைத் தமிழர்களை பின்வரும் நிலத் தோற்ற அடிப்படையில் நோக்குவது பொருத்தமானதாக அமையும்.

(1) கடலும் கடல் சார்ந்த கரையோரப் பிரதேசம்
(2) வயலும் வயல் சார்ந்த சமவெளிப்பிரதேசம்
(3) மலையும் மலை சார்ந்த உயர்நிலப்பிரதேசம்

**கடலும் கடல் சார்ந்த பிரதேசமும்.**

சிலாபம், மன்னார், யாழ்ப்பாணம், தீவகம், காங்கேசன்துறை, பருத்தித்துறை, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை. என கடற்தொடு கோட்டு கரைப்பிரதேசங்களில் ஆரம்பத்தில் தமிழ்மக்கள் மீன்பிடித் தொழிலை ஆதாரமாகக் கொண்டு சிறப்பான வாழ்க்கையை அனுபவித்திருக்கின்றனர். மீன்பிடித்தல், கருவாடு உலர்த்தல், உப்பு எடுத்தல் ஆகிய தொழில்களில் ஈடுபட்டு வந்திருக்கின்றனர். இன்னும் சிலர் கடல் மார்க்கமாக வியாபாரத்திலும் ஈடுபட்டனர்.

கடல்களின் அலைகளை எதிர்த்துச் சென்று, உப்பங்காற்றினை சுவாசங்கொண்டு, கடும் காற்று மழையிலும் உடல் நனைந்து, ஆழக் கடலினில் வலைபுதைத்து பிடிக்கும் மீன்களை கரை சேர்த்து கூவி விற்றுப் பயன் பெறுவர்.

மீன்பிடித் தொழில் இலகுவானதாக இருக்கவில்லை. கடுங்காற்று,

மழை, வெயில் என அவர்கள் இயற்கையின் தடைகளுடன் போராட வேண்டியிருந்தது. கடற்பயணங்கள் ஆபத்தானவை. வீடுவந்து சேரும்வரை அவர் குடும்பத்தினர் துன்பங்களைத் தாங்கியவர்களாக வீடுகளில் இருந்தனர்.

இயற்கையுடன் இணைந்த இவர்களின் வாழ்வில் இன்பம், துன்பம் என்பவற்றை மாறிமாறி அனுபவித்தனர். கடல்மீது மீன்பிடிக்க படகோட்டிப் போனவர்கள் மீண்டு கரைசேரும்போது மீண்டும் ஒரு புதிய உதயம் தோன்றினாற்போல் கடற்கரை புதுப்பொலிவு பெறும். கடல் அலைகளின் பொங்கலோடு மக்களின் மன அலைகளின் ஆனந்தப் பொங்கலும் போட்டிபோடும். படகுகளின் மீன்களும் துள்ளியெழும் பல விழிமீன்களும் கதை பேசும். கணவனைக் கண்ட மனைவி, காதலனைக் கண்ட காதலி, தந்தையைக் கண்ட பிள்ளைகள், பிள்ளையைக் கண்ட தாய் என அனைத்து உறவுகளுக்கும் கடல் மீனவர் வரவு, புதிய உற்சாகத்தைக் கொடுக்கும்.

விதம் விதமான மீன்கள் கடற்கரையை அலங்கரிக்கும். பாரை, சூடை, விளை, திரளி, கொய் என வகை வகையான மீன்கள். நண்டு, இறால், திருக்கை, கணவாய் என இன்னும் பல தினிசுகள். மொத்த வியாபாரிகள், சில்லறை வியாபாரிகள் என அனைவரும் ஒன்றுகூடி கடற்கரையை அமர்க்களப் படுத்திக் கொண்டிருப்பர். ஏல விற்பனை, சில்லறை விற்பனை என்று பலவகையாக மீன்கள் கூவி விற்கப்பட்டுக் கொண்டிருக்கும். கடலினில் உடல் வருத்தி, மனம் ஒடுக்கி பெற்ற களைப்பையெல்லாம் கரை சேர்த்து மீன்விற்று பணம் கண்டு ஆற்றிக் கொள்வர். “வியர்வை காயும் முன்னே கூலியைக் கொடு” என்ற சீன தத்துவம் தொழிலாளர்களின் உரிமை தொடர்பானதாக கூறப்பட்டாலும் மீனவர் வாழ்க்கையில் அது நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. கடலில் பிடிக்கப்படும் மீன்களுக்கு கரையில் விலைபேசப்படுகின்றன. அந்த இடத்திலேயே பணமும் கைக்கு கிடைக்கிறது. உழைப்புக்கேற்ற ஊதியம் இவர்களுக்கு கிடைப்பதில்லை. அதிஷ்ரம் இருக்கும் வரை மீன்கள்படும். பிடிக்கப்படும் மீன்களின் அளவுக்கேற்பவே வருமானமும் அமைந்துவிடுகிறது.

வீதிகளின் அருகே மீன்விற்பனையில் ஈடுபடும் பெண்கள் தலையில் சுமந்து செல்லும் நடமாடும் மீன்வியாபாரிகள், சைக்கிளில் செல்லும்

பெட்டி மீன் வியாபாரிகள், உள்ளூர், வெளியூர்களுக்கு மீன்களை எடுத்துச் செல்லும் வாகன மீன்வியாபாரிகள் என பல தரப்பட்டவர்களும் கூடிக்கலைந்து, கூவிப்பேசி அவரவர் தொழில்களில் ஈடுபட்டுக் கொண்டிருப்பது பரபரப்பு, கலகலப்பு, துடிதுடிப்பு நிறைந்த மீனவர் வாழ்க்கைக் கோலத்தைப் படம் பிடித்துக் காட்டுவதுபோல் காலையின் கடற்கரை காட்சி தரும்.

கடல்சார்ந்த மக்களின் உணவுகளில் கடல் உணவுகள் அதிகம் இடம் பிடித்துக் கொண்டிருக்கின்றன.

> தலை வாழை இலைவிரித்து ஊர் அரிசிச் சோறு போட்டு, நண்டு ஒருகரை, மீன்வறுவல் மறுகரை, சூடை மீன்பொரியல் சுடுசோறு மேல் இருக்க, நெத்தலிமீன் சொதிவாசம் மூக்கைத் துளைத்தெடுக்க கைவைத்து ஒருபிடி குழைத்து வாயில்வைக்க கண் சிவந்து நீர் சொரியும். உறைப்பாக உண்ணும் மீனவன் எதிலும் விறைப்பாக இருப்பதற்கு உணவும் உரமிடுகின்றதன்றோ!

படகோட்டி உரம்பெற்ற கைகள், வலைவீசி முறுக்கேறிய தோள்கள். இடியோசை, அலையோசை தினங்கேட்டுப் பயம் மறந்த மனிதர். மீனவர்களின் உணவும், போராட்டம் செய்து உழைக்கும் தொழிலும் இவர்களை தைரியம் மிக்கவர்களாக எதற்கும் துணிந்தவர்களாக மாற்றியிருக்கிறது.

கடற்கரையின் பிற்பகல் காட்சி அனைவரையும் கவர்ந்து இழுப்பதாக அமைந்துவிடும். சூரியன் கடலில் மறைந்து போதல். ஆர்ப்பரிக்கும் அலைகள். கூட்டம் கூட்டமாக இருந்து கதையளக்கும் கன்னியர்கள். மண்மீது அமர்ந்து புரண்டு பொழுது போக்கும் ஆடவர்கள். கிட்டிப்புல்லு, கிளித்தட்டு என விளையாடும் சிறுவர்கள். பந்து விளையாடும் காளையர்கள். வேடிக்கை பார்க்கும் முதியவர்கள் என கடற்கரையின் மாலை நேரக் காட்சி விரிந்துசெல்லும். காலையில் தொழில் ரீதியாக சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் கடற்கரை மாலையில் பொழுதுபோக்கும் இடமாக மாறி அனைவரையும் மகிழ்ச்சிப்படுத்திக் கொண்டிருக்கும்.

தமிழர்கள் மிகச் செறிவாக வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் கடற்கரைகள் மிக அழகானவை. கிழக்கில் பாசிக் குடா, நிலாவெளி,

வடக்கில் காரைநகர், சாட்டி, கோவளம் ஆகிய கடற்கரைகள் ஆரம்பத்தில் உள்நாட்டு, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் விரும்பி வருமிடமாக இருந்தது. இவற்றைவிட மணல்காடு, கட்டைக்காடு, நாகர்கோவில், வெற்றிலைக்கேணி, முல்லைத்தீவு என வடக்கின் பல இடங்கள் சுற்றுலாக் கைத்தொழிலை விரிவாக்கக் கூடிய இடமாகவும் அடையாளங் காணப்பட்டிருந்தன.

கடலினை ஆதாரமாக வைத்து உப்பு உற்பத்திக் கைத்தொழில் இப்பகுதிகளில் சிறப்பாக நடைபெற்று வந்தது. ஆனையிறவு, பாலாவி, செம்மணி ஆகிய இடங்கள் உப்பு உற்பத்திக்கு பெயர் பெற்றவையாக விளங்கின.

தீவகம், மூதூர், மன்னார் போன்ற இடங்கள் கருவாடு உற்பத்திக்கு பெயர் பெற்றவை. இப்பகுதிகளில் உற்பத்தியாகும் கருவாடுகள் வெளியூர் சந்தைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

### வயலும் வயல் சார்ந்த சமவெளிப்பிரதேசமும்

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்து வாழ்பவர்கள் தமிழர்கள். ஈழத்தில் தமிழர்கள் வாழும் பகுதிகள் எங்கும் வயல் வெளிகள் பரந்து காணப்படுகின்றன. மற்றவர்களை தொழுதுண்டு வாழாமல் உழுதுண்டு வாழ்ந்த பண்பாளர்கள்.

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, வன்னி, கிளிநொச்சி, யாழ்பாணம் ஆகிய மாவட்டங்களில் நெல் உற்பத்தி அதிகளவில் இடம் பெற்றுவருகின்றது. யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் நெற் செய்கை இரண்டு போகங்களாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. விவசாயம், விசாலித்துக் காணப்படும் இடங்களில் வாழ்வோர் தமக்கு தேவையானவற்றை தாமே விளைவித்துப் பெற்றுக் கொண்டனர்.

ஏர்பிடித்து மண்ணுழுது கார்பார்த்து நெல்விதைத்து நீர்பாய்ச்ச வரம்புயர்த்தி ஏற்றங்காண உழைக்கும் விவசாயி. அவன் பயிரிடையே களை நீக்கி பக்குவமாய் உரமெறிந்து பாசத்துடன் அணைத்துக் கொள்ளும் பயிர்களும் உறவன்றோ!

விவசாயிகளின் வாழ்விடங்கள் வயற்கரைகளில் தூரம் தூரமாக

அமைந்திருந்தன. தனித்தமைந்த வீடுகளில் அவர்கள் வாழ்ந்து வந்தனர். விவசாயத்துக்கு உறுதுணையாக கால்நடைகளையும் வளர்த்து வந்தனர். நெல் அறுவடைக் காலங்களில் இப்பகுதிகளில் மக்கள் அதிகம் கூடுவார்கள். அறுவடை வேலைகளில் ஈடுபடுவதற்கு அதிகமான தொழிலாளர்கள் தேவைப்படுவதால் வீடுகள் அருகே தற்காலிக முகாம் அமைத்து தங்கியிருப்பர். இக்காலங்களில் ஆட்டம், பாட்டு என இன்பந்தரும் கலைகளிலும் ஈடுபட்டு அக்காலங்களை மகிழ்ச்சிக்குரியதாக அமைத்துக் கொள்வர்.

பரந்த வயல்களின் நடுவே கோவில்கள் அமைத்து வேளாண்மை சிறக்க நேர்த்திவைத்து வழிபடுவர். வேண்டுதல்கள் நிறைவேறும் போது பொங்கல், மடைபரவல், தானியம் வழங்கல் போன்ற வகைகளில் தமது நன்றிக் கடனைத் தீர்த்துக் கொள்வர். மேலும் கோவிலின் திருவிழாக் காலங்களில் விவசாயிகள் ஒன்றுகூடி பூசை வழிபாடுகள் செய்வதுடன் பல கலை நிகழ்வுகளிலும் ஈடுபடுவர். நாட்டார் கலைகள் தோன்றுவதும் அவை அரங்குகளுக்கு வருவதும் விவசாய மக்களிடையே அதிகளவில் இடம் பெற்றுவருவதும் குறிப்பிடத் தக்கவை.

மக்கள் விவசாயத்தில் அதிகளவில் ஈடுபட்டமையினால் தமிழ் மக்களின் சுயதேவை விவசாயம் தன்னிறைவு பெற்றிருந்தது. நெல்லுற்பத்தி அப்பிரதேச மக்களை போசிப்பதற்கு போதுமானதாக இருந்துள்ளது.

மரக்கறிச் செய்கையும் தமிழர் பகுதிகளில் மிகச் சிறந்த நிலையில் இருந்துள்ளது. யாழ்ப்பாண மண் தோட்டச் செய்கைக்கு உவப்பானதாக இருந்தமையால் பல விதமான மரக்கறிவகைகள் அதிகளவில் உற்பத்தி செய்யப்பட்டன.

பச்சைப்பசேல் என தோட்டங்களின் அழகான அணிவகுப்பு, வெள்ளைப்பாம்பு கல்லுக்கட்டியதாய் புடலங்காய், மத்தளம், மேளம் வைத்துக் கட்டியதாய் பூசினிக்காய். கன்னியர் காதில் தொங்கும் தூக்கணத் தோடுகள் போல் கத்தரிக்காய், பெண்களின் விரல்களைப்போல் வெண்டிக்காய் தேடிய செல்வங்களை மறைத்து வைத்து விட்டுத் தம்மிடம் ஒன்றும் இல்லை என கைவிரிக்கும் வேடதாரிகள் போல் வற்றாளை, இன்னும் கொடியினிலே பயற்றங்காய், பந்தலிலே பாவற்காய் என தோட்டங்களை மரக்கறிப் பயிர்கள் அழகுபடுத்திக் கொண்டிருக்கும். தோட்டங்கள் நடுவே கம்பீரமாய் நடந்துவரும் விவசாயி. தான் உழைத்து

உண்ணும் தன்மானம் அவனுக்கு வானம் ஏறி முழுநிலவைத் தொட்டவன்போல் மண்ணிலே நின்று உழைத்து வாழ்ந்தவன் மகிழ்ச்சிப்படுகிறான்.

பச்சைவயல் வெளியின் கன்னிப்பயிர்கள், காற்றின்தழுவல்களுக்கு கூச்சப்பட்டு உடலசைக்கும் நெல்லின் இளங்கதிர்கள், பகையடக்கப் புறப்படும் தாயக வீரனைப்போல் தலைநிமிர்ந்து நிற்கும். முற்றிய நெற்கதிர்கள், தாயக கற்புடை மகளிர்போல வெட்கப்பட்டு தலை குனிந்து நிலம் பார்க்கும். உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வதும் கற்புடை வாழ்க்கையை உயிர் எனக் கொள்வதும் தாயக வாழ்வு தரும் பெருஞ் சிறப்பன்றோ.

**மலையும் மலை சார்ந்த உயர்நிலப்பிரதேசமும்**

இலங்கைத்தீவின் மையத்தில் நிமிர்ந்து உயர்ந்து பரந்து காணப்படும் நிலப்பகுதி மலைநாடு என அழைக்கப்படுகிறது. நீர் வீழ்ச்சிகள், ஆறுகள், நீரோடைகள் என அழகு தரும் பூமியாக இப்பகுதியெங்கும் காட்சி தருகிறது. மலைநாடுபற்றி நண்பர் ஒருவரின் குறிப்பு பின்வருமாறு இருக்கிறது.

"நான் சுவிற்சர்லாந்துக்கு வந்து ஆக பத்து வருடங்களே கடந்திருக்கின்றன. இன்று நான் சுவீஸ் நாட்டின் தேசிய பிரசைகளில் ஒருவராகிவிட்டேன். நான் இந்நாட்டின் மிக்றோஸ் எனப்படும் பல்பொருள் விற்பனை நிலையத்துக்கு செல்லும் போதெல்லாம் சிலோன் தேயிலையை வாங்கிச் செல்கிறேன். என்னைப்போல இங்கு வாழும் வெள்ளை இனத்தவர்களும் அத் தேயிலையை விரும்பி வாங்குவதை நான் அவதானித்திருக்கிறேன். சிலோன் தேனீரைக் குடிக்கும் போதெல்லாம் அதனை உற்பத்தி செய்த தமிழர்களின் கண்ணீரே எனக்கு நினைவுக்கு வருகிறது. மெலிந்த உடல், குளிவிழுந்த கண்களுடனும் கடுங் குளிர் மழையிலும் கடினமாக உழைக்கும் அவர்களின் வேதனை மிகு வாழ்வு என்னை துன்பப்பட வைக்கிறது." இலங்கை நாட்டின் உயர்வுக்காக உழைக்கும் அத்தமிழர்கள் இலங்கையர் என்று கூட அழைக்கப்படாமல் இந்திய வம்சாவளிப் பிரசைகள் என வேறுபடுத்திப் பார்ப்பது நூறு ஆண்டுகளுக்கும் மேலாக அம் மண்ணில் வாழ்பவர்களை வேதனைப்படுத்திக் கொண்டிருக்கும் என்பதை இந்த பத்தாண்டுகால

சுவிஸ் பிரசையால் உணர்ந்து கொள்ள முடிகிறது.

மலையக தமிழர்கள் மிகக் கடினமான வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருக்கும் அதேவேளை உரிமைகள் மட்டுப்படுத்தப் பட்டவர்களாகவும் அவர்களின் உழைப்பு கௌரவிக்கப்படாமலும் தோட்டங்களில் வெறுமையாகவும் வறுமையாகவும் விடப்பட்டுள்ளனர் என்பதையே மேற்காட்டிய குறிப்பு புலப்படுத்துவதாக இருக்கிறது.

நுவரெலியா, மாத்தளை, கண்டி , இரத்தினபுரி, களுத்துறை, கேகாலை ஆகிய மாவட்டங்களில் தேயிலை , இறப்பர் உற்பத்திகளை அடிப்படையாகக் கொண்டு தமிழ்மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் வாழும் வீடு லயன்கள் எனப்படும் தொடர் குடியிருப்புத் தொகுதியாகும். வசதிகள் மிகக் குறைவான வீடுகளாகவே அவை காணப்படுகின்றன.

இம்மக்கள் வாழும் பிரதேசங்கள் கடுங்குளிரையும் அதிக மழை வீழ்ச்சியையும் கொண்டிருப்பதால் இவர்களின் வாழ்க்கை, இடர்பாடுகள் நிறைந்தனவாகக் காணப்படுகின்றது.

தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களில் தங்கள் குல தெய்வங்களுக்கு கோவில்கள் கட்டி வழிபடுகின்றனர். கோவில்களை மையமாக வைத்து நாட்டார் கலைகளை அழிந்துவிடாமல் பாதுகாத்துவருகின்றனர். காமன்கூத்து, அருச்சுனன் தபசு, போன்ற கூத்துக்கள் கோவில்களிலும் தோட்டங்களிலும் அதிகளவில் இன்றும் ஆடப்பட்டு வருகின்றன.

3

# கண்ணீர்ப் பயணம்

இலங்கையில் இன முரண்பாடுகள் கூர்மையடைந்த எண்பது களுக்குப் பின் தமிழர்கள் உலகின் பல நாடுகளுக்கும் அகதிகளாகச் சென்றனர். இந்த அகதிப் பயணங்கள் மிகவும் ஆபத்தானவை. பல நூற்றுக்கணக்கான உயிர்கள் இப்பயணங்களில் காவு கொள்ளப்பட்டன. இன்னும் பல பயணங்கள் சோதனைகளும் வேதனைகளும் மிக்கவை. இன்று புலம்பெயர் நாடுகளில் வாழும் பெற்றோர்களில் பெரும்பாலானவர்கள் இவ்வாறு கடினமான பயணம் செய்து வந்தவர்களாகவே இருப்பர். இவர்களே புலம் பெயர் தமிழர்களின்

முதலாவது தலைமுறையினராகவும் கருதப்படுகின்றனர். அடுத்த தலைமுறையினருக்கு ஈழத்தமிழர் வரலாறுகளையும் அகதிப் பயணங்களின் வேதனை மிகு சாதனைகளையும் ஊடு கடத்த வேண்டிய பொறுப்பு மிக்கவர்களாகவும் இருக்கின்றனர்.

**கண்ணீரப் பயணம்**

இன்று இரவு விமானம் ஏறப்போகிறோம் என்ற நற்செய்தி என் காதுகளுக்கு இனிமையைத் தந்தபோதும் என்னைப் பெற்ற தாய் தந்தையை எங்கோ தூரத்தில் விட்டுவிட்டு நான்மட்டும் இந்த மண்ணைவிட்டுப் பிரிந்து செல்லப் போகிறேன் என்ற பிரிவுத்துயர் என்னை மறுபுறத்தில் குத்தி வேதனைப்படுத்திக் கொண்டிருந்தது. துயரங்களிலெல்லாம் பெருந்துயர் தருவது பெற்றதாயையும் பிறந்த மண்ணையும் பிரிந்து செல்வதுதானே. விமானம் ஏறச் செல்லும் நேரம் நெருங்கிவர வர என் இதயமும் ஏனோ பலமாக அடிக்கத் தொடங்கியது. ஒரு தரம் ஒரே ஒரு தரம் என் தாய் தந்தையின் முகத்தைப் பார்த்துவிட்டுச் சென்றால் கொஞ்சம் மனசுக்கு ஆறுதலாக இருக்குமே. என்ன செய்வது அவர்கள் யாழ்ப்பாணத்தில் அல்லவா இருக்கிறார்கள். நேரமும் நெருங்கி விட்டது. பதற்றமும் ஒருபுறம். பயம் மறுபுறம். அவற்றுக்கிடையே பயணத்துக்கான ஆடை மாற்றும் பணியில் நான். நான் உயிருடன் போய்ச் சேர்ந்து விடுவேனா? எங்காவது பிடிபட்டு சிறையிருக்கப் போகிறேனா? பெற்றோரை இனிமேல் காண்பேனா? என்ற வினாக்கள் மீண்டும் மீண்டும் என்மனதில் எழுந்து கொண்டே இருந்தது. விடைகாண முடியாத வினாக்கள் எதிர்காலத்தில் நம்பிக்கையற்ற நினைவுகள். இவற்றுக்கிடையே கோழையாகிப் போனேன். உடலில் தைரியம் குறைந்து கொண்டு செல்வது போல் ஓர் உணர்வு. அந்தரத்தில் நடப்பது போல் ஓர் தவிப்பு. நேரமும் வந்துவிட்டது. ஏஜென்சியின் கார் நான் குடியிருந்த லொஜ்ஜின் வாசலருகே வந்து நிற்கிறது. ஆம் இந்த மண்ணில் நான் சுவாசித்த இருபத்திரண்டு வருட நினைவுகள் அந்தக் குறுகிய நேரத்துக்குள் வந்து செல்கிறது. காரைநோக்கி என் கால்கள் நகரத் தொடங்குகிறது. நினைவிருக்கும் சாமிகளையெல்லாம் உள்ளூர வழிபட்டு கூடவே தாயையும் நினைந்துருகி புதிய உறவுகளுக்கு கையசைத்து விடை கொடுத்துச் செல்கிறேன். நான் மட்டும் ஒரு பெண். என்னோடு மேலும் மூன்று ஆண்கள். நாங்கள் நான்குபேரும் நாலாதேசமும் நாயாய் அலையப்போகிறோம் என்று அப்போது எனக்குத் தெரியவில்லை.

கடவுள் விட்ட வழி எதுவோ அது நடக்கட்டும் என என்னை நானே தேற்றிக் கொண்டேன்.

வீதிகளில் மின் விளக்குகள் வெளிச்சத்தைக் கொடுத்தாலும் எங்கும் இரவுகளின் இருள் என் மனத்தைப்போல் பரந்து கிடக்கிறது. இடையிடையே சோதனைச் சாவடிகள். கொஞ்சம் பயந்தான் நெஞ்சு படபட என இடிக்கத்தான் செய்கிறது. ஏஜென்சி இறங்கிக் காரின் பின்னால் சென்று பச்சை மயில்தாளைக் கொடுக்க பயணம் இடைஞ்சல் இல்லாமல் தொடர்கிறது. பல மின் விளக்குகளால் வெளிச்சம் பாய்ச்சப்பட்டுக் கொண்டிருக்கும் விமான நிலையம் வந்துவிட்டது. அனேகமாக விமானத்தில் முதன்முதலாக ஏறப்போகிற நாளும் இன்றாகத்தான் இருக்க வேண்டும். முன்பு யாழ்ப்பாணத்தில் நான் இருந்தபோது முற்றத்தில் நின்று வானத்தில் பறந்த விமானத்தை அண்ணார்ந்து வியந்து பார்த்திருக்கிறேன். பின்னர் வானத்தில் வட்டமிட்டு குண்டுகளைப் போட்டபோது பங்கருக்குள் ஓடிஒளிந்து கொண்டிருக்கிறேன். ஆனால் இன்றுதான் அதற்குள் ஏறிப் பறக்கப் போகிறேன் என்ற அற்ப ஆசை அடிமனதில் இருந்தாலும் என் உறவுகளை விட்டுத் தொலைதூரம் செல்லப் போகிறேன் என்ற கொடுந்துயரம் என்னை வாட்டவும் செய்கிறது. விமானச் சீட்டு கடவுச்சீட்டு சோதனைகளுக்குப் பின் நாங்கள் மொஸ்கோ செல்லும் பயணிகள் அறையில் தங்க வைக்கப்படுகிறோம். அந்த அரைமணி நேரத்துக்குள் என் தாய்நாட்டைப்பற்றி பல நினைவுகள் கண்களைக் குளமாக்கத் தொடங்கி விட்டது. இந்த நாடு எவ்வளவு அழகானது. நாங்கள் யாவரும் ஒற்றுமையாய் இருந்தால் ஏன் இப்படி இந்த மண்ணைவிட்டுப் பிரிந்து செல்லவேண்டும். என் உறவுகளை ஆபத்தில் விட்டுவிட்டு நான்மட்டும் உயிர்பிளைக்கப் போவதுபோல் ஒரு குற்ற உணர்வு. யுத்தம் எல்லாவற்றையும் விழுங்கிவிட்டது. ஈழத்தாயே உன்னைவிட்டுப் பிரிந்து செல்லப் போகிறேன். மீண்டும் உன்னை வந்து பார்ப்பேனா? என்ற துயர்தோய்ந்த வினாக்களுடன் என்தாய்நாட்டு மண்ணிலிருந்து காலைத்தூக்கி விமானத்தில் வைக்கிறேன். முத்தமிட்ட அன்னையையும் பாசம் காட்டி மகிழ்வித்த தந்தையையும் குடியிருந்த வீட்டினையும் மண் விளையாடி மகிழ்ந்த நாட்களையும் மீண்டும் ஒருதரம் நினைவுகொண்டு தாயகத்திலிருந்து மேற்கிளம்பிப் பறக்கிறேன். செட்டை எனக்கில்லை. விமானத்துக்கு மட்டும்தான். ஆனாலும் பசுமையான சில நினைவுகளுடன் துயரங் கொண்ட பல உணர்வுகளுடன் காற்றிலும் வேகமாய் மனத்தால் பறக்கிறேன். கண்கள் மட்டும் கொஞ்சம் உப்புநீரை உற்பத்தி செய்து உறவுகளுக்காய் உதிர்ந்துவிட , இருளினை கிழித்து விண்ணில் மிதக்கும்

ஓடமாய் நாங்கள், பூமிப்பந்தின் மேல் தூக்கி எறியப்பட்டவர்கள் போல் அந்தரத்தில் நாங்கள். மண்ணின் வேர் அறுத்து வீசப்பட்டவர்கள் போல ஆகாயத்தில் சஞ்சரிக்கும் ஜந்துகள் நாங்கள். அந்தோ தொலைதூரத்தில் பூமித்தாயில் சிற்றொளிதரும் மின்விளக்குகள் மெல்ல மெல்ல கண்களைச் சிமிட்டிக் காட்சிதருகின்றன. ஓ அற்ப மனிதர்களே! இந்தப் பரந்த வெளியில் மண்ணில் நெழியும் புழுக்களாய் நீங்கள். உங்களுக்குத்தான் எத்தனை பேதங்கள். வேலிகள் போட்டுக் கோடுகள் கீறி வாழ்ந்து பிழைக்கும் அற்பர்கள் நீங்கள். சண்டைகள் போட்டு உயிர்களை மாய்க்கும் வேடர்கள் நீங்கள். அதோ நிமிர்ந்து பாருங்கள். உங்களுக்கு மேலே வானம் விரிந்து கிடக்கிறது. நிலவு அமைதி கொண்டு பொறுமை கொண்டு குளிர்ச்சி தந்து கனிந்து நிற்கிறது. எத்தனை கோடி விண்மீன்கள். பகைமையின்றி பேதமின்றி வானவெளியை அலங்கரித்துக் கொள்கின்றன. நிலவுக்குப் போகவும் வேறு கிரகத்துக்குச் செல்லவும் நீ ஏன் ஆய்வு செய்கிறாய்? உன் மனதுக்குள் இருக்கும் பேதங்களையும் பேராசைகளையும் அறுத்துவிட நீ என்ன செய்தாய்? உங்களுக்கு ஏன் சடலங்களின்மீது நடக்க ஆசை?

ஆகாய வெளியிற் பதின்நான்கு மணிநேர பறப்புக்களுக்குப் பின் பத்திரமாக சமதர்மக் கொள்கைகளை உலகுக்கு விளைவித்த ரஷ்யாவின் மொஸ்கோ வான்தளத்தின் மண்ணை முத்தமிட்டுக் கொள்ள வெள்ளை விமானம் தயாராகியது. எங்கள் மீது பூட்டப்பட்ட இடுப்பின் விலங்குகளைக் களைந்து அதர்மங்கள் மலிந்த பூமியின் மைந்தர்களாகிய நாங்கள் சமதர்ம பூமியில் கால்பதிக்கிறோம். மொஸ்கோ எங்களை அன்புடன் வரவேற்கிறது. எங்கோ ஒரு மூலையில் கருக்கொண்ட எங்கள் கறுப்புடலை இங்கே வெள்ளையுடல்கள் வரவேற்கின்றன. இந்த அற்ப மகிழ்ச்சியும் அதிக நேரம் நீடிக்கவில்லை. காலையில் கால் பதித்து இறங்கிய எங்களை மாலை வரையிலும் அழைத்துச் செல்ல யாரும் வரவில்லை. பயணம் செய்து வந்த உடற்களை ஒருபுறம். நினைந்துருகி வந்த மனக்கவலை மறுபுறம். அடுத்து என்ன நடக்கப்போகிறது என்பது தெரியாமல் யாருமற்ற அனாதைகளாய் ரசியாவிலும் ரசிப்பற்றவர்களாய் நாங்கள் அவதியுற்றோம்.

பிற்பகல் நான்கு மணி இருக்கும். அப்போதுதான் எங்கள் நான்கு பேருக்கும் நெஞ்சில் கொஞ்சம் ஈரம் வந்தது. ஏஜென்சியின் ஆட்கள் எங்களைக் கூட்டிச் செல்ல வந்திருக்கிறார்கள். அன்று மட்டுமல்ல அடுத்த நாள் வாழ்க்கையிலும் கொஞ்சம் நம்பிக்கை வந்துவிட்டது. அவர்கள்

வேகமாக நடக்கிறார்கள். நாங்கள் அவர்கள் பின்னே ஓடிக் கொண்டிருக்கிறோம். மொஸ்கோவில் நிலத்துக்குக் கீழேதான் தொடரூந்துகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. என் வாழ்வில் முதன் முதலாக மிக நீண்ட புகையிரதத்தைக் காண்கிறேன். அதன் இறுதிப் பெட்டியில்தான் நாங்கள் ஏறவேண்டும். தொடரூந்து புறப்பட இன்னும் ஐந்து நிமிடங்கள் மட்டும்தான் இருக்கிறது. இறுதியில் உள்ள பெட்டியை நோக்கி மீண்டும் வேகமாய் ஓடுகிறோம். மூச்சு வாங்குகிறது. ஓடி ஓடிக் கால்கள் ஓய்ந்து விட்டன. இன்றுமட்டும் அதிஷ்ரம். அந்த இறுதிப் பெட்டியின் இறுதிவரும்வரை ஓடித் தொற்றிக் கொண்டோம்.

றசியா ஒரு சமதர்ம நாடுமட்டுமல்ல. சந்தர்ப்பவாத நாடும்கூட. ஆசியாவுக்கு வாலைக்காட்டி ஐரோப்பாவுக்குத் தலையைக் காட்டும் எங்களூர் விலாங்கு மீனைப்போன்றவன். உலகில் மிகப் பெரிய நிலப்பரப்புள்ள நாடு. பெரும் சைபீரிய வெளியை மட்டும் ஆசியாவில் வைத்துவிட்டு கைத்தொழில் உற்பத்திகளையெல்லாம் ஐரோப்பாவில் செய்து கொண்டிருக்கிறான். உலகின் மிக நீண்ட தொடரூந்து ஓடுபாதை ரசியாவில் இருக்கிறது. இது ஐரோப்பா ஆசியா ஆகிய கண்டங்களுக்குக் குறுக்காக அமைக்கப்பட்டிருக்கிறது. தொடரூந்தும் ஓடிக் கொண்டே இருக்கிறது. எங்கள் பயணத்தைப் போல மிக நீண்டுதான் செல்கின்றது. சுமார் பத்து மணி நேர பயணத்தின் பின் நாங்கள் பத்திரமாக ஓரிடத்தில் இறக்கப்படுகிறோம். நாங்கள் பயணம் செய்து வந்தது இறுதிப் பெட்டியாக இருக்கலாம். ஆனால் அது பயணத்தின் இறுதியாக அமைந்துவிடவில்லை. இனிமேல்தான் எங்கள் பயணம் ஆரம்பிக்கப் போகிறது. கழிந்து சென்ற நாப்பத்தெட்டு மணிநேரமும் நாங்கள் கடந்து வந்தது வெறும் வான் பறப்பும் நிலப் பறப்பும் மனப் பறப்பும் மட்டும்தான். இனிமேல்தான் எங்கள் தடைதாண்டல் நாடுகாண் பயணங்கள் தொடங்கப் போகிறது என்பதை இந்தக் கன்னிப் பெண்ணால் தெரிந்து கொள்ள முடியவில்லை. சில மீற்றர் கால்நடைகளுக்குப் பின் அந்த இருட்டுக்கு வெளியே சிறிய நகரம் ஒன்று எங்கள் கண்களுக்குப்படுகிறது. மீண்டும் பேரூந்துப் பயணம். எங்கள் நாட்டிற்போல் இதில் போவது சங்கடமல்ல. (இ.போ.ச.) சொகுசுப் பேருந்துதான். சொகுசு என்னமோ பேரூந்துக்கு மட்டும்தான். நாங்கள் சருகுகளாகத்தானே பயணிக்கப் போகிறோம்.

றசியாவின் மொஸ்கோவிலிருந்து நேராகத் தெற்கு நோக்கிப் பயணம் செய்தால் கருங்கடலை அடையமுடியும். எங்கள் பயணத்தின் நோக்கம் கருங்கடலை அடைவதல்ல. முதலில் கருங்கடலை தென்

எல்லையாகக் கொண்ட உக்கிரெயின் நாட்டை அடைவது. பின்னர் கிழக்காகத் திரும்பி மேற்கு ஐரோப்பாவுக்குள் நுழைவது. இது என்னவோ எதிர்காலம் மீது நம்பிக்கை கொண்டவர்கள் கூறுவது. நாங்கள் ஒன்றும் அப்படி நம்பிக்கை கொள்ளவில்லை. இப்பொழுது என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை மட்டுந்தான் கூறக்கூடியவர்களாக இருக்கிறோம். கருங்கடலை ஆறு நாடுகள் எல்லைகளாகக் கொண்டிருக்கின்றன. அவற்றில் றசியாவும் உக்கிரேனும் தென் எல்லைகளாக அக் கடலினைக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. எங்கள் பேரூந்துப்பயணம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. எங்கு இறங்கப் போகிறோம்? யார் வந்து அழைத்துச் செல்லப் போகிறார்கள்? என்பது எங்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. எங்கோ ஒரு இடத்தில் பேரூந்தின் சாரதி இறக்கிவிடுவார் என்பதுமட்டும் தெரிந்திருந்தது. காடுகள், மலைகள், சமவெளிகள் என்பவற்றைக் கடந்து நாங்கள் பயணித்துக் கொண்டிருக்கிறோம். இரவு மெதுவாய் கலைந்துபோகும் நேரம் வந்து கொண்டிருக்கிறது. அதிகாலை மூன்று மணியிருக்கும் அந்தச் சொகுசு பேரூந்து காடுகளைப் பிரித்துச் சென்று வீதியில் நின்றது. அங்குதான் நாங்கள் இறக்கப்படப் போகிறோம் என்பது கூடத் தெரியவில்லை. இது என்ன மாயம்? பயணிகள் இருவர் எங்கள் கைகளைப் பிடித்து இழுத்துக் கீழே இறக்கினர். இது யார்? ஏஜென்சியின் ஆட்களா? இல்லைக் கடத்தல்காரர்களா? அவர்கள் மொழியும் விளங்கவில்லை. கைப்பாசைமட்டுந்தான். மொழிபுரியா மானிடர்கள். மிக வேகமாகக் காட்டுக்குள் எங்களை அழைத்துச் சென்றனர். அவர்கள் ஏஜென்சியின் ஆட்கள் என்பது பின்னர்தான் தெரிய வந்தது. சிறிதுதூரம் சென்றபின் எங்களை அந்தக் காட்டுக்குள் பதுங்கி இருக்கும்படி சொல்கிறார்கள் என்பதை அவர்களின் கைப்பாசைகளில் இருந்து புரிந்து கொள்ள முடிந்தது. நாங்கள் நால்வரும் காட்டின் பற்றைக்குள் ஒளிந்திருக்க மரங்களின் இலைகுழைகளைப் பிடுங்கி எங்கள் மேல் போட்டு மேலும் மறைப்புச் செய்துவிட்டு நாளை இரவு வருவதாகக் கூறிச் செல்கின்றனர். அன்று பகல் மட்டுமல்ல இரவு முழுவதும் பதுங்கியே இருந்தோம். உண்பதற்கு உணவில்லை. குடிப்பதற்கு நீரில்லை. கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போல இல்லை இல்லைக் காட்டில் விட்டே விட்டார்கள். இந்தப் பூமியில் நாம் எங்கிருக்கிறோம்? இந்தக் காடுகளுக்குள் எங்கள் வாழ்க்கை முடியப்போகிறதா? என்ற மரணபயம் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. ஒரு நாளல்ல இரண்டு இரவுப் பொழுதையும் இரண்டு பகற் பொழுதுகளையும் முழுமையாகக் காட்டில்

கழிக்கவேண்டியதாயிற்று. பயணக்களை மட்டுமல்ல பசிதாகம் என்பவற்றோடு குளிர் வெயில் என்பவற்றையும் தாங்கிக் கொள்ள வேண்டியிருந்தது. சிறுமழை கண்டு வானத்தைப்பார்த்து வாய்களைத் திறந்திருந்தோம். ஒரு சில துளிகள் மட்டும் இந்தப் பாவியருக்கு வானம் அர்ப்பணித்துச் சென்றுவிட்டது. அகன்ற காட்டின் இருண்ட இருளின் வானத்து நிலவு எனக்கொரு சேதியைச் சொன்னது. இந்தப் பரந்த காட்டுக்குள் இருந்து நான் காணும் இந்த நிலவைத்தான் யாழ்ப்பாணத்திலுள்ள என்தாயும் காண்பாள் என்பது எனக்கோர் ஆறுதல். அந்த நிலவைக் காண்பது என்தாயைக் காண்பதுபோல ஓர் உணர்வைத் தந்தது. இந்த இரண்டுநாள் காட்டு வாழ்க்கையில் நாம் பதுங்கியிருந்த இடத்துக்கு வந்த திருடர்கள் நாம் வைத்திருந்த பொருட்களைச் சூறையாடிச் சென்றனர். நாம் ஒளிந்து மறைந்திருந்த இடம் யாருக்குத் தெரியும்? எப்படித் தெரியும்? எல்லாம் ஏஜென்சியின் ஆட்களின் நாடகம் என்பதை எங்களால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

சில நாடுகள் பிளவுபட்டால் அவை எழுச்சிபெற்றுவிடும் என்பதற்காக அந்நிய நாடுகள் பிரிவினைக்கெதிராக குரல் கொடுக்கின்றன. வேறு சில நாடுகள் ஒன்றாக இருப்பதால் அவை வளர்ச்சி பெற்றுவிடும் என்பதற்காக அந் நாடுகளின் பிரிவினைகளுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கின்றன. இதுதான் உலக ஜனநாயகம். இப்படித்தான் இந்த ரசியாவும் ஒரு காலத்தில் சோவியத் ஒன்றியம் என்ற பெயரில் உச்சத்தில் இருந்தது. நிலவுக்கு செய்கோளை அனுப்பிய சாதனைகாரர்கள் விஞ்ஞானம் பொருளாதாரம் இராணுவபலம் என்பவற்றில் முன்னிலையில் இருந்தார்கள். இதனை விரும்பாத அந்நிய சக்திகள் சோவியத்தொன்றியம் என்ற மாபெரும் கோட்டையை சூழ்ச்சிகளால் உடைத்து குட்டிச் சுவராக்கினர். இந்த உடைவுகளுக்குப் பின்பே இங்குள்ளவர்களில் பலர் கடத்தல்காரர்கள், திருடர்கள், வழிப்பறிக் கொள்ளைக் காரர்களாக மாற்றம் பெற்றிருக்கின்றனர். அப்படி உருவானவர்கள்தான் இந்தக் காட்டுவாசிகளின் பொருட்களைப் பறித்துச் சென்றனர் என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது.

இருநாள் வனவாசத்தின்பின் மறுநாள் இரவு வருவதாகச் சொன்ன ஏஜென்சி ஆட்கள் இருநாட்கள் கழித்து வந்தார்கள். கடும் இரவு. அந்த இருளுக்குள் மற்றவர் முகங்கூடத் தெரியவில்லை. யாவரும் கைகளைப் பிடித்துக்கொண்டு காட்டில் இருட்டுக்குள் நடக்கத் தொடங்கினோம்.

காட்டு மரங்களின் இலை தழைகள் முகத்திலடிக்க அவதிப்பட்டு அவசரப்பட்டு காரிருளில் கானகத்திலும் அகதிப்பயணம் தொடர்கின்றது. அடுத்து செங்குத்தான மலைமீது ஏறவேண்டும். மரவேர்களையும் இலை தடிகளையும் பிடித்து மலை ஏற்றம். மற்றப்பக்கம் பள்ளத்தாக்கு இங்கு குத்தாக இறங்க வேண்டும். இங்கே விழலாம், புரளலாம், முடிந்தால் எழுந்து நடக்கலாம். ஆறுகளைக் கடக்க வேண்டும். ஒருவர் கையைப் பிடித்து ஒருவராக ஆற்றுக்குள் இறங்கி நடந்தோம். கழுத்தளவு தண்ணீர் ஆற்றுநீர் அடித்துச் செல்லுமோ எனப் பயமாக இருந்தது. அப்படியாவது இந்த உயிர் போய்விட்டால் பரவாயில்லை என்றும் இருந்தது. ஈர ஆடைகளை உலர்த்தவும் முடியவில்லை. இப்பொழுது நாம் ரசியாவைக் கடந்து உக்கிரேன் நாட்டுக்கு வந்துவிட்டோம். உக்ரேன் நாடு முன்பு சோவியத் ஒன்றியத்தில் இருந்தது. பின்னர் பிளவுபட்டபோது இந்நாடு தனிநாடாக உருவாகியது குறிப்பிடத்தக்கது. அந்த இரவுகளில் மேலும் நாங்கள் தொடர்ந்தும் நடந்து ஏஜென்சியர்களால் குறிக்கப்பட்ட தமிழரின் வீட்டைச் சென்றடைந்தோம். ஒரு வாரத்துக்கும் மேலாக நல்ல உணவு கிடைக்கவில்லை. குளிக்கவோ ஆடைகள் மாற்றிக்கொள்ளவோ முடியவில்லை. இந்த தமிழரின் வீட்டில்தான் நாங்கள் நன்றாகச் சாப்பிட்டுக் கொள்ளவும் குளித்துக் களைப்பாறிக் கொள்ளவும் முடிந்தது. கடந்துபோன ஒரு கிழமையாக இந்தவுலகில் இருந்து நாங்கள் துண்டிக்கப்பட்டவர்கள் போல காடுகளிலும் மலைகளிலும் அலைந்து திரிகிறோம். பசியாலும் களைப்பாலும் வாடிப் போயிருக்கிறோம். ஆனாலும் எங்கள் பயணம் இத்துடன் முடிந்துவிடப் போவதில்லை. ஒரு கிழமை இந்த வீட்டில் தங்கியிருக்கப்போகிறோம்.

ஒரு வார ஓய்வுக்குப் பின்னர் எங்கள் பயணம் மீண்டும் ஆரம்பிக்கின்ற நேரம் வந்துவிட்டது. ஆனால் இந்தப்பயணம் சற்று வித்தியாசமானது. எங்களுடன் மேலும் புதிய அகதிப் பயணிகளாக பதினேழுபேர் சிற்றூர்தியொன்றில் ஆடுமாடுகள் போல ஏற்றப்பட்டோம். இரவிரவாக இரகசியம் செய்து விடியும்நேரம் எங்களைக் காட்டினில் விட்டுவிட்டு மறைந்து விடுவார்கள். பின்னர் இரவுகளில் வந்து காடுகளுக்கூடாக நடத்திச் செல்வார்கள். ஒருநாள் காலையில் எங்களை அவ்வூரின் சுதேசிய கிராமவாசிகள் கண்டு பொலிசாருக்குத் தகவல் கொடுத்துவிட்டனர். சற்றுநேரத்தில் பயங்கரவாதிகளைப் பிடிப்பவர்கள் போல சுற்றிவளைத்து கைவிலங்குகள் மாட்டி அவர்களின் வாகனத்திலேற்றி சிறைச்சாலையொன்றில் தடுத்துவைத்தனர்.

மிருகங்களுக்கு அவித்து வைக்கும் குதிரைவாற்கஞ்சி, ரின்மீன், பாண் என்பன உணவாக வழங்கப்பட்டது. நான்கு நாட்கள் எங்களுக்கு இந்தத் தடுப்புக்காவல் முடிய உக்ரேன் நாட்டுப் பொலிசார் எங்களை வெளியே செல்ல அனுமதித்தார்கள். நாங்கள் எங்கே போவோம். யாரைத் தெரியும். மொழிபுரியாத நாட்டில் நாங்கள் ஊமைகளாய் அலையவேண்டிய அவலம் ஏற்பட்டு விட்டது. அதிஷ்டவசமாக எங்களுடன் வந்த ஒருவர் ஏஜென்சி ஆட்களுடன் தொலைபேசி மூலமாக தொடர்புகொண்டு நாங்கள் இனி எங்கே செல்ல வேண்டும் என்று கேட்டுத் தெரிந்து கொண்டோம். அவர் குறிப்பிட்ட குறிப்புக்களை வைத்து தொடரூந்து நிலையமொன்றுக்குச் சென்று பயணச்சீட்டுக்களைப் பெற்றுக் கொண்டோம். ஆனால் எந்தப் பக்கம் போகவேண்டும் எந்தத் தொடரூந்தில் ஏறவேண்டும் என்பவை எமக்குத் தெரிந்திருக்கவில்லை. அங்கு நின்றவர்களிடம் பயணச்சீட்டைக் காட்டிக் கைப்பாசை மூலமாக எப்படிப் போவது எனக் கேட்டுத் தெரிந்து கொண்டோம். இது ஒரு நாள் பயணமாக அமைந்துவிட்டது. மறுநாள் காலை தொடரூந்தால் இறங்கியபோது வேறுஆட்கள் வந்து எங்களைப் பிடித்து வைத்திருந்தார்கள். அவர்களில் தமிழர் இருவரும் இருந்தார்கள். எங்களை வைத்துக்கொண்டு எமது ஏஜென்சியுடன் அவர்கள் தொடர்புகொண்டு பணம்கேட்டுப் பிரச்சினைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். பணம் தராவிட்டால் இவர்களை விடமாட்டோம் எனவும் எச்சரித்துக் கொண்டிருந்தனர். நாங்கள் எங்களிடமிருந்த பணத்தை அவர்களிடம் கொடுத்துவிட்டு மீண்டும் எமது பயணத்தை சிற்றூர்தியொன்றில் தொடர்ந்தோம். மக்கள் நெருக்கமாக வாழாத கிராமம் ஒன்றில் மனிதர் பாவிக்காத வீட்டில் மூன்று நாட்கள் தங்கியிருந்தோம். இப்பொழுது நாம் தங்கியிருக்கும் இடம் போலாந்து என்பதனைத் தெரிந்து கொண்டோம்.

ஒவ்வொரு நாடுகளின் எல்லைகளைக் கடந்து செல்வதுதான் எமக்கு பெருஞ் சவாலாக இருந்தது. அவற்றைக் கடப்பதற்கு இரவுகள்தான் பொருத்தமாக இருந்தது. பகலில் பாழடைந்த வீடுகளிலும் காடுகளிலும் மறைந்திருந்து இராக்காலங்களில் எங்கள் பயணங்கள் தொடங்கப்படும். போலாந்து முன்பு சோசலிச கொள்கைகளைப் பின்பற்றிய நாடாகவும் சோவியத்தொன்றியத்தின் நட்பு நாடாகவுமிருந்தது. சோவியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் முதலாளித்துவ கொள்கைகளை நோக்கி நகரத்தொடங்கியிருக்கிறது. இந்த நாட்டிலும் எங்கள் நாட்டினைப்போல் வேலையில்லாப் பிரச்சினை, வறுமை என்பன தலைதூக்கியிருக்கின்றன

என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மீண்டும் எமது இரவு நடைப்பயணம் ஆரம்பமாகிறது. கொடிய இருளிலும் கால்கடுக்க நடந்து காட்டினில் நாள் முழுவதுமாக மறைந்திருந்தோம். மறுநாள் இரவு போலந்தின் எல்லையைத் தாண்டி ஜேர்மனிக்குள் நுழைவது எமது திட்டமாக இருந்தது. ஜேர்மனிக்குள் நுழைந்துவிட்டால் எமது பயணத்தின் இலக்கை அடைவது சுலபமாக இருக்கும். அதனால் மிக அவதானமாக மறுநாள் விடியற்காலை எல்லையின் பெரிய வீதியொன்றைக் கடக்கிறோம். ஆமாம் இப்பொழுது ஜேர்மன் நாட்டுக்கு வந்துவிட்டோம். எமது பயணம் வெற்றியாக அமைந்துவிடுகிறது என்ற திருப்தி மகிழ்ச்சியெல்லாம் எம்மை மெய் சிலிர்க்க வைக்கிறது. உலக சாதனை நிலைநாட்டியதுபோல் ஒரு உணர்வுதான் ஆனால் இந்த மகிழ்ச்சி கொஞ்ச நேரம் மட்டுந்தான் நீடித்தது. ஜேர்மன் பொலிஸ் எங்களைக் கண்டு கொள்கிறது. சாதனை வீரர்களாக நாங்கள் சோதனைக்குரியவர்களாகக் கைது செய்யப்படுகிறோம். இந்தப் பொலிசார் இரக்கமுடையவர்களாக இருந்தார்கள். எங்களுக்குத் தேவையான உணவுகளையும் குளிப்பதற்கான வசதிகளையும் செய்து தந்தார்கள். மூன்று நாட்களாக எங்களைத் தடுத்து வைத்து விசாரித்தார்கள். நாங்கள் போலந்து நாட்டால் வந்தவர்கள் என்பதை அறிந்து மீண்டும் போலந்திற்குத் திருப்பி அனுப்பிவிட்டார்கள். போலந்து நாட்டில் ஏஜென்சியால் ஒழுங்கு செய்யப்பட்ட வெள்ளையினப் பெண்மணி ஒருவரின் வீட்டில் சில நாட்கள் ஒளித்திருந்தோம். அந்தப் பெண்மணி எங்களை மேல் அறையொன்றினுள் வைத்துப் பூட்டி விட்டார். ஏதாவது தேவையென்றால் கதவை மெதுவாகத் தட்ட வேண்டும் என்றும் கட்டளையிட்டிருந்தார். பசி எங்களை வாட்டத் தொடங்கிவிட்டது. எங்களுடன் வயதான முதியவர் ஒருவரும் இருந்தார். நான் மெதுவாகக் கதவைத் தட்டி அந்தப் பெண்மணியை அழைத்தேன். வயிற்றையும் வாயையும் தொட்டுக் காட்டி எனக்குப் பசி என்பதை அவருக்குச் செய்கையில் உணர்த்தினேன். அவரும் அதனை உணர்ந்து கொண்டவர்போல் தங்களுக்கும் சாப்பாடில்லை. தாம் கஷ்ரப்பட்டவர்கள் என்பதனை எனக்குப் புரிய வைத்தார். இருப்பினும் சோளப்பொரியும் பாண்துண்டொன்றும் தந்தார். அதனை நான் மட்டும் எப்படி உண்ண முடியும்? மேலே எடுத்துச் சென்று எல்லோரும் பகிர்ந்து உண்டோம். யானைப் பசிக்கு சோளப் பொரியல்ல. இது மரணப்பசிக்கு சோளப்பொரி. ஊரில் இருந்த காலங்களில் அம்மா உணவை வைத்துக் கொண்டு என்னை

எத்தனை முறை கலைத்துக் கலைத்து ஊட்டியிருப்பார். அப்போதெல்லாம் சாப்பாட்டைப் பற்றி எனக்கு அக்கறையில்லை. இப்போது உணவின்றி உயிர்பிரியும் நேரம் வருகின்ற வேளையில்தான் அம்மாவின் பால்பிட்டு, இடியப்பம், தோசை என நினைக்க நினைக்க ஆசையாய் வருகிறது. தாய் நாட்டில் எம் வாழ்வுக்கு உத்தரவாதம் இருந்தால் ஏன் இந்தக் காடுகளிலும் மலைகளிலும் அலைந்து திரியவேண்டும். உணவுக்காக இன்னொரு வருடன் ஏன்தான் கையேந்த வேண்டும். இப்படி இழிவுபட்டு வாழ்வதை விட உயிர்பிரிந்து வீழ்வது மேன்மையல்லவா? உண்மைதான் இங்கு நான் இறந்து போனால் எனக்கு மட்டும் விடுதலை. ஆனால் என் சோதரர்கள் தாயகத்தில் எப்படி வாழ்வார்கள்? அவர்களின் உயிர் வாழ்வுக்கு யார் உத்தரவாதம்? நான் தப்பிப் பிழைத்து உயிர் வாழ்ந்துவிட்டால் அவர்களை மீட்கலாமல்லவா? அதனால் இந்தச் சோளப் பொரிகளை வயிற்றில் தள்ளி உயிரைக் கையில் பிடித்திருக்கிறேன்.

போலாந்துப் பெண்மணியின் வீட்டிலிருந்து இரவு பயணம் ஆரம்பிக்க இருக்கிறது. ஏஜென்சியாட்கள் வந்து எமக்குச் சாப்பிடுவதற்குப் பாண், ஜாம் என்பன தந்தார்கள். பின்னர் ஒரு காரில் ஏற்றி எங்களை மீண்டும் இரவோடிரவாக ஜேர்மன் நோக்கிக் கொண்டு போகின்றார்கள். விடியும் நேரம் வரும்போது எங்களைக் காட்டுக்கரையில் விட்டுவிட்டுப் போய்விட்டார்கள். நாங்கள் சிறிது தூரம் நடந்து சென்று கொண்டிருந்தபோது ஜேர்மனியப் பொலிசார் மீண்டும் எங்களைக் கைதுசெய்துவிட்டார்கள். என்ன செய்வது எமது பயணம் நாட்கணக்காகி கிழமையாகி மாதங்களாக மாறிக் கொண்டிருக்கிறது. பயணங்கள் முடிவதாக இல்லை. கஷ்டம்மேல் கஷ்டங்களாக வந்து எம்மை அமுக்கிக் கொண்டேயிருக்கிறது. சிறையில் இருந்தோம். இந்த நாட்டுப் பொலிசார் கண்ணியமாகவே நடந்து கொண்டார்கள். எங்கள்மீது இரக்கப் பட்டார்கள். ஆனாலும் சட்டங்களைச் சரியாகக் கடைப்பிடிக்கிறார்கள். சட்டம் எதைச் சொல்லுகிறதோ அதைத்தான் செய்வார்கள். எங்கள் நாட்டைப்போல இங்கே பச்சை மயில் தாள் அல்ல. எந்தத் தாளும் வேலை செய்யாது. இவ்வளவு கடினமாக பயணம் செய்து இங்கு வந்திருக்கிறோம். இனி என்ன நடக்குமோ? திரும்பவும் போலாந்துக்கு அனுப்பி விடுவார்களா? இல்லை மாதக்கணக்காகச் சிறையில் வைத்திருக்கப் போகிறார்களா? எதுவும் தெரியவில்லை. சிறையில் எமக்குத் தருகின்ற உணவுகள் எமக்குப் பழக்கமில்லாதவை. விருப்பம் இல்லாதவை. என்ன

செய்வது? உண்டுதானே ஆகவேண்டும். ஊர் அரிசிச்சோற்றையும் முருங்கைக்காயையும் நினைத்தால் இவர்களின் உணவுகள் எந்த மூலைக்கு? என்ன செய்வது இப்போ எங்களுக்கு ருசியான சாப்பாடா முக்கியம். இந்த உடலில் இருந்து உயிர் பிரியாமலிருக்க எந்த இலைகளையும் குழைகளையும் உண்பதற்கு தயாராகவே இருக்கிறோம். அதிகமாகச் சிறையில் இவற்றைத்தானே சாப்பிடுகிறோம். எங்களின் எதிர்காலம் மீது எங்களுக்கு நம்பிக்கையில்லை. எல்லாம் அவன் செயல். கூடவே வெள்ளையின் கையிலும் இருக்கிறது.

சிறையிருந்த நான்காம் நாள் கொஞ்சம் அதிஷ்டம் எம் பக்கம் இருந்திருக்க வேண்டும். சிறையிலிருந்துவிடுவித்து வெளியே விட்டார்கள். இப்பொழுது ஜேர்மனியில் நாங்கள் ஓரளவு சுதந்திரமாக நிற்கலாம் என்பது மகிழ்ச்சியாகவே இருந்தது. ஆனாலும் ஏஜென்சியாட்களின் தொடர்புகள் எதுவுமில்லை. நாங்கள் அடுத்து எங்குபோவது? எப்படிப் போவது? பணத்துக்கு என்ன செய்வது? ஏக்கமான நிலையில் அந்த வீதியில் எங்காவது கடைகள் தெரிகிறதா எனப் பார்த்து நடக்கிறோம். இனிமேல் காடுகளுக்குள் ஒளிக்கத் தேவையில்லை. மலைகளையும் பள்ளத்தாக்கு களையும் கடக்கத் தேவையில்லை. இப்போது நாம் சென்று கொண்டிருக்கின்ற பாதை மக்கள் நடமாட்டம் குறைவானதுதான். எங்காவது தொலைபேசி வசதி இருந்தால் ஏஜென்சியாட்களுடன் தொடர்பு கொண்டு அடுத்த பயணத்தைப் பற்றி முடிவெடுக்கலாம். சிலவீடுகள் தெரிகிறது. தூரத்தில் சிறிய உணவுவிடுதி ஒன்று தெரிவது போல் இருக்கிறது. ஆம் அது சிற்றுண்டிச்சாலை ஒன்றுதான். அதன் உரிமையாளர் ஒரு பெண்மணியாக இருந்தார். அவரிடம் தொலைபேசி உதவி கேட்டோம். நல்ல பெண்மணி. உதவி செய்தார். ரெலிபோன் மூலமாக ஏஜென்சியுடன் தொடர்பு கொண்டோம். எங்களை எங்கு நிற்கிறீர்கள் எனக் கேட்டார். பூமியில் ஏதோ ஒரு புள்ளியில் நாம் நிற்பது மட்டும்தான் எங்களுக்குத் தெரியும். ஊரென்ன? பெயரென்ன? வீதியென்ன? எதுவும் தெரியாது. மொழிகளும் புரியாது. எப்படிப் புரிய வைப்பது. அந்தக் கடைக்காரப் பெண்மணி போனை வாங்கித் தானே நாம் இருக்குமிடத்தை ஏஜென்சி ஆட்களுக்குத் தெரியப்படுத்தினார். பின்னர் நாமிருக்கும் இடத்துக்கு ரக்ஸி அனுப்பி வைப்பதாகவும் அதில் வரும்படியும் எங்களுக்குச் சொன்னார். அவர்களின் வரவுக்காக நாங்கள் காத்திருந்தோம். நேரம் சென்றுகொண்டேயிருக்கிறது. யாரும் வரவில்லை. ஆனால் பசிமட்டும் எமக்கு வந்து கொண்டே இருந்தது. நாம்

அதிகநேரம் வீதியில் நிற்கிறோம் என்பதைப் புரிந்து கொண்ட கடைக்காரப் பெண்மணி தனது கடையில் இருப்பதற்கு இடந்தந்தார். அது சாப்பாட்டுக் கடைதான். உணவுகளைக் கண்ணால் பார்க்க மட்டும் முடிகிறது. அதை வாங்கத்தான் பணம் இல்லையே.

கடையின் நிலத்திலிருந்த சில்லறை நாணயம் ஒன்று எம்மோடிருந்த ஒருவரின் கண்ணில் பட்டுவிட்டது. அது என்ன பணம்? அதன் பெறுமதி என்ன? என்பதும் எமக்குத் தெரியவில்லை. எமது ஊரில் என்றால் ஒரு பல்லி முட்டை இனிப்பு வாங்கக் காணும் என நினைக்கிறேன். அந்தச் சில்லறைக் காசை எடுத்து தயக்கத்துடன் கடைப் பெண்மணியிடம் ஏதாவது உண்ணத் தரும்படி கேட்டோம். ஆச்சரியம்தான் ஆனால் உண்மை. நான்கு பேருக்கும் போதுமான பாண், பணிஸ் என்பவற்றைத் தந்து மிகுதியாக ஒரு சில்லறை நாணயத்தையும் தந்தார். ஒருவாறு எமக்கிருந்த சில்லறைப் பசியைப் போக்கிக் கொண்டோம். பசி கொஞ்சம் எம்மைவிட்டுப் போனாலும் நாம் போகும் வழி எதுவும் தெரியவில்லை. எம்மை அழைத்துச் செல்ல வேண்டியவர் இன்னும் வரவில்லை. காலை மதியமாகி மதியம் பிற்பகலாகி இரவும் வருகின்ற நேரமாகிக் கொண்டிருந்தது. மிகுதியாக இருந்த ஒரு சில்லறை நாணயத்தைக் காட்டி எங்களுக்கு ரீ கிடைக்குமா? எனக் கடைப் பெண்ணிடம் கையசைவுகள் மூலமாகக் கேட்டோம். அப்படிக் கேட்பதற்குத் தயக்கமாகவும் வெட்கமாகவும் இருந்தது. நாம் வெட்கத்தை விட்டுப் பல நாட்களாகிவிட்டது. இருந்தாலும் அடிமனதில் கொஞ்சம் இருக்கவும் செய்கிறது. அந் நாணயத்தை வாங்கிக் கொண்டு எங்கள் நாலுபேருக்கும் தேநீர் தந்தார். இந்த வெள்ளையினப் பெண்மணியின் நாகரிகத்தையும் நாணயத்தையும் எங்களால் என்றும் மறந்துவிட முடியாது. பஞ்சப்பரதேசிகள் போல காட்சியளித்த எங்களை மனிதராய் மதித்து அன்புகாட்டி உதவி செய்த பெண்மணியின் மானிட தர்மம் எங்களைச் சிந்திக்க வைத்துவிட்டது. வெள்ளைத் தோலானாலும் கறுப்புத் தோலானாலும் உள்ளே ஓடுவது சிவப்பு நிற இரத்தந்தானே. எத்தனை வேறுபாடுகள் உள்ள மண்ணிலிருந்து நாங்கள் வந்திருக்கிறோம். மனிதப் பண்புகள் யாரிடமிருந்தாலும் அதனைக் கற்றுக் கொள்வதில் தவறில்லை. வெள்ளையரிடம் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் நிறையவே இருக்கிறது. தேநீர் குடித்து முடிய கடையருகில் ஒரு வாடகைக்கார் வந்து நின்றது. இதில்தான் நாம் எடுத்துச் செல்லப்படப் போகிறோம் என்பதை நினைக்க மகிழ்ச்சியாக இருந்தது. கடைக்காரப் பெண்மணிக்கு நன்றி

சொல்லிக் கையசைத்து விடை பெற்றுப் போகிறோம்.

இரவு பத்துமணியிருக்கும் ஒரு வீட்டின் முன்னால் எம்மைக் கொண்டு வந்த வண்டி நிறுத்தப்படுகிறது. வண்டியின் கதவு திறக்கப்படும் அதே வேளை வீட்டின் கதவும் திறக்கப்படுகிறது. வணக்கம் வாருங்கள். ஆமாம் யாழ்ப்பாணத் தமிழில் நாம் அழைக்கப்பட்டு வரவேற்கப் படுகிறோம். என்ன ஆச்சரியம் சொர்க்கத்தில் நிற்பதுபோல் ஓர் உணர்வு. பெரியமேசையொன்றில் பலவிதமான பலகாரங்கள் வரிசையாக அடுக்கப்பட்டுக் கிடக்கின்றன. இன்னொரு பக்கத்தில் உணவு வகைகள் பரவிக் கிடக்கின்றன. பழங்கள் பழரசங்கள் என நிறைந்து காணப்படுகின்றன. இப்படித்தான் நான் ரசியாயிவின் காட்டுக்குள் இரண்டு நாட்களாக கிடந்து உணவின்றியும் நீரின்றியும் வாடி வதங்கிய போது இதே மாதிரியான கனவொன்று வந்தது. இப்போதும் அதே கனவு ஜேர்மனியிலும் வருகிறது என நினைத்துக் கண்களை நன்றாய் திறந்து பார்க்கிறேன். உண்மைதான். கனவல்ல இது நிஜம்தான்.

இந்தவீடு ஏஜென்சிக்காரர் ஒருவருக்கு உரிமையாக இருந்தது. நாங்கள் இன்று வருகிறோம் என்பது காலையிலே அவருக்குத் தெரிந்திருந்த படியால் இந்த உபசரிப்புகளுக்கு ஏற்பாடு செய்திருந்தார். அதுமட்டுமல்ல. அன்றொரு கிறிஸ்தவ பெருநாளுங்கூட. அவருக்குப் பெருநாளுமாயிற்று. எங்களை உபசரித்த மாதிரியும் ஆயிற்று. இப்போ நாங்கள் சாப்பிடும் நேரம். எத்தனை நாட்கள் எங்கள் வயிறுகள் காய்ந்து கிடந்தன. வாய்க்கு ருசியான உணவு கிடைக்காமல் ஏற்கனவே நாக்குச் செத்துக் கிடக்கிறது. காய்ந்துபோன வயிறுகளுக்கும் செத்துப் போன நாக்குகளுக்கும் இன்று நல்விருந்துதான். எல்லாவற்றையும் சாப்பிட்டுவிட வேண்டுமென்று ஆசையிருக்கிறது. ஆசைமட்டும் இருந்தென்ன? இன்று வயிற்றில் இடமில்லையே. யானைப் பசிக்குச் சோளப் பொரியுண்டு. பிழைத்து வந்த நாம் இன்று யானையின் பசியளவுக்கு அதேயளவு உணவுகளையே உட்கொண்டு விட்டோம். உண்ட களை தொண்டர் களுக்கும் உண்டல்லவா? இந்த அகதிகளுக்கு உண்ட களை மட்டுமா? வாழ்வின் எத்தனை கொடுமைகளை வேதனைகளைப்பட்டு ஊசலாடும் உயிரோடு மட்டும்தானே வந்து சேர்ந்தோம். இனியென்ன எம் உறவுகள் எங்களை வந்து அழைத்துச் செல்வார்கள். ஒரு சில நாட்கள் மட்டும் இங்கிருந்து களைப்பாறி கொஞ்சம் உடலைத்தேற்றி விடுவோம். மீண்டும் பயணம் செய்து எமது இறுதி இலக்கான அகதி தஞ்சக் கோரிக்கையை

இன்னொரு நாட்டிலும் கேட்கவிருக்கிறோம். இப்பொழுது இன்றுமட்டுமல்ல. நாளை பற்றியும் நாளை மறுதினம் பற்றிய நம்பிக்கையும் வந்துவிட்டது.

இலங்கைத் தமிழர்கள் அகதிகளாகச் சென்றபோது மரணங்கள் நிகழ்ந்த சம்பவங்கள் சில.

* ஐரோப்பிய நாடுகளின் உறைநிலைக்குளிரைத் தாங்கிக்கொள்ள முடியாமல் பயணங்களின்போது பனியில் விறைத்து உறைந்த இறப்புகள்.
ரசியா, போலாந்து, உக்ரேயின் போன்ற நாடுகளின் எல்லைகளைக் கால் நடையாகக் கடக்கும்போது இவ்வாறான மரணங்கள் அதிகம் நிகழ்ந்துள்ளன.

* ஐரோப்பிய நாடுகளின் எல்லைகளை இரகசியமாகக் கடப்பதற்காக ஆறுகளில் இறங்கி நடக்கும்போது நீரால் இழுத்துச் செல்லப்பட்டு மூச்சுத்திணறி ஏற்பட்ட சாவுகள்.

* மூடப்பட்ட வாகனங்களுக்குள் வைத்து அகதிகள் எல்லைகள் ஊடாகக் கடத்தப்பட்டபோது மூச்சடங்கி ஏற்பட்ட மரணங்கள்.

* சீமெந்து கலக்கும் உருளை இயந்திரத்துக்குள் வைத்து அகதிப்பயணிகள் கடத்தப்படும்போது உருளையைப் பொலிசார் இயக்கிப் பார்த்தபோது உள்ளிருந்தவர்கள் அதற்குள் வெட்டப்பட்டு அரைக்கப்பட்டு உயிரிழத்தல்.

* புலம் பெயர்ந்து வெளிநாடுகளுக்கு விமானங்களில் சென்றபோது விமான விபத்தில் ஏற்பட்ட மரணங்கள்.

* அகதிப் பயணிகள் ஏஜென்சி மற்றும் கடத்தல்காரர்களுடன் முரண்பட்ட நிலையில் படுகொலை செய்யப்படல்.

* வெளிநாடுகளுக்கு கடல் மார்க்கமாகப் படகுகளில் பயணித்தபோது நோய், பசி, தாகம் என்பவற்றால் ஏற்பட்ட உயிரிழப்புக்கள்.
(இலங்கையிலிருந்து அவுஸ்திரேலியா, இத்தாலி ஆகிய நாடுகளை நோக்கிய படகுப் பயணங்களில் இத்தகைய மரணங்கள் ஏற்பட்டுள்ளன.)

# 4

## புலம் பெயர் தமிழர் வாழ்வு

புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்ந்தாலும் தமிழர் தமது நிலம் சார்ந்த நினைவுகளுடனேயே வாழ்ந்துவருகின்றனர். தாயகத்தில் ஏற்படுகின்ற சம்பவங்கள் புலம் பெயர்ந்தவர்களிடையே பாரிய தாக்கத்தை ஏற்படுத்திவிடுகிறது. கடினமான வேலைகள், குடும்பச் சுமைகள், தாயகத்தில் உறவுகளின் அவலங்கள் என்பன புலம் பெயர் மக்களிடையே உளவியல் ரீதியான பாதிப்புக்களை ஏற்படுத்தி விடுகின்றன. குடும்ப உறுப்பினர்களின் ஒற்றுமையும் கூட்டுணர்வுமே அப்பாதிப்புக்களில் இருந்து விடுபடுவதற்கான தற்காலிக நிவாரணியாகும். மாறாக ஒற்றுமை, கூட்டுணர்வு இல்லையாயின் அமைதியின்மையும் குடும்ப பிளவுப் பெயர்வும் உருவாகுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

## 07. புலம் பெயர் தமிழர் வாழ்வு

மனிதர்கள் தங்கள் அழகுடலை ஆடைகளுக்குள் இறுக்கமாக மூடிக் கொண்டதால் மரங்கள் தங்கள் வாழ்க்கையை பகிஷ்கரிக்கத் தொடங்கிவிட்டன. வீதியெங்கும் இலைகளைக் கொட்டி தங்கள் கண்டனத்தை காண்பிக்கத் தயாராகிவிட்டன. இலைகளை அகலவிரித்து பச்சையம் தயாரிக்கமாட்டோம் எனப் பணிப்புறக்கணிப்பு. மரங்களின் போராட்டத்துக்கு மனிதர்கள் எதிர்ப்புத் தெரிவித்து கதவுடைப்புப் போராட்டம், கதவுகளையும் யன்னல்களையும் இறுக்கமாக மூடிக் கண்டனம் தெரிவிப்பு. இது மரங்களுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான போராட்டமல்ல. அவர்களின் வாழ்க்கைக்கான போராட்டம். பனிப்பொழிவிலும் குளிர்காற்றுகளிலுமிருந்து தங்களை பாதுகாக்க தற்காப்புப் போராட்டம்.

ஊர்எங்கும் வெண்பனிக்கட்டியின் தரை விரிப்பு, மரக்கிளையெங்கும் பனிப்பூக்களின் அலங்கரிப்பு, வெண்பஞ்சுத் தூறலாய் பனிப்பொழிவு , கணவனை இளந்த கைம்பெண்போல் வெள்ளாடைத் துயில் கொண்டு துயரம் கொள்கிறாள் துருவத்தின் தாய். புலம் பெயர் நாடுகளில் வாழும் மக்கள் இருவகையான தெளிவான வேறுபாட்டைக் கொண்ட காலநிலையை அனுபவிக்கிறார்கள்.

குளிர்காலம் மரங்களின் இலைகளிலும் மக்களின் ஆடையணி களிலும் பாரிய மாறுபாட்டை ஏற்படுத்தி விடுகிறது. குளிர் காலம் தொடங்கும் போது மரங்களும் இலைகளை உதிர்த்து நிர்வாணமடையும். மனிதர்கள் குளிர்தாங்கும் ஆடைகளை உடல் மறைத்து அணிந்து கொள்வர். குளிர்களில் இருந்து தமதுடலை பாதுகாத்துக்கொள்ள தலைமூடிய தொப்பிகள், கால்மறைக்கும் சப்பாத்துக்கள், உடல் மூடிய ஆடைகள் என ஆடைகளின் பாரம் தாங்கியவனாய் பனிக்கவிப்பு வீதிகளில் பவனிவருகிறான். சாரம் கட்டி அதனையும் தூக்கி சண்டிகட்டி தாயக வீதிகளில் காலாற நடந்தவன் இங்கே பசியாற உற்றார் துயராற உடுப்புக்களின் வேடந்தாங்கி கொடுங்காற்றின் குளிர்தாங்கி தொழிலுக்கு செல்கிறான். ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது என்று ஆனந்த கும்மி போட்டவன் இங்கே இயந்திரம் பூட்டப் பட்ட மனிதனாய் மின்சாரப் பொறிகளோடு போட்டி போடுகிறான்.

பனிப்பொழிவு மரங்களின் கிளைகளில் தங்கியும் வீதிகளில் படிந்தும் இறுகிகட்டித்து அழகாய் காட்சிதரும். மரங்களதும் புற்களதும் பச்சையம் மறைக்கப்பட்டு வெண்பஞ்சுப் போர்வையாய் ஊர் எங்கும் மூடப்பட்டுக் கிடக்கும்.

பனிக்காற்று உள்நுழையாது மூடப்பட்ட வீடுகள், குளிர்காற்று உடலை தீண்டாது இறுக்கப்பட்ட ஆடைகள், ஒடுங்கிய மூடப்பட்ட வீடுகளுக்குள் முடக்கப்பட்டவர்கள் போல அடங்கிக் கிடக்கிறார்கள். இதுதான் மனிதர்கள் விரும்பிச் சிறையிருக்கும் கூடு. குளிர்கால நிலை நிலவும் புலம்பெயர் நாடுகளில் இப்படித்தான் வாழ்க்கை நகர்ந்து கொண்டிருக்கிறது.

மண்ணிலே குளித்து நிலத்திலே நீந்தி கும்மாளம் போட்டவன்
- இங்கே அயலார்
கண்ணிலே படாமல் அடங்கிப் போய் கிடக்கிறான்
-புலம் பெயர் தமிழனாய்

வெளிநாடுகளில் தமிழர்கள் கூடுதலாக அடுக்குமாடி குடிமனைகளிலேயே வசித்து வருகின்றனர். வெள்ளையினத்தவர்கள் மற்றவர் வீடுகளுக்கு அநாவசியமாகச் செல்வதில்லை. வெள்ளையர்களிடையே குடியிருக்கிற தமிழர்களும் அவர்களுடைய வீடுகளுக்கு செல்வது மிகக் குறைவாகவே இருக்கிறது. ஒருவரின் கதவருகே மற்றவரின் வீட்டு வாயிற் கதவு இருந்தாலும் பரஸ்பரம் சந்தித்துக் கொள்வதும் கதைத்துக் கொள்வதும் மிகக் குறைவாகவே இருக்கிறது. பெரும்பாலான தமிழர்கள் தொழில்களுக்குச் சென்று வந்து விட்டால் தமது வீடுகளுக்குள்ளேயே முடங்கிப் போய் விடுகிறார்கள். போனால் வேலை. வந்தால் வீடு என இவர்களின் வாழ்க்கை நகர்ந்து கொண்டிருக்கிறது. இந்த வாழ்வு கூட்டின் வாழ்க்கைக்கும், வீட்டின் சிறைக்கும் ஒப்பானதாகக் காணப்படுகிறது. சிறிய வீடு அதற்குள்ளேயே எல்லாம் அடக்கப்பட்டிருக்கிறது. சமையல், படுக்கை, குளியல், கழிவறை என எல்லா அறைகளும் அருகருகாக இருக்கும். வசதிகள் மிக்கவைதான் எனினும் இட்டு முட்டாக இருப்பதால் வாழ்க்கை ஒடுக்கப்பட்டதாகவும் முடக்கப்பட்டதாகவும் மனப்பிரதிமையை உருவாக்கி விடுகிறது.

புலம்பெயர் தமிழர்களின் வீடுகள் காலையில் சுறுசுறுப்பு அடையத் தொடங்கிவிடும். பாடசாலை செல்வோர், வேலைகளுக்கு செல்வோார்,

சமையல் சாப்பாடு என எல்லாப் பரபரப்பும் ஒரே நேரத்தில் அந்த சிறிய வீட்டுக்குள் ஆரம்பித்துவிடும். குடும்ப உறவுகள் நாலா திசையும பிரிந்து வேலை படிப்பு எனச் செல்ல வீடு மட்டும் தனித்து அமைதியாய் இருக்கும். மீண்டும் பிற்பகல் யாவரும் ஒன்று கூடி வீட்டை அமர்க்களப்படுத்துவர். இதுதான் இயல்பு வாழ்க்கை.

ஞாயிறுகளில் அனைவருக்கும் விடுதலை. வெள்ளையர்கள் ஓய்வு நாட்களை மிக மகிழ்ச்சிக்குரியதாக்கி அனுபவித்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் தமிழர்களின் இல்லங்களில் அன்றுதான் எல்லா வேலைகளுக்கும் நாள் குறிக்கப்பட்டிருக்கும். கடைக்குப் போக, நல்ல உணவு சமைத்து சாப்பிட, பிள்ளைகளை வெளியே கூட்டிச்செல்ல, உடுப்புத்துவைக்க என வேலைகளின் பட்டியல்கள் நீண்டு கொண்டே செல்லும். நடனம், பாட்டு எனப் பழகப் போவதும் தமிழ், கொம்பியூட்டர் என படிக்கப் போவதும் அன்றுதான். மொத்தத்தில் தமிழர்களின் வீடுகள் ஞாயிறுகளில்தான் பரபரப்புக்குள்ளாகின்றன.

தொலைக்காட்சிகளும் தொலைபேசிகளும் அன்றுதான் இடைவிடாது அலறத் தொடங்குகின்றன. ஞாயிறுகளில் ஒளிபரப்பாகும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மக்களிடம் அதிகம் வரவேற்பைப் பெற்றவை. எதைப் பார்ப்பது, எவற்றைத் தவிர்ப்பது என்பதில் குடும்பத்தில் பிரச்சினை. இந்தப் பிரச்சினைகளுக்கிடையே தாயகத்தில் இருந்து தொலைபேசி மணி அழைப்புத்தரும். ஞாயிறுகளில்தான் தொலைபேசிகள் தொல்லைபேசிகளாக அவதாரம் எடுக்கின்றன. கணவன் மனைவிய ரிடையே சில சமயங்களில் சண்டையை ஆரம்பித்து வைக்கவும் தொலைபேசி மணியடித்து அனுமதி கொடுக்கிறது.

ஹலோ... 'சரியான பணக்கஷ்ரம் அனுப்பிவை' இது அங்கிருந்து வரும் அவலக்குரல்.

இப்ப சரியான கஷ்ரம் நான் என்ன செய்யுறது.

இது இங்கிருந்து செல்லும் பதில்குரல்

இந்த வினா விடைகளுக்கு பிறகு குடும்பத்தின் இயல்பு நிலை பாதிக்கப் படுகிறது.

உங்கட ஆக்களுக்கு நெடுக பஞ்சம் கொட்டுறதுதான் வேலை
நெடுக காசு காசு எண்டால் நாங்கள் என்ன செய்யுறது.
எங்கேயும் காசு காய்க்குதாமோ? இது மனைவியின் பல்லவி.
என்னப்பா செய்யுறது அதுகளும் யாரிடம் போகும். ஏன் போன

மாதம் நீர் உங்கட ஆக்களுக்குப் பணம் அனுப்பினீர் தானே.

இது கணவனின் பௌவியமான பதில். இந்த வினா விடைகளுடன் குடும்பங்களின் ஞாயிற்றுக் கொண்டாட்டம் சூடுபிடிக்கத் தொடங்கிவிடுகிறது. வழக்கம் போல ஞாயிறு தன் அமைதியையும் மகிழ்ச்சியையும் இழக்கத் தொடங்கி விடுகிறது. பல குடும்பங்களில் தொலைபேசி மணியோசைக்குப் பிறகு குடும்ப அமைதி குழம்பிப் போவதால் அந்த ஓசையை கேட்கும் போதெல்லாம் அவர்கள் உளவியல் சார்ந்த பிரச்சினையை எதிர்நோக்குவர். அதிலிருந்து விடுதலை பெற தொலைபேசி அழைப்புகளுக்கு பதில் அளிக்காமல் விட்டு விடுகின்றனர்.

குடும்பத்தின் தலைமைப் பொறுப்பை தந்தை வகித்தாலும் அவர் தொழில்நிலை காரணமாக வேலையிடங்களில் அதிக நேரத்தை செலவு செய்பவராக இருக்கிறார். புலம்பெயர் தமிழர்கள் கடினமான உழைப்பாளிகள். பெரும்பாலானவர் அதிக வருமானம் பெற்றுக் கொள்வதற்காக ஒன்றுக்கு மேற்பட்ட தொழில்களில் ஈடுபடுகின்றனர். இதனால் ஆண்கள் அதிக நேரங்களை வீடுகளுக்கு வெளியே செலவு செய்து கொண்டிருப்பவர்களாகக் காணப்படுகின்றனர்.

குடும்பத் தலைவியர் வீட்டு வேலைகளைக் கவனித்து குறுகிய நேரத்தொழில்களுக்கு செல்பவர்களாகவும் இருக்கின்றனர். இருவரும் உழைத்தால்தான் இந்நாடுகளில் வாழ முடியும் என்ற நிலை இருக்கிறது. தமிழ்ப் பெண்கள் வாகனமோட்டவும், தொழிலுக்குச் செல்லவும் தொடங்கிவிட்டதால் பிள்ளைகள் காப்பகங்களில் பகற்பொழுதுகளில் விடப்படுகின்றனர். தாய் தந்தையர் தொழில்களுக்காக வெவ்வேறு இடங்களுக்கு செல்ல பிள்ளைகள் கல்விக்காக வேறு இடம் செல்கின்றனர். காலையில் பிரிந்து செல்லும் குடும்ப உறவுகள் மீண்டும் மாலையில் தான் ஒன்று கூடுகின்றன. அவசரப்பட்ட அவதிப்பட்ட இம்மக்களின் வாழ்க்கையில் யாவரும் கூடியிருந்து கதைத்துப்பேசி மகிழ்ந்திருப்பதற்கான சந்தர்ப்பங்கள் மிக அரிதாகவே இருக்கின்றது.

பெற்றோர்கள் தொழில்காரணமாக வெளியே செல்வதால் பிள்ளைகள் வீடுகளில் தனியாக இருக்கின்றனர். தொலைக்காட்சி பார்ப்பதிலும், கொம்பியூட்டர் விளையாட்டுக்களிலுமே இவர்கள் அதிக நேரங்களை செலவழிப்பவர்களாகவுள்ளனர். இணையங்களில் வலம் வந்து கொண்டிருக்கும் ஏமாற்றுப்பேர்வளிகளிடம் சிக்கி வாழ்க்கையைத்

தொலைத்தவர்கள் பலர், தொலைக்காட்சி, இணையத்தளங்களில் பாலியற் படங்களைப் பார்த்து பாதை மாறியவர்கள் இன்னும் பலர் இதனால் பெற்றோர்கள் பிள்ளைகளை தனியாக வீட்டில் விட்டுப்போக அச்சப்படுகின்றனர்.

தாய்மார் வீட்டுக்கான சமையல் வேலைகளையும் கவனித்து கூடுதலாக வேலைகளுக்கும் செல்கின்ற நிலைமையில் இருக்கிறார்கள். பிள்ளைகளின் கல்வி, ஒழுக்க விடயங்களை பெரும்பாலும் தாய்மாரே கவனித்துக் கொள்கின்றனர். புலம் பெயர் நாடுகளில் தமிழ்தாய்மாரின் பங்குபணி மிகவும் கனதியானது. இயந்திர வாழ்க்கையாக இவர்களின் வாழ்வு ஓடிக் கொண்டிருக்கிறது. வேலைகளை விரைவாய் முடித்து கொஞ்சம் ஆறுதல் பெறுவதென்றாலும் அவர்கள் அடுத்த நகர்வுகளைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கி விடுகின்றனர். சிந்தனைகளும் வேதனைகளும் அவர்களை மீண்டும் மீண்டும் களைப்படைய வைத்து விடுகின்றன.

### 7.1 தாயின் சிந்தனைச்சுமை

பகலில் ஓர் இரவு செய்து பஞ்சணையில் தலைவைத்து அதிகாலை திறந்த கண்களின் கடைகளுக்கு கொஞ்சம் விடுமுறை கொடுப்போம்.

அல்ப்ஸ் மலைக்காற்றே என்னுடலை தீண்டாதே!
ஈழத்தின் நினைவுகளே என்மனத்தை வருத்தாதே!

நாட்டிலே யுத்தம் நித்தமும் நடக்குது. எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவிய வீட்டினில் அவர்கள் உண்டு களித்தனரோ? இல்லை மாண்டு புதைந்தனரோ? யாருக்குத் தெரியும். பிள்ளை யாரப்பா! முறுகண்டிப்புள்ளையாரப்பா! என் பெற்றோரைக் கண்டொரு பதில் சொல்லுமப்பா!

ரெலிபோன் மணி அடிக்கும் போதெல்லாம் என்மனசும் படபடக்கிறது. எத்தனை நாட்கள், எத்தனை காலங்கள் இப்படி பயந்து பயந்து வாழ்கிறது. ஒரு துயரச் செய்தியும் என் காதுகளுக்கு எட்டி விடக்கூடாது. அப்பாவும் அம்மாவும் வயதுபோன காலத்திலே எவ்வளவு கஷ்ரப்படுங்கள். பிள்ளையாரே அதுகளைக் காப்பாற்ற வேண்டும். பாவம் நீயும் தான் என்ன செய்வாய். நீயும் அகதியாகத்தானே இருப்பாய். இல்லை அகதி முகாமில் எங்கு இருப்பாயோ? யாருக்குத்தெரியும்.

உனக்கென்ன நீ கலியாணம் செய்யாத தனிக்கட்டை என்ன நடந்தாலும் பரவாயில்லை என இருப்பாய். ஆனால் மக்களாலே அப்படி இருக்க முடியுமோ? அப்பாடா நினைச்சுப் பார்த்தாக் கூட தலையை சுற்றுது. இந்த வேதனைகளாலை சாப்பிடவும் முடியுதில்லை. நித்திரை வருதும் இல்லை. என்ன செய்யுறது எங்கடை வாழ்க்கை எப்பவும் நரகப்பொறிக்கை கிடக்கிற மாதிரி இருக்கு.

சின்ன வயசிலை துள்ளித்துள்ளி ஓடுவதும் என்னை அம்மா கலைத்துப் பிடித்து உணவூட்டுவதும் நான் வேண்டாம் வேண்டாம் என்று அடம் பிடிப்பதும் அங்கைபார் இஞ்சைபார் எண்டு என்னை ஏமாத்தி சாப்பாட்டை அம்மா தீத்திவிடுவதையும் இப்ப நினைத்தாலும் அவாவின்ரை பாசம் என் கண்ணீரை சிந்தவைக்கும். எங்களை ஊட்டி வளர்த்த பெற்றோர்களை பார்த்துவரத்தான் முடியவில்லை. அதுகள் எப்படி இருக்குதுகள் எண்டு அறிந்தால் போதாதா? நினைத்துக்கூட பார்க்க முடியாத கொடுமையாய் இருக்கு.

என்ரை அப்பா எத்தனை நாள் தன்ரை முதுகிலை தூக்கி வைத்து உப்பு மூட்டை சுமந்திருப்பர். தோளிலை ஏறி எத்தனை நாள் சவாரிசெய்திருப்பன். தூக்கி வளர்த்த அவர்களை அருகில் இருந்து பார்க்கக்கூட முடியாத பாவியாக இருக்கிறன்.

ஊரிலை இருந்து துன்பப்படுகிறதைவிட வெளிநாட்டுக்கும் போனால் நல்லது என்று நினைத்து கலியாணம் என்ற பெயரிலை என்னை வெளிநாட்டுக்கு அனுப்பிப்போட்டு அதுகள் எவ்வளவு வேதனைப் பட்டிருக்குங்கள். பத்துவருசமாய் அவையின்ரை முகத்தைக்கூட என்னாலை பார்க்க முடியவில்லை. இந்தக் கடைசிக் காலத்திலையாவது அவையளை பார்த்து வரலாம் எண்டால் யுத்தம் சண்டை என்று பயங்கரமாய் நிலமை மாறிக் கொண்டிருக்குது. பிறந்து வளர்ந்த வீட்டை விட்டு ஊரை விட்டு உணவில்லாமல் குண்டுகளுக்கேயும் வெடிச் சத்தங்களுக்கேயும் உயிர் வாழ்கிறதென்றால் எப்படி இருக்கும்.

நாங்கள் ஊரிலை வாழ்ந்த காலத்திலே எவ்வளவு சந்தோசம். அப்பா அம்மா பெரியப்பா சித்தப்பா எத்தனை உறவுகள். எல்லாரும் பக்கத்திலே இருந்ததாலே எப்பவும் விளையாட்டு கும்மாளம் என எங்கடை பொழுதுகள் எவ்வளவு சந்தோசமாய் போச்சுது. கொக்கான் வெட்டுதல் மாங்கொட்டை கிந்துதல், கிட்டிப்புள்ளு கிளித்தட்டு என எத்தனை

விளையாட்டுக்கள். இப்படித்தான் எங்களின்ரை வீட்டுக் கோடிக்கை வீடுகட்டி விளையாடினம். இருந்தாப்போல கலியாண வீடு செய்து விளையாடுவம் என்று என்னைப் பொம்புளையாக்கிவிட்டினம். மாமாவின் மகன் தான் மாப்பிள்ளை. சித்தியின்ரை மகள், தான் அவனுக்கு பொம்புளையாய் நிக்கப் போறன் எண்டு அடம்பிடிச்சுக் கொண்டிருந்தாள். நானும் விடேல்லை. அவள் தான் விளையாட வரமாட்டன் எண்டு கோவிச்சுக் கொண்டு போட்டாள். எங்கடை கலியாண ஊர்வலத்திலே சிரட்டையை வைச்சு ஒராள் வீடியோ எடுக்கிறார். தகரப் பேணியிலை இன்னொராள் மேளம் அடிக்கிறார். ஓட்டை சிரட்டையிலை தடிகுத்தி இன்னொருதர் குழல் ஊதுகிறார். பத்துப் பன்னிரண்டு பேரோடை கலியாண ஊர்வலம் சிறப்பாய் போய்க் கொண்டிருக்குது. அந்த நேரம் பார்த்து வெளியே போன அம்மாவும் அப்பாவும் வந்துவிட்டினம். அப்பா கண்கலங்கி அழுகிற மாதிரி நின்றார். ஏன் பிள்ளை கலியாண வீட்டுக்கு எனக்கு சொல்லேல்லை என்று சிணுங்கிக் கொண்டார். என்ரை வாயும் சும்மா இருக்கேல்லை. ஏன் உங்கடை கலியாண வீட்டுக்கு எனக்கு சொன்னனீங்களோ? என்று கேட்டு விட்டன். அம்மா விழுந்து விழுந்து சிரிச்சா. சிரிப்பு அடக்க முடியாமல் அப்பாவின்ரை தோளிலை சாய்ந்து சிரிச்ச அந்த சிரிப்பை இன்னும் என்னாலை மறக்க முடியவில்லை. அப்படி ஒரு சந்தோசமான நாள் இனிமேல் வரமாட்டாதா என்று எத்தனை முறை ஏங்கியிருக்கிறன். அன்றைக்கு அவர்கள் ஆசை ஆசையாய் தந்த முத்தங்களின்ரை ஈரம் இன்னும் காயாத மாதிரி ஈரமாய் பசுமையாய் இருக்கு. அங்கை நடக்கிற யுத்தத்திலே அப்பா அம்மா உயிருடன் இருக்கினமோ இல்லையோ எனக்குத் தெரியாது. அப்படி செத்துப் போனா ஒரே ஒரு தரம் என்ரை அப்பா அம்மா கன்னத்திலை முத்தமிட்டு வழி அனுப்பி வைக்கவாவது பிள்ளையாரப்பா வரந்தாருமப்பா. நான் வெளிநாட்டுக்கு வரேக்கை முருகண்டியிலே உனக்கு தேங்காய் உடைச்சன். அப்ப அப்பா சிதறிப்போன தேய்காயைக் காட்டி பார்பிள்ளை இந்த தேங்காய் மாதிரி எப்பவும் நீ சிரிச்சுக் கொண்டே இருக்க வேணும் என்றார். தேங்காய் உடைஞ்சுபோனால் சிரிப்பு, ஆனால் குடும்பம் உடைஞ்சு போனால் எப்படியப்பா சிரிப்பு வரும்? என்று நான் கேட்டபோது அப்பாவும் அம்மாவும் என்ரை முகத்தைக் கூட பார்க்க முடியாமல் கட்டிப்பிடிச்சு விட்ட கண்ணீரை இன்றும் மறக்க முடியவில்லை. என்னதான் இருந்தாலும் தாய்தந்தையோட சொந்த வீட்டிலே ஊரிலை வாழ்கிற வாழ்க்கைமாதிரி ஒரு வாழ்க்கை வருமோ?

வெளிநாட்டு வாழ்க்கையிலே எங்கடை பிள்ளைகளுக்கு அப்படிச் சந்தோசம் எங்கை கிடைக்குது. பிள்ளைகள் ஓடியாடி விளையாட வீட்டில் எங்கே இடம் இருக்குது. இல்லை அதுகள் சேர்ந்து விளையாடுறதுக்கு பக்கத்திலே எங்கை உறவுகள் இருக்கு. அதனாலை பிள்ளைகள் குட்டி போட்ட பூனை மாதிரி எப்பவும் எங்களை சுத்தி சுத்தி வந்து கொண்டிருக்குதுகள். ரீ.வி பார்க்கிறதும் கொம்பியூட்டரில் விளையாடுவதும் தான் வேலை. குளிர், மழை, காற்று என்று பிள்ளைகளை வெளியிலேயும் விடுகிறது இல்லை. வெளியிலை போனாலும் கண்ட கண்ட பழக்கங்களை பழகிவிடும் என்று விளையாடவிடாமல் தடைபோடுறம். என்ன செய்யுறது பிள்ளைகளை வெளியே விடாமல் வீட்டுக்கை வைச்சு அடைச்சு வளர்க்கிற மாதிரிக் கிடக்குது. அவர்களின்ரை சுதந்திரத்தை நாங்கள் மழுங்கடிக்கிறம். எங்கடை ஊரிலே கலியாண வீடு விளையாட்டு விளையாடிய நாங்கள் இங்கே எங்களின் பிள்ளைகளை வீட்டுக்கு வெளியிலை கூட விளையாட அனுமதிக்கிற மில்லை. பிள்ளைகள் வீட்டில் இருந்தாலும் நாங்கள் சும்மா விடுறமா? ரீவியைப் பார்க்காதே, இன்ரநெற்றைப் பார்க்காதே என்று எத்தனை கட்டுப்பாடுகளையும் போடுறம். இப்படியெல்லாம் கட்டுப்பாடுகளைப் போடுகிற நாங்கள் பிள்ளைகளுடன் இருந்து கதைச்சு பேசுறமா என்றால் அதுவும் இல்லை. வேலை வேலை என்று நாங்கள் பறந்து திரிந்தால் குழந்தைகளை எப்படி நல்ல பிள்ளைகளாக வளர்த்தெடுக்க முடியும். அப்படியான பிள்ளைகளிடம் இருந்து நாங்கள் பாசத்தை எப்படி எதிர்பார்க்க முடியும். வீட்டிலை பிள்ளைகளுக்கு அன்பு கிடைக்காத தால்தானே வெளியிலே அன்பைத் தேடிப் போவினம். பிறகு காதலிக்காதை, கலியாணம் செய்யாதை என்று நாங்கள் சொல்கிறதிலை என்ன நியாயம் இருக்குது.

மகன் படிக்கிற பள்ளிக்கூடத்திலேதான் எனது மகள் அம்சா பத்தாம் வகுப்பில் படிக்கிறாள். சரியான துடியாட்டக்காரி. முகத்துக்கு நேராய் கதைப்பாள். படிப்பிலும் கெட்டிக்காரி. ஊரிலை இருந்து அம்மா போனமாதம் எனது மகளுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தா.

பொம்புளைப்புள்ளைகள் அடக்கவொடுக்கமாய் இருக்க வேணும். கண்டபடி எல்லாரோடையும் பழகக் கூடாது. புகையிலை விரிச்சா போச்சு பொம்புளை சிரிச்சா போச்சு. அதனாலை கண்டபடி

சிரிக்காதே. பக்குவப்பட்ட பிள்ளைகள் இனிமேல் பக்குவமாய் இருக்க வேணும்.

என்றெல்லாம் புத்திமதிகூறி எழுதியிருந்தா. இந்தக் கடிதத்தோடு என்னிடம் வந்தமகள் எவ்வளவு கேள்விகள் கேட்டு குடைந்து எடுத்துவிட்டாள்.

அடக்கவொடுக்கம் என்றால் என்ன? புகையிலை விரிச்சா என்ன போகும்? பொம்புளை சிரிச்சா என்ன போகும்?

இதற்கு விடை சொல்ல நான் படாதபாடுபட வேண்டியதாய் போச்சு. என்ரை அம்மாவிலும் எனக்கு குறைசொல்ல முடியவில்லை. நான் பெத்த மகளிலும் குற்றம் சொல்ல முடியவில்லை. ஐரோப்பிய கலாசாரத்துக்கே வாழ்கின்ற பிள்ளைகள் தமிழ் கலாசாரத்தை பின்பற்ற முனையும்போது ஏன்? எதற்கு? என்ற வினாக்களுக்கு நாங்கள் நிச்சயம் பதில் சொல்லித்தானாக வேண்டும். பிள்ளைகளுக்கு சரியான விடை கிடைக்கவில்லையெனில் அவர்கள் கலாசார பிறழ்வுகளை எதிர் நோக்குவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

அம்சா பருவமடைஞ்சு பெரியவளாய் ஆனபோது அவளின்ரை சாமத்திய வீட்டை வடிவாய் செய்து அந்த வீடியோ கொப்பியை ஊரிலை உள்ள அம்மா அப்பாவுக்கு அனுப்பிவிட்டனான். அவையின்ரை கைக்கு அது கிடச்சுதோ தெரியவில்லை. அதிலையாவது பேரப்பிள்ளைகளைப் பார்க்கட்டும் என்று எவ்வளவு வடிவாய் செய்து அனுப்பிவைச்சனாங்கள்.

எங்கடை பிள்ளைக்கு பட்டுச்சாறி உடுத்து பூமாலை போட்டு எவ்வளவு வடிவாய் வெளிக்கிடுத்திவிட்டம். ஆனால்அவள் வெட்கப் பட்டுச் சிரிக்கிறாளும் இல்லை. அழகாய் அன்னநடை நடக்கிறாளும் இல்லை. எப்பவும் நேரான பார்வையிலை நிக்கிறாள். கடைசியாய் வீடியோக்காரனிடம் சொல்லி வெட்கப்படுகிற மாதிரி, தலை குனிஞ்சு சிரிக்கிறமாதிரி, நிலம்பார்த்து நாணப்பட்டு நடக்கிறமாதிரி மிக்சிங் போட்டு செய்யச் சொல்லியெல்லோ செய்து எடுத்தனாங்கள். என்னதான் இருந்தாலும் எங்கடை பிள்ளைகள் சாறி கட்டி வெட்கப்பட்டு நடந்து போறது எவ்வளவு வடிவாய் இருக்கு. இந்தக் காட்சிகளை அம்மா அப்பா பார்த்திருந்தால் எவ்வளவு சந்தோசப்பட்டிருப்பினம்.

எங்கடை குழந்தைகளுக்கு நாங்கள்தான் எங்கள் தாய் நாட்டைப் பற்றியும் அதன் வரலாறு பற்றியும் சொல்லிக் கொடுக்க வேண்டும். தமிழ்

மக்களின் கலாசாரப் பண்பாடு பற்றியெல்லாம் சரியான முறையிலை சொல்லிப் புரிய வைக்க வேண்டும். மேற்கத்தேய கலாசாரங்களை எங்களுக்கு குறை சொல்ல உரிமை இல்லை. இருந்தாலும் அந்தக் கலாசாரத்தை எங்கள் பிள்ளைகள் பின்பற்றி நடக்க நாங்கள் அனுமதிக்கிறதில்லை. அந்த கலாசாரத்திலும் பல நல்ல விடயங்கள் இருக்கின்றன. எங்கள் கலாசாரத்திலும் பல தவறான விடயங்கள் இருக்கின்றன. பிள்ளைகள் சரியான விடயங்களை தெரிவு செய்து வாழப்பழகிக் கொள்ள வேண்டிய சூழலை பெற்றோர்கள் தான் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்யாமல் பின்னர் பிள்ளையை கண்டிப்பதிலும் தண்டிப்பதிலும் என்ன நியாயம் இருக்கிறது.

எனது மகன் மிதுன் இங்கே ஐந்தாம் வகுப்பில் படிக்கிறான். வகுப்புரீச்சர் உங்கள் நாடுகளைப்பற்றி சொல்லச்சொல்லி இருக்கிறார். எல்லாப் பிள்ளைகளும் தங்கள் நாடு அழகானது தூய்மையானது. செல்வந்த நாடாக இருக்கிறது என்று தங்கள் நாடுகளின் பெருமைகளை எடுத்துச் சொல்லி இருக்கினம். எனது பிள்ளைக்கு என்ன தெரியும். ரீ.வியிலை நாங்கள் பார்க்கிற செய்தியை பார்த்துப் பழகிய அவன் இலங்கையைப் பற்றி இப்படிச் சொல்லியிருக்கிறான்.

எங்கள் நாடு இலங்கை. அழகானது. ஆனால் அங்கிருப்போர்
எப்பவும் அழுது கொண்டிருக்கினம். அங்கு ஒவ்வொருநாளும்
செல்வந்து வீழ்வதால் எங்கள்நாடும் செல்வந்த பூமியாய் இருக்கு.

வகுப்புரீச்சர் என்னைக் கூப்பிட்டெல்லோ இதற்க்கு விளக்கம் கேட்டவா. எங்கள் நாட்டைப்பற்றி எங்கள் பிள்ளைகள் எவ்வாறான மனப்பதிவுகளைக் கொண்டிருக்கிறார்கள். இதனை தவறு என்றும் சொல்ல முடியாது. அதனால்தான் பிள்ளைகளுக்கு எங்கள் நாட்டின் அமைதியான வாழ்க்கை பற்றிய பதிவினை முதலில் ஏற்படுத்த வேண்டும். பின்னர் யுத்தம் இப்படி மாற்றிவிட்டது என்பதைப் புரிய வைக்க வேண்டும். நாங்கள் இவற்றை பிள்ளைகளுக்குத் தெரியப்படுத்தப்படாமல் இருக்கும் வரை பிள்ளைகளும் எங்கள் நாடுபற்றி தவறான கண்ணோட்டத்துடனேயே இருப்பர். தாயகம்மீது பாசம் கொள்ள வேண்டுமெனில் முதலில் அம்மண்ணையும் மக்களையும் நேசிக்க வேண்டும். எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவிய மண்ணில் நாம் தான் வாழ்ந்து மகிழ முடியவில்லை என்றாலும் எங்கள் பிள்ளைகளாவது சென்று வாழக்கூடிய சூழல் உருவாக வேண்டும்.

எங்கடை காலத்திலே எங்கடை ஊரிலை எல்லா விசயங்களையும் நாங்கள் நடைமுறையிலே கண்டு அறிஞ்சு கொண்டம். அம்மா தாயாக மட்டுமன்றி நல்ல தோழியாகவும் இருந்து நல்ல பழக்க வழக்கங்களையும் பண்பாடுகளையும் சொல்லித் தந்தா. அதனால் நாங்கள் குடும்பக் குத்து விளக்குகளாக , அடக்க ஒடுக்கமாக நல்ல பிள்ளைகளாக இருந்தம். முக்கியமான சந்தர்ப்பங்களிலே முகம் பார்த்து கதைக்காமல் நிலம் பார்த்து கதைச்சனாங்கள். கால் விரல்களால் எத்தனை முறை மண்ணை தோண்டியிருப்பம். எங்கடை பிள்ளைகளிடம் அதை எதிர்பார்க்க முடியுமோ? இங்குள்ள பிள்ளைகள் எதையும் நேரடியாய் கதைக்குதுகள். வெட்கப்பட்டு மண்ணைப் பார்க்காமல் துணிந்து முகத்தைப் பார்த்துக் கதைக்குதுகள். இதை தவறு என்று சொல்லவும் முடியாது. வெளிநாட்டுக் கல்வி முறை தற்துணிவைத்தானே போதிக்கிறது.

நாங்கள் படிக்கிற காலத்தில் வகுப்பிலே ஆண்கள் ஒருபக்கம் பெண்கள் மறுபக்கம் எனப் பிரிஞ்சுதானே இருந்தனாங்கள். பொடியளோட கதைக்கிறதும் வெகு குறைவு. அப்படி கதைச்சாலும் தொட்டுக் கதைக்க மாட்டம். இங்கை என்னடா எண்டால் எல்லாம் தலைகீழ். ஆண், பெண் என்ற வித்தியாசமின்றி ஒரே மாதிரி உடுப்பு போடினம். வகுப்பிலே கலந்துமாறி இருக்கினம். கட்டிப்பிடித்து முத்தம் கொடுக்கினம். சிகெரட், பியர் என கூடிக் குடிக்கினம். இதுக்கே போய் எங்கடை பிள்ளைகளை படிச்சுவா என்றால் என்னத்தை படிச்சு வருங்கள். வெள்ளைக் கலாசாரத்துக்கு இது எல்லாம் சரி. ஆனால் எங்கடை கலாசாரத்துக்கு இது ஒத்துவருமா? பொது இடங்களில் புகை பிடிக்க தடை என விளம்பரம் போடுறவங்களுக்கு பொது இடங்களில் கட்டிப்பிடிக்க தடை என விளம்பரம் போடத் தெரியாதோ? எங்களின் பிள்ளைகள் என்ன செய்யுங்கள். அதுகள் வாழ்கிற சூழல் அப்படி. வெளிநாட்டுப் பிள்ளைகள் அச்சம், நாணம், கற்பு என்றால் என்ன என்றெல்லோ கேட்கினம். பள்ளிக்கூடங்களில் ஆண்பெண் வேறுபாடின்றி பழகவிடீனம். எல்லாவற்றையும் சொல்லிக் கொடுக்கினம். நாங்கள் அடக்க வொடுக்கம் அச்சம் நாணம் என்று சொன்னால் பிள்ளைகள் பள்ளிக்கூடத்துக்கும் வீட்டுக்கும் முரண்பாடுகளையெல்லோ காணுங்கள். பிள்ளைகள் முரண்பாடில்லாத வாழ்க்கை கோலங்களை அனுபவிக்க பெற்றோர்கள் தான் அதிக கவனமெடுத்து பிள்ளைகளுக்கு சரியான விளக்கங்களுடன் எடுத்துச் சொல்ல வேண்டும்.

### 7.2 புதிய முயற்சிகள்

இலங்கையின் இன முரண்பாட்டுச்சூழல் உலகளாவிய ரீதியில் புலம்பெயர் தமிழர்கள் என்ற புதிய வகுப்பினரை உருவாக்கியுள்ளது. தாங்கள் புலம் பெயர்ந்து வாழ்கின்ற நாடுகளில் அகதி அந்தஸ்து பெற்றுவிட்டோம் என்று அமைதியடைந்துவிடாமல் தொடர்ந்தும் தங்கள் வாழ்க்கைக்கான ஆற்றுகைத் தளங்களை வலிமையாகவே பயன்படுத்திக் கொண்டு வருகின்றனர். உலகநாடுகளின் புலம்பெயர் சமூகங்களிடையே இலங்கைத் தமிழர்கள் வலுவான நிலையில் இருக்கின்றனர் என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

பொதுவாக ஐரோப்பிய நாடுகளுக்கு வரும் உலக புலம் பெயர் சமூகங்கள் காலப்போக்கில் தங்கள் சுதேசியத்தை இழந்து அந்நாடுகளின் கலாசாரத்துக்குள் தங்களை முழுமையாக இணைத்துக் கொண்டு வாழப் பழகிக் கொண்டு விட்டன. குறிப்பாக ஆபிரிக்காவின் எரித்திரியா, சோமாலியா, கொங்கோலியா போன்ற நாடுகளில் இருந்துவருபவர்கள் தங்களின் தனித்துவத்தை இழந்து மேற்கத்தேய கலாசாரப் பாணியில் வாழ முற்படுகின்றனர். ஐரோப்பியர்களைப் போல் ஆபிரிக்கர்களும் வாழும் காலத்தை மகிழ்ச்சியாகக் கழிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார்கள். இந்த மகிழ்ச்சி எப்படிக் கிடைக்கிறது. தமது உழைப்பு தமக்கு மட்டும்தான் என்ற கோட்பாட்டு ரீதியில் வாழ்பவர்களால்தான் முடியும். நல்ல ஆடையணிகள், நல்ல உணவு , இரவுக்களியாட்டங்கள் என்பவற்றில் அதிக கவனம் செலுத்துகிறார்கள். அதிக பணம் பெறும் நோக்கில் இவர்களில் பலர் போதை வியாபாரங்கள் , பாலியல் தொழில்களிலும் ஈடுபடுகின்றனர்.

புலம்பெயர்ந்த இலங்கைத்தமிழர்கள் கடினமான உழைப்பாளிகள் எனப் பெயர் பெற்றிருக்கிறார்கள். கண்ணியம் மிக்க நடத்தை யுடையவர்கள் என்பதால் இலங்கைத் தொழிலாளர்களுக்கு புலம் பெயர் நாடுகளில் நன் மதிப்பு காணப்படுகிறது. புலம் பெயர்ந்த தமிழர்கள் கடினமான தொழில்களில் ஈடுபட்டு அதிகமாக வருமானங்களைப் பெற்றுக் கொண்ட போதும் ஐரோப்பியர்கள், ஆபிரிக்கர்களைப் போல ஆடம்பரமாக செலவு செய்து வாழ்க்கையை கொண்டு செல்வதில் ஆர்வம் காட்டுவதில்லை. தாம் புலம் பெயர்ந்து வாழ்கின்ற நாடுகளில் புதிய முயற்சிகளில் ஈடுபடுவதற்கான தயாரிப்புகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதுடன் தாயகத்தில் உள்ள உறவுகளுக்கும் தங்கள் வருமானத்தின்

ஒரு பகுதியை ஒதுக்கிக் கொள்கின்றனர். தாயக உறவுகளின் உயிரோட்டமான வாழ்வுக்கு புலம் பெயர் உறவுகளின் தார்மீக உதவி இன்றியமையாததாக இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கைத் தமிழர்கள் புலம்பெயர் நாடுகளில் கல்வி நடவடிக்கைகளில் ஆரோக்கியமாக ஈடுபட்டுவருகின்றனர். உலகின் பல மொழிகளையும் கற்று தேறியிருப்பதுடன் உயர்வான பதவிகளையும் படிப்படியாகப் பெற்று வருகின்றனர். புலம் பெயர்ந்து வந்த பெற்றோர்கள் தொழிலாளர்களாக இருக்க அவர் பிள்ளைகள் உத்தியோக நிலைக்கு உயர்ந்திருக்கிறார்கள். இது எதிர்காலத்தில் மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. மேற்கத்தேய கல்வியமைப்பில் ஒரு பிள்ளைக்கு பாடசாலைக்கல்வி மட்டுமே போதுமானதாக இருக்கிறது. சில பாடங்களில் பிள்ளைகள் குறைவான அடைவுகளைப் பெற்றிருந்தால் பாட ஆசிரியர்களே மேலதிக நேரம் ஒதுக்கி பரிகாரக் கற்பித்தலில் ஈடுபடுகிறார்கள். இலங்கைத் தமிழர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு பாடசாலைக் கல்வியோடு மட்டும் நின்று விடாமல் தற்பொழுது பிரத்தியேக வகுப்புக்களையும் நடாத்துகின்றனர். இன்னும் சில இடங்களில் தமிழர்கள் தனியார் கல்வி நிலையங்களையும் நடாத்தி வருகின்றனர். இந்தக் கல்வி நிறுவனங்களில் தமிழ் பிள்ளைகளுடன் வெளிநாட்டுப் பிள்ளைகளும் கற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

தாய்மொழியைப் பிள்ளைகளுக்கு கற்பித்தலில் பெற்றோர்கள் அதிக கவனமெடுத்து வருகின்றனர். புலம் பெயர் நாடுகளில் தமிழ்ப் பள்ளிக் கூடங்கள் இயங்கிவருகின்றன. பொதுப்பாடசாலைகளின் விடுமுறை தினங்களில் தமிழ்ப்பாடசாலைகள் இயங்குகின்றன. பெரும்பாலான பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை இந்தப் பாடசாலைக்கு அனுப்பிவருகின்றனர். தாய் மொழியில் பிள்ளைகள் நல்ல பரீட்சையம் பெற வேண்டும் என்பதுடன் தாய் மொழிப்பற்று, தாயகப்பற்று என்பவற்றை நீடித்து நிலைக்கச் செய்யவும் புலம் பெயர் நாடுகளின் தமிழ்க் கல்விச் சேவை சிறப்பான பங்களிப்பு செய்து வருவது குறிப்பிடத் தக்கதாகும். வெளி நாடுகளில் வாழும் தமிழ் பிள்ளைகள் தாங்கள் வாழும் நாடுகளுக்கேற்ப அந்நாடுகளின் மொழிகளைத் தெளிவாக எழுதவும் வாசிக்கவும் பேசிக் கொள்ளவும் கற்று விடுகின்றார்கள். ஆனால் வீடுகளில் பெற்றோருடன் தமிழில் உரையாட இடர்பாடுகளை எதிர்நோக்குகின்றனர். தமிழை எழுதிக்கொள்வதில் மேலும் சிக்கல்களை வெளிக்காட்டுகின்றனர். இவ்வாறான புலம்பெயர் சூழலில் தமிழ்மொழியை பயிற்றுவிக்க

ஆசிரியர்கள், பெற்றோர்கள் எடுக்கும் முயற்சிகள் பாராட்டப்பட வேண்டியதாகும். இலங்கைத் தமிழர்கள் எடுக்கும் இந்த முயற்சிகள் போல வேறு புலம்பெயர் சமூகங்கள் அக்கறை கொள்வதில்லை என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது. தமிழ்மொழியைக் கற்பிப்பதற்காக புலம்பெயர் நாடுகளில் பொதுவான பாடத்திட்டம், பாடநூல் பொதுப்பரீட்சை என்பன இருக்கின்றன. இலங்கை, இந்திய தமிழ் அறிஞர்கள் அவற்றைத் தயாரித்திருக்கின்றனர். வாரத்தில் ஒருநாள் நடைபெறும் இந்தத் தமிழ் வகுப்பில் உலகெங்கும் பல தமிழ் ஆசிரியர்கள் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

புலம்பெயர்நாடுகளில் வாழ்பவர்கள் பரதநாட்டியம், சங்கீதம் மற்றும் கீழைத்தேச, மேற்கத்தேச கலைகளைக் கற்பதிலும் ஆர்வம் காட்டி வருகின்றனர். தமிழ்ப் பெண்பிள்ளைகள் பரதநாட்டியத் துறையில் அதிக ஆர்வம் எடுத்துப் பங்கு பற்றிவருகின்றனர். இதற்காக இந் நாடுகளில் அதிகளவில் நடனப் பள்ளிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இலங்கை , இந்திய நடன ஆசிரியைகள் நாட்டிய பயிற்றுவிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். தமிழ்ப்பிள்ளைகளுடன் வெளிநாட்டுப் பிள்ளைகளும் பரதம் கற்பதில் இன்று ஆர்வம்காட்டி வருகின்றனர். நாட்டிய அரங்கேற்றங்கள் பல நாடுகளிலும் இடம்பெற்று வருகின்றன. பரதக்கலையில் தற்போது மேற்கத்தேய கலை மரபுகளையும் இணைத்து ஆடுகின்ற புதிய மரபொன்று புலம் பெயர்நாடுகளில் உருவாகிவருகிறது. பரதநாட்டியத் துக்கான பொதுவான பாடத்திட்டம், பாடநூல், பரீட்சை முறை என்பனவும் காணப்படுகின்றன. சில நடனப்பள்ளிகள் இலங்கை, இந்திய பரீட்சை முறையிலான பாடத்திட்டத்தையும் கொண்டு இயங்கி வருகின்றன. பரதநாட்டியம் தவிர சங்கீதம், மிருதங்கம், புல்லாங்குழல் போன்ற கீழைத்தேச இசைப்பயில்விலும் கிற்றார், ஒகன் போன்ற மேற்கத்தேய இசைகல்வியிலும் புலம்பெயர் தமிழர்கள் ஈடுபட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

புலம்பெயர் தமிழர்கள் இசை இறுவட்டுக்களை தயாரித்து வெளியிடுவதிலும் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். தமிழ்ப்பெண்ணான மாதங்கி மாயா அருள்பிரகாசம் மேற்கத்தேசப் பாணியிலான இசைத்துறையில் பல சாதனைகளைப் புரிந்து வருகிறார். இவரது பாடல்கள் உலகின் மிகப்பெருமைமிக்க விருதாகக் கருதப்படும் ஒஸ்கார் விருதுக்காகவும் பரிந்துரை செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இந் நாடுகளில் வாழும் இளந்தலைமுறையினர் பல நாடுகளிலும் இசைக்குழுக்களை உருவாக்கி இசை நிகழ்ச்சிகளை மேடையேற்றி வருகின்றனர். தமிழ்மக்களின் கொண்டாட்டங்கள், கலை நிகழ்ச்சிகளின்போது இவ்வாறான இசை நிகழ்வுகள் இடம்பெறுவது தவிர்க்க முடியாதளவுக்கு வலிமை பெற்றுள்ளன.

தமிழர் செய்திச்சேவைகள் புலம்பெயர் நாடுகளில் வேகமாக வளர்ச்சி பெற்றுவருகிறது. தாயகச் செய்திகளை உடனுக்குடன் அறிந்து புலம் பெயர் நாடுகளில் வாழும் மக்களுக்கு வழங்குவதில் ஊடகங்களின் பங்கு காத்திரமானதாக இருக்கின்றன. இணையத்தளங்கள், இணைய வானொலி, தொலைக்காட்சி, இணையத் தொலைக்காட்சி, பத்திரிகை என எல்லாத் துறைகளிலும் புலம்பெயர் தமிழர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இவ் ஊடகங்கள் தாயகச் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து இயங்கிக் கொண்டிருக்கும் அதேவேளைதமிழ் மக்களின் கலை கலாசாரங்களை ஊடுகடத்தவும் அவற்றை வளர்த்தெடுக்கும் பணிகளிலும் ஈடுபட்டுவருவது குறிப்பிடத் தக்கதாகும்.

விளையாட்டுத் துறைகளிலும் புலம்பெயர்ந்தவர்கள் சிறப்பாக ஈடுபட்டுவருகின்றனர். கோடைகாலம் தொடங்கியதும் கரபந்து, உதைபந்து, வலைப்பந்து, துடுப்பாட்டம் போன்ற விளையாட்டுக்களில் தமிழர்கள் விருப்புடன் ஈடுபட்டு வருகின்றனர். புலம் பெயர் நாடுகளில் பல விளையாட்டுக் கழகங்கள் உருவாக்கப்பட்டு மேற்படி விளையாட்டுப் போட்டிகளை ஆண்டு தோறும் நடாத்தி வருகின்றன. மெய்வன்மை விளையாட்டுப் போட்டிகள் பல இடங்களில் நடைபெற்று வந்ததாலும் அவ்விளையாட்டுக்களுக்கு போதிய பயிற்சிகள் வழங்கப்படுவதில்லை. தமிழ்ப் பெண்கள் இந்தத் துறைகளில் அதிக நாட்டம் கொள்ளாமல் இருக்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்ற வாக்குக்கு இணங்க புலம்பெயர் தமிழர்கள் வருமானம் பெறும் தொழிற்துறைகளில் தங்களை அதிகம் ஈடுபடுத்தி வருகின்றனர். தாம் சென்று குடியேறியுள்ள நாடுகளில் தமிழ்க் கடைகளைத் திறந்துள்ளனர். இலங்கை, இந்திய மற்றும் ஆசிய நாட்டுப் பொருட்கள் இக்கடைகளில் இன்று தாராளமாகக் கிடைக்கின்றன. கறிவேப்பிலையில் இருந்து வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு வரை கிடைக்கிறது. பலசரக்கு கடைகள், புடைவைக்கடை, நகைக் கடை என எல்லா வகையான கடைகளும் புலம்பெயர் நாடுகளில் திறக்கப்

பட்டுள்ளன. விற்பனைப் பொருட்களுக்கான விளம்பரங்கள் ஊடகங்களில் செய்யப்படுகின்றன. பல நாடுகளிலும் வர்த்தக விளம்பரங்கள் தாங்கிய தனியான விளம்பரப் புத்தகங்களும் மாதம்தோறும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. புலம்பெயர் நாடுகளின் தமிழ் மக்களின் விற்பனைப் பொருட்கள், விற்பனை நிலையங்கள், சேவைகள் என்பன தொலைக்காட்சி, மற்றும் தொடர்பு ஊடகங்கள் மூலமாக விளம்பரம் செய்யப்படுகின்றன. இந்திய சன்ரீவி தொலைக்காட்சி நிலையத்தாருடன் புலம்பெயர் தமிழர்களின் ஐங்கரன் இன்ரநஷனல் நிறுவனத்தினர் ஒப்பந்தமொன்றின் மூலமாக ஐரோப்பிய ஒளிபரப்பு உரிமையைப் பெற்றிருக்கின்றனர். இந்த தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் புலம்பெயர் தமிழர்களின் முயற்சிகளின் விளம்பரங்கள் அதிகளவில் காண்பிக்கப்படுகின்றன. இத்தொலைக்காட்சி விளைம்பரங்கள் புலம்பெயர் தமிழர்கள் மற்றும் இந்திய விளம்பர சேவையினரின் உதவியுடன் தயாரிக்கப்படுகின்றன. ஐரோப்பாவில் தீபம் தொலைக்காட்சி, G.T.V என்பனவும் இத்தகைய விளம்பர சேவைகளை மேற்கொண்டுவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

தொடர்பாடற் சேவைகளில் தொலைத்தொடர்பு விரிவாக்கல் முயற்சிகளிலும் வெளிநாடு வாழ் தமிழர்கள் ஈடுபட்டு வருகின்றனர். லைக்கா, லிபறா வெக்ரோன் எனப் பல நிறுவனங்கள் சர்வதேச தொலைபேசிச் சேவைகளில் ஈடுபட்டு தொலைபேசி அட்டைகளையும் மீள்நிரப்பு அட்டைகளையும் தயாரித்து வருகின்றன. ஐரோப்பிய தமிழர்கள் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு தொலைபேசி அழைப்புகளுக்கு இந் நிறுவனங்களின் சேவைகளையே அதிகளவில் பயன்படுத்தி வருகின்றனர். தற்போது ஐரோப்பியர்கள், மற்றும் ஆபிரிக்கர்களும் இச்சேவைகளைப் பெற்றுக் கொள்வது குறிப்பிடத்தக்கது.

தாயக மண்ணை விட்டு தூரதேசங்களில் இவர்கள் வாழ்ந்தாலும் தங்களின் கலாசார பண்பாடுகளைப் பாதுகாப்பதுபோல புதிய முயற்சிகளிலும் ஈடுபட்டு தமிழ் மண்ணின் மணம் உலகெலாம் பரவுவதற்கு இவர்கள் எடுத்துக் கொள்ளும் முயற்சிகள் பாராட்டுதற்குரியன. தாயக மண்ணில் அமைதி பிறந்து அங்கு ஒரு இயல்பு வாழ்க்கை திரும்புமாயின் இந்தப் புதிய முயற்சிகள் அங்கும் தொடரும். அந் நன்நாளுக்காக புலம் பெயர் தமிழர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

புலம்பெயர்ந்த தமிழர்கள் தங்கள் நிலம் சார்ந்த கருத்துப்படைப்புக்களை நாடகங்கள், இலக்கியங்கள் மற்றும் வேறு கலை வடிவங்களூடாக வெளிக்கொணருகின்றனர். தொலைக்காட்சிகளுக்கான

நாடகங்கள், குறும்படங்கள், திரைப்படங்கள், திரைப்படத்துக்கான இசையமைப்பு போன்ற கலைத்துறைகளிலும் தங்களை சிறப்பாக ஈடுபடுத்தி வருகின்றனர். புலம்பெயர் தமிழரான ஜெஆகாஸ் இன்று தென்னிந்தியாவில் பல தமிழ், மலையாளப் படங்களில் கதாநாயகனாக நடித்துப் பாராட்டுப் பெற்றுள்ளார். இராமேஸ்வரம் படத்துக்கான இசையமைப்பு, கோடம் பார்க்கம் படத் தயாரிப்பு போன்ற பணிகளிலும் புலம்பெயர் தமிழர் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. தென்னிந்திய தமிழ் முன்னணி நடிகர்கள் நடித்துள்ள திரைப்படங்களை புலம்பெயர் தமிழர்கள் வாங்கி அவற்றை தாம் வாழும் நாடுகளில் திரையிடுகின்றனர்.

புலம்பெயர் தமிழர்களின் கலைப்படைப்புக்களில் சிறுகதை , கவிதை, நாவல் இலக்கியங்களில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. உலகெங்கும் இன்று கலைக்கழகங்கள், இலக்கிய வட்டங்கள் என உருவாக்கப்பட்டு இலக்கிய எழுத்தாளர்கள் தங்கள் படைப்புக்களை வெளிக் கொணர்ந்தவண்ணம் இருக்கின்றனர். இவர்களது இந்தப் படைப்புகள் தாயக, புலம்பெயர் மண் வாசனைகளை வெளிக்காட்டுவதாக இருக்கின்றது.

புலம்பெயர் நாடுகளில் தமிழ்மக்களால் பல இந்துக்கோவில்கள் கட்டப்பட்டு அவற்றில் திருவிழாக்கள் மிகச் சிறப்பாக செய்யப்படுகின்றன. திருவிழாக் காலங்களில் தேர், காவடி, தூக்குக்காவடி என்பவற்றை வெள்ளை இனத்தவர்களும் கண்டுகளிக்கின்றனர். தாயகத்தின் ஊரை அப்படியே தூக்கி புலம்பெயர்ந்த நாடுகளில் வைத்துவிட்டது போல் ஒரு உணர்வை கோவிற்திருவிழாக்கள் ஏற்படுத்துகின்றன.

5

# வீதி

இலங்கையில் இனமுரண்பாட்டு சூறாவளிக்குப்பின் தமிழ் மக்களின் வாழ்விடங்கள் படிப்படியாகத் தமது தோற்றப் பொலிவை இழந்து வருகின்றன. தாயகத்தின் அமைதியான வாழ்க்கையையும் யுத்தம் எவ்வாறு அவற்றை மாற்றிவிட்டது என்பதனையும் தாயக புலம்பெயர் இளைய தலைமுறையினர் அறிந்து கொள்வது அவசியமாகிறது. தமிழ் மக்களின் வரலாற்று கலாசார தடயங்கள் பற்றி அறிந்து கொள்வதும் அவற்றைப் பாதுகாத்துக் கொள்வதும் ஒவ்வொருவருக்குமுள்ள சமூகக் கடமையாகும். தாயக புலம்பெயர் நாடுகளில் வாழ்கின்ற பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் மற்றும் புதிய தலைமுறையினருக்குத் தமது வாழ்விடங்கள் பற்றிய அன்றையதும் இன்றையதுமான நிலைமைகளைத் தெளிவாக விளங்கச் செய்தல் வேண்டும்.

கொக்கரக்கோ .......... சேவல்கள் கூறும் தலைப்புச் செய்தி
ரிரி ரீரி .......... ஆட்காட்டிக் குருவியின் அவசர அறிக்கை
கூ.. கூ .......... குயில்கள் குறிப்பிடும் இன்னிசைக் குறிப்பு
கா... கா ......... காகங்கள் சொல்லும் உணவுக் குறிப்பு
வவ்... வவ் ......... நாய்கள் சொல்லும் நன்றியறிதல்

தென்னங்கீற்று பனையினில் மோதி மாமரத்தோப்பின் வாசனை கிளறும் பலாமரச்சோலையில் பச்சை முள் தபாற்பெட்டிகள் அதில் காதல் கடிதங்களை காகங்கள் தேடும். தங்கநிலவு தென்னையில் மறைய காலைக்கதிரவன் கடலினில் முளைக்க மீண்டும் ஒரு புதிய நாள் அமைதியாய் பிறக்கும்.

இந்த இயற்கையின் அமைதியான மெல்லிய விடியல்களில் நான் மகிழ்ச்சியாக சுதந்திரமாகக் காலாற அந்த வீதிகளில் நடந்திருக்கிறேன். இயற்கைப் பிராணிகளின் ஒலியின் ராகங்கள் காலைக் காற்றுடன் இரண்டறக் கலந்து என் காதுகளில் கானம் பாடிச் சென்றிருக்கிறது. தென்னங்கீற்றில் ஆரோகணம், பனைமரக் காற்றில் அவரோகணம் இந்த சங்கீதப் புயலில் நான் சிக்கித் தவித்திருக்கிறேன். பழமரச்சோலையின் வாசனை, பூமரச் சோலையில் நறுமணம் இந்த வாசனை நறுமணப் போதையில் நான் தள்ளாடித் தளர்நடை பயின்றிருக்கிறேன். ஆகா! இந்த இயற்கை எத்தனை கவிகளை தத்துவங்களை எனக்குக் கற்றுத் தந்திருக்கிறது.

இன்றும் சில நடைகளுக்குப்பின் நகரத்துக்கு வந்துவிடுகிறேன். இப்பொழுதுதான் நகரம் பூக்கத்தொடங்குகிறது. கடைகள் தங்கள் கதவு இதழ்களை அகல விரிக்கத் தொடங்குகின்றன. நாலாதிசையிலிருந்தும் மனித வண்டுகள் மொய்க்கத் தொடங்குகின்றன. பூக்கள் விரிவது வண்டுகளுக்காக. சந்தைகள் விரிவது மக்களுக்காக பூக்களில் வண்டு இருந்தால் பூ காயாகும் காய் கனியாகும். கடைகளில் மக்கள் இருந்தால் பணம் காய்க்கும் மனம் கனியாகும்.

நான் நடந்துவந்த பாதையும் முன்னே காண்கின்ற நகரமும் கண்டி வீதியில் (A9 வீதியில்) 189ஆவது மைல்கல்லில்தான் இருக்கிறது. இருந்தாலும் யாழ்ப்பாணத்துக்கு அருகில்தான் சாவகச்சேரி. என்வீட்டு வாசலின் முகவரியைச் சொல்வதற்கு அந்தமான் தீவின் சிறைக்கூடத்தைக்

குறிப்புச் சொல்ல வேண்டியிருக்கிறது. கண்டியைக் கண்டுவர கனநாள் ஆசை எனக்குள் புதைந்து கிடக்கிறது. கண்டித்தமிழ் மன்னர்கள் அவர்களின் போர் வீரங்கள் பற்றியெல்லாம் ஆசிரியர் சொல்லித் தந்திருக்கிறார். அவர்கள் எழுதிய தமிழ்க் கையெழுத்துகள் பாவனைப் பொருட்கள் எல்லாம் இன்றும் அங்கிருக்கிறதாம். பார்த்துவர ஆசைதான் என்ன செய்வது? கண்டி வீதியால் கண்டிக்குத்தானே போகலாம். கொழும்புக்குப் போகிறவர்கள் ஏன் இங்கு நிற்கிறார்கள் எனப் பல நாட்கள் எனது மூளையைப் போட்டுக் குழப்பியதுமுண்டு. உள்ளவர்கள் தானே அதனையும் குழப்பலாம். நான் எப்படி? என்று சிந்தித்ததுமுண்டு. ஏனென்றால் நான் பள்ளி செல்லும் சிறிய மாணவன். கண்டி வீதியால் பயணம் செய்து யாழ்ப்பாணம் சென்று சங்கிலி மன்னனின் அரண்மனை வாயில் அவனது சிலை என இன்னும் வேறு பல வரலாற்றுத் தடங்களையும் பார்த்து வரலாம். கடந்துபோன காலங்களை அறிந்து கொள்ளத் துடிக்கும் நிகழ்கால ஆர்வலன் நான். அதற்கு முதல் சந்தையுள் நுழைந்து சங்கதிகண்டு மீண்டுவந்து யாழ்நகர் போகலாம்.

குடாநாடு என்றுதான் பெயர். ஆனால் சந்தையுள் எல்லோரும் கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். யாழ் குடா நாட்டில் சாவகச்சேரிச் சந்தை மிகவும் பிரபல்யமானது. சனி, செவ்வாய், வியாழன் ஆகிய நாட்களில் இந்த நகரம் மிகவும் சுறு சுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கும். சில்லறை வியாபாரிகள் முதல் மொத்த வியாபாரிகள் வரை போட்டி போட்டு களத்தில் தமது திறமைகளையும் தந்திரங்களையும் தெளிவாகக் காண்பித்துக் கொண்டிருப்பர். நீர்கொழும்பிலிருந்து தேங்காய், தம்புள்ளையிலிருந்து மரக்கறிகள். நாகர்கோயில், தாளையடி, பருத்தித்துறை , கேரதீவு என இன்னும் பல ஊர்களிலிருந்து மீன்கள் பூநகரியிலிருந்து மொட்டைக்கறுப்பன், தேன், பாலைப்பழம், கோப்பாய், உரும்பிராய், கச்சாய், வேம்பிராய், மந்துவில், மட்டுவில் என எல்லா ஊர்களிலிருந்தும் காய்கறிகள் வந்துகுவியும். இந்தச் சில்லறைச் சந்தையின் மொத்த சனசமுத்திரத்துக்குள் நான் சிறுவனாகப் புதினம் பார்க்க அலைந்து திரிந்திருக்கிறேன். பல நாட்கள் சனநெரிசலில் அகப்பட்டுப் பாதைமாறிப் பரிதவித்திருக்கிறேன்.

தேங்காய், அரிசி, மிளகாய், வெங்காயம் , மரக்கறியென ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக இடங்கள். அதனிடையே சில பெண்கள் அப்பம், தோசை, பிட்டு எனக் கூவிக்கூவி விற்பனையில் ஈடுபட்டுக்

கொண்டிருக்கின்றனர். வேறுசிலர் பல வர்ணங்களாலான குடிபானங்களை விற்பதற்காக சரதங்க மணி ஒலியெழுப்பி விற்றுக் கொண்டிருக்கின்றனர். அருகிலே சில சிறுவர்கள் உதடுகளை நனைத்தபடி வாயில் கண்ணாடிக் குவளையை வைத்து மெதுவாக உறிஞ்சிக் ருசித்துக் கொண்டிருக்க அவர் தந்தையர் அவர்களை ரசித்துக் கொண்டிருக்கின்றனர். அருகில் ஒருவன் மணலிலே துணியை விரித்து துணியிலே சிறு போத்தல்கள் வைத்து இந்தத் தைலங்கள் எல்லா வியாதிகளையும் குணப்படுத்துவதாகச் சொல்லிக் கொண்டிருக்கின்றான். அவன் மட்டும் ஏனோ நோயினால் முகம் வாடியிருந்தான். இன்னோரிடத்தில் ஒரு உயரமான மனிதர் வெள்ளை நிற மேனியர் ஐரோப்பியர் பாணியில் நிற்கிறார். எனக்கு அது வித்தியாசமான புதினம். எல்லா நோய்களையும் குணப்படுத்தும் அபூர்வத் தைலம் என்று வாய்க்குள் தைலம் விட்டு தமிழ் கதைத்தாற்போல் பேசிக் கொண்டி ருந்தார். அந்த வெள்ளை மனிதனிடம் எங்கள் மக்கள் தைலத்தை வாங்க முண்டியடித்துக் கொண்டிருக்கின்றனர். இந்த ஊருக்கு ஏன் சாவகச்சேரி எனப் பெயர் வந்தது தெரியுமா? என அந்த மண்ணில் பிறந்தவர்களைப் பார்த்து கேட்டுக் கொண்டிருந்தான். அவன் சொல்லப்போகும் விடைக்காக அவனது முகத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டி ருக்கிறேன். முன்பு இந்நகரத்தில் யாவாத் தீவிலிருந்து (இந்தோனேசியத் தீவுக்கூட்டத்தில் ஒன்று) வியாபாரிகள் வருகை தந்தனர் எனவும் அவர்கள் இந்நகருக்கு புறத்தேயுள்ள சேரியில் தங்கியிருந்தனர் என்றும் ஊரின் பெயருக்குக் காரணம் கூறிக்கொண்டிருந்தான். யாவகச்சேரி பின்னர் சாவகச்சேரி என தமிழில் மாற்றம் பெற்றிருக்கிறது எனவும் அவன் மேலும் விளக்கம் சொல்லிக் கொண்டிருந்தான். (யாவகத்தீவை தமிழில் சாவகத்தீவு எனவும் அழைப்பர்) இந்தச் சந்தைக்கு இந்தியா, மலேசியா போன்ற நாடுகளிலிருந்தும் வியாபாரிகள் வருகை தந்திருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மறுபுறத்தில் வித்தை காட்டுவோர், சாத்திரம் சொல்வோர், பாசிமணி ஊசிமணி விற்போர் எனப்பலரும் தத்தமது திறமைகளை வெளிக்காட்டிக் கொண்டிருக்கின்றனர். ஒருவன் கண்ணாடியை உடைத்து அதன் துகள்களையும் வேறு சிலகற்களையும் விழுங்கிக் கொண்டி ருக்கிறான். இன்னொருவன் தனது உடலிலே தீயினால் சூடுபோட்டுக் காட்டிக்கொண்டிருக்கிறான். அவர்கள் பணத்துக்காக நிலத்திலே விரித்து விட்ட துணிவலையில் சிலர் சில்லறைகளை விட்டெறிந்து கொண்டிருக் கின்றனர். இன்னொரு இடத்தில் பாம்பாட்டம், குரங்காட்டம் நடைபெற்றுக்

கொண்டிருக்கின்றது. தன்னிலும் பெரிய யானையைப் பிடித்து பிச்சை எடுக்கக் கற்றுக் கொடுத்தவனல்லவா மனிதன். அவனுக்கு பாம்புக்கும் குரங்குக்கும் ஆட்டம் பழக்குவதென்ன கடினமா? ஆடுவதற்குக் கற்றுக் கொடுத்து கூடவே கைநீட்டிப் பிச்சை எடுக்கும் மனிதப்பாணியைக் குரங்குக்கும் பழக்கிவிட்டான். மலடி பெத்த பிள்ளையை மட்டும் காட்சிக்கு வைக்கவில்லை. ஆனால் விலைகள் மட்டும் பேசப்படுகின்றன.

சந்தையின் நடுவே ஒரு மரநிழலில் இசைக்கச்சேரி இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. தபேலா, ஆர்மோனியம் என்பன இசைமுழங்க ஒருவன் பாடிக் கொண்டிருக்கிறான். இன்னொருவன் பணத்தை வசூல் செய்து கொண்டிருக்கிறான். இந்தச் சந்தையின் தந்திரவியாபாரங்கள் தான் எனக்குத் தொழிலுலகைத் தெளிவாகத் தோலுரித்துக் காட்டித் தந்தது.

அருகிலே மீன்சந்தை ஆரவாரப்பட்டுக் கொண்டிருக்கிறது. சமுத்திரத்து மீன்களையெல்லாம் அள்ளிக்கொட்டிவிட்டாற்போல் இந்தச்சந்தையில் மீன்கள் பரவிக்கிடக்கிறது. துள்ளிக் குதிக்கும் இறால்கள் நகரத் துடிக்கும் நண்டுகள். புரண்டு நெளியும் மீன்களென கடல்வாழ் உயிரிகளால் அலங்கரிக்கப்பட்டுக் கிடந்தாலும் மக்கள் என்னவோ அமர்க்களப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். மீன்களின் பெருமைபற்றிப் பேசும் விற்போர் அவற்றின் குறைகளைச் சுட்டிக் காட்டும் கொள்வோர். இவர்களின் ஜனநாயகப் பேரம்பேசல்கள் காதுகளின் செவிப் பறைகளை வெடிக்க வைக்கத்தான் செய்கிறது. விற்பனைப் போட்டிகள் வியாபாரச் சண்டைகள் என்பவற்றைக்கண்டு நான் பயந்திருக்கிறேன். நற்றமிழ், கொடுந்தமிழ் என்பவற்றைத் தாராளமாய்க் கேட்டிருக்கிறேன். இந்தச் சந்தைதான் எனக்கு மானிட முரண்பாடுகளையும் அவற்றுக்கான தீர்வுகளையும் கற்றுத் தந்திருக்கிறது.

சிக்குபுக்கு..... சிக்குபுக்கு என ஓடும் புகையிரதத்தின் ஒலி காதை அதிரவைக்கிறது. கூட்டத்திலிருந்து இடிபட்டு நெருக்குப்பட்டு விலகிச் சத்தம் கேட்கும் திசையைநோக்கி ஓடுகிறேன். என்ன பிரமாதம். பல பெட்டிகளை இணைத்து ஓடும் யாழ்தேவி தொடரூந்தல்லவா அது. தமிழர் சிங்களவர் முஸ்லீம்கள் மற்றும் வெளிநாட்டினரென அனைவரையும் அழைத்துச் செல்லும் சமாதானப் புறாவாக அதனைப் பார்க்கிறேன். உலக அதிசயங்களைப் பார்த்துவிட்டது போல் ஒரு பூரிப்பு

மெல்ல நடந்து பேரூந்து நிலையத்துக்கு வருகிறேன். யாழ்ப்பாணம், கொடிகாமம், கீரிமலை, கண்டி, திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு என நான் எழுத்துக்கூட்டிப் படித்ததெல்லாம் பேரூந்துகளின் செல்லுமிட அறிவுப்புக்களிலிருந்துதான் ஈழதேசத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் இந்நகரிலிருந்து மக்கள் சென்று வந்துகொண்டிருந்தனர். சில நடமாடும் வியாபாரிகள் வடை, முறுக்கு, சுண்டல் எனக் கூவிக் கூவி விற்றுக் கொண்டிருக்கிறார்கள். வேறு சிலர் கச்சான்... கச்சான்....என முணுமுணுத்துக் கொண்டிருக்கின்றனர். இன்னொருவர் பனங்கிழங்கு பனங்கிழங்கு எனக் கூச்சலிட்டு விற்றுக் கொண்டிருக்கிறார். இது மட்டுமா? இன்னும் சீப்பு சோப்பு கண்ணாடி பலூன் ...பலூன்... பேப்பர்... பேப்பர்.... இப்படி எத்தனை வியாபாரிகள் பேரூந்து நிலைய பயணிகளிடையே தங்கள் வியாபார திறமைகளை வெளிக்காட்டிக் கொண்டிருக்கின்றனர். பங்குனி வெயில் உடலை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கின்றது. பயணிகளின் தாகத்தை அடக்க தண்ணீர் தொட்டி போல பேரூந்து நிலையத்தில் சிறு கிணறு. இந்தக் கிணறு பற்றி ஆசிரியர் கூறிய கதை ஒன்று நினைவுக்கு வருகிறது. இதுவொரு கோயிற்கிணறு. ஆனால் இப்போ அந்தக் கோயில் இல்லை. முன்னைய காலத்தில் பெரிய சிவன்கோயில் இருந்ததாகவும் அந்தக் கோவிலை அந்நிய ஆட்சியாளர்கள் இடித்து அழித்து விட்டனர் எனவும் அந்தக் கோயிலின் கிணறே இதுவெனவும் குறிப்பிட்டிருந்தார். இப்போதுள்ள சந்தை, நகரசபை, நீதிமன்றம், என்பன அமைவுபெற்றுள்ள நிலம் முன்பு சிவன் கோயிலும் அதனைச் சூழ்ந்த கோயிற் காணியாகவும் இருந்திருக்கிறது.

பேரூந்து நிலையத்துக்கு எதிரே ஆங்கிலேய ஆட்சியாளர்களால் கட்டப்பட்ட டிறிபேக் கல்லூரி அழகாய் காட்சிதருகிறது. உள்ளூர் வெளியூர்களிலிருந்து ஆயிரக்கணக்கான மாணவ மாணவியர் வருவது வண்ணப் பறவைகளின் ஒன்றுகூடலுக்கு ஒப்பாக இருக்கும். பல கல்விமான்களை உருவாக்கி இந்த உலகத்துக்கு அளித்திருக்கிறது. எத்தனை மானிடர்களின் அறிவுப்பசிக்கு விருந்தளிக்கிறது.

பேரூந்து தரிப்பிடத்தின் மூலைகளில் விளம்பரங்கள் ஒட்டப்பட்டிருக்கின்றன. அவற்றில் சினிமா விளம்பரங்கள் பெரியளவில் காட்சி தருகின்றன. இந்த நகரத்தில் இரண்டு திரையரங்குகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. திரைப்படங்களைப் பார்க்க மக்கள் கூட்டம் கூட்டமாக வருவதும் நீண்ட வரிசைகளில் நின்று நுழைவுச் சீட்டுக்கள்

பெற்றுக் கொள்வதும் வழக்கமாக இருக்கிறது. ராஜராஜசோழன், உலகம் சுற்றும் வாலிபன் எனப் பல வெற்றிப்படங்கள் இங்கு திரையிடப் பட்டிருக்கின்றன. தமிழ் மன்னர்களின் படையெடுப்புகள் வேறு நாடுகளைக் கைப்பற்றல் என அவர்களின் வீரதீர வரலாறுகளை நான் சினிமாக் கொட்டகைகளில்தான் பார்த்து அறிந்திருக்கிறேன். இந்த நகரப் புதினங்களே இன்றைய நாளை நிறைவுக்குக் கொண்டு வந்துள்ளதால் நாளைய பொழுதே யாழ் நகரைத் தரிசிப்பதற்குச் சந்தர்ப்பத்தைத் தருகிறது. அதுவரை நான் மாலைத் தென்றலில் உடல் நனைத்து கொஞ்சம் உள்ளத்துக்கும் ஓய்வளிப்போம்.

இன்னும் சிறிது நேரம் சிறுவர் பூங்காவில் இளைப்பாறி நூலகத்தில் சில வாசிப்புகளுடன் கடற்கரையில் காலாற நடந்து காற்று வாங்கி இன்றைய பொழுதுக்கு விடை கொடுப்போம்.

சாவகச்சேரியிலிருந்து A9 வீதி வழியாக 13 கி.மீற்றர் பயணித்தால் யாழ் நகர் வந்துவிடும். அதிகாலைப் பொழுதின் மென்மையான விடியல்களில் மிதிவண்டியில் பயணிப்பது உடலுக்கும் உள்ளத்துக்கும் புது ஆரோக்கியத்தைப் பாய்ச்சுகிறது. காலை இளந்தென்றல் என்னுடலைத் தழுவிச் செல்ல வானப்பறவைகளின் கானங்கள் காதுகளுக்கு இன்பம் சேர்க்க கோவில் மணியோசை பக்திப் பெருக்கினைப் பாய்ந்தோடச் செய்ய இந்த இனிமையான வைகறையில் மிக எளிமையாக எனது பயணம் மீண்டும் தொடர்கிறது.

நுணாவில் மட்டுவில் கடந்து செல்ல கைதடிப் பெருவெளி வருகிறது. காற்று பலமாக வீசுகிறது. குருவிகள் இயற்கையின் அமைதியை மெல்லக் கிழித்து சந்தங்கள் பாடிக்கொண்டிருக்கின்றன. தென்றற்காற்று தேசிய கீதத்தின் நாதந்தந்து என் தேசத்தின் பற்றுக்கு உரமிட்டுச் செல்கிறது. அதோ சற்றுத் தூரத்தில் வெளிச்சம் அது தீப்பந்த ஒளிதான். கொஞ்சம் மெல்ல நகர காற்றிடைவெளியில் அரோகரா..... முருகனுக்கு அரோகரா..... என்று பக்தர்களின் கோசம் இருள் விலகும் நேரத்தில் இந்த வெளியின் அமைதியை ஊடறுத்து என் காதுகளுக்கு முத்தியின்பத்தைத் தருகிறது.

தீப்பந்தம் ஏந்தியவர் முன்னே நடக்கிறார். வேறு சிலர் தேவாரம்பாடிப் பின்னே செல்கின்றனர். இன்னும் சிலர் மத்தளம், உடுக்கு, தாளம் என இசைமீட்டிச் செல்கின்றனர். இந்தப் பக்தர்கள் கூட்டத்தில் ஆண்கள் பெண்களென சுமார் இருபது பேர்களாவது இருப்பார்கள்.

இவர்களுக்கு என்ன வேண்டுதலோ? என்ன நேர்த்திக் கடனோ? ஆனால் இந்த இரவுகளில் விடியல்களில் இவர்கள் தைரியமாய் சுதந்திரமாய் இந்த வீகளில் நடந்திருக்கின்றனர். நடந்து கொண்டிருக்கின்றனர். நல்லூர் கந்தன் கோயிலுக்குப் பல ஊர்களிலிருந்தும் பக்தர்கள் பஜனை பாடிக்கொண்டு பாதயாத்திரையாகச் செல்வது வழக்கமாக இருக்கிறது. அப்படியொரு பஜனைக் குழுவினையே இப்போது நான் கடந்து சென்று கொண்டிருக்கிறேன். இவ்வாறான பக்தர்கள் கூட்டம் நல்லூருக்கு மட்டுமல்ல நயினாதீவு நாகம்மாள், சந்நிதிமுருகன், கதிர்காமக்கந்தன் எனப்பல ஆலயங்களுக்கும் கால்நடையாகச் சென்றிருக்கிறார்கள். கதிர்காமத் தமிழ்க் கடவுள் முருகனை வழிபட யாழ்ப்பாண அடியார்கள் கடற்கரை வழியாகவும் காட்டுப்பாதைகளூடாகவும் பல நாட்களாக நடந்து சென்றிருக்கிறார்கள்.

A9 வீதியால் பயணிப்பவர்களுக்கு கைதடிப்பாலத்தை நன்கு தெரியும். இந்த வெளியும் பாலமும் மழைகாலத்தில் மிக அழகாகக் காட்சிதரும். நீண்ட பெரும்பாலம் இது. இப்பாலந்தான் வலிகாம மக்களையும் தென்மராட்சி மக்களையும் இணைக்கும் உறவுப்பாலம். இந்த நீண்ட நெடும்பாலம் இந்த இடத்தில் அமைவு பெற்றிருக்கத் தேவையில்லை. கோப்பாய் வெளியில் அமைக்க வேண்டிய பெரியபாலத்தை கைதடி வெளியிலும் கைதடி வெளியில் அமைக்க வேண்டிய சிறிய பாலத்தை கோப்பாயிலும் தவறுதலாகக் கட்டி முடித்து விட்டார்கள். இத் தவறினை உணர்ந்து கொண்ட பொறியியலாளர் மனமுடைந்து தற்கொலை செய்து கொண்டதாக அறியப்படுகிறது. அவர் நினைவாக கைதடிப்பாலத்தில் அவரின் பெயர் பொறிக்கப்பட்டிருந்த தாகவும் எனது ஆசிரியர் எனக்குக் குறிப்பிட்டிருந்தமை நினைவுக்கு வருகிறது. இந்தப் பாலம் இடம்மாறிக் குறிக்கப்பட்டிருந்தமை நினைவுக்கு வருகிறது. இப் பாலம் இடம்மாறிக் கட்டப்பட்டிருந்தாலும் இலங்கையின் எந்தப் பாலத்துக்கும் இல்லாத பெருமை இதற்குண்டு. கட்டியவர் பெயர் பொறிக்கப்பட்ட பாலம் இது ஒன்றுமட்டும்தான் என்பதும் சிறப்புக்குரியது. பின்னாளில் பாலத்தின் மறுசீரமைப்பின் பின் அவரின் பெயர் மறைக்கப்பட்டு விட்டது. இந்தப் பாலம் அதனைச் சார்ந்த வெளி தொடர்பாக பல நாடோடிக்கதைகளும் முன்னோரால் கூறப்பட்டுவந்தன. பேய், பிசாசு, முனி தொடர்பான பயம் மிக்க கதைகள் பலவுண்டு. இராக்காலங்களில் இந்தப் பாலத்தால் தனியாகப் பயணிப்பவர்கள் பேய்களைக் காண்பதாகவும் பலர் பாலத்தருகில் இறந்திருக்கிறார்கள்

என்றும் அறியப்படுகிறது. ஒரு பெண் தனியாக இரவுகளில் கைக்குழந்தையுடன் நடந்து திரிந்ததாகவும் வீதியால் வருபவர்களிடம் குழந்தையைக் கொஞ்சம் பிடிக்கச் சொல்லிக் கேட்பதாகவும் இரக்கப்பட்டு யாராவது வாங்கினால் அந்தப் பெண் மாயமாய் மறைந்துவிடுவதுடன் குழந்தையை வாங்கியவர் இறந்து விடுவதாகவும் கதைகள் இருந்தன. இவ்வாறான கதைகளைக் கேட்டுப் பல நாட்கள் பகலில் கூட இப்பாலத்தைக் கடக்க நான் பயந்திருக்கிறேன். இப்போது நான் உயிர்வாழப் பேய்களுக்கு மட்டுமே பயம் கொள்வதில்லை.

பாலத்துக்குச் சற்றுத்தொலைவில் கோயில், குளம், மடம் என்பன காணப்படுகின்றன. மடம் கைவிடப்பட்டு பலவருடங்களாகிவிட்டது. முற்காலங்களில் இந்தப் பாதையால் பயணிக்கின்ற வழிப் போக்கர்கள் இந்த மடத்தில் தங்கி இளைப்பாறி உணவருந்திச் சென்றிருக்கிறார்கள். நவீன போக்குவரவு சாதனங்களின் பயன்பாட்டுக்குப் பின் மடங்களின் பயன்பாடும் பயனில்லாமற் போய்விட்டது. உண்டியும் உறையுளும் கொடுத்து ஆதரித்த சத்திரம் இன்று ஆதரிப்பார் போற்றுவார் யாருமின்றி அநாதையாய்க் கிடக்கிறது. தமிழ் மக்களின் கலாசாரங்கள் நம்பிக்கைகளில் இந்த மடங்கள் சுமைதாங்கிகள் முக்கிய இடம் பெற்றிருக்கின்றன. சமூக சேவையாக கிராமத்தவர்கள் ஒன்றுகூடி மடங்களைக் கட்டி அதில் உணவுகொடுத்து வழிப்போக்கர்களுக்கு உதவி செய்திருக்கிறார்கள். இதைச் சமூகத் தொண்டாகக் கருதி அவர்கள் செயற்பட்டிருக்கிறார்கள். தனிப்பட்டவர்களும் நேர்த்தி வைத்தோ அல்லது நன்றிக் கடனாகவோ அவற்றைக் கட்டியிருக்கிறார்கள். சுமைதாங்கிகள் பாதசாரிகள் தலையிலே சுமந்து வருகின்ற பாரமான பொதிகளைச் சற்றுக்குனிந்து சுமைதாங்கியிலே இறக்கிவிடுவார்கள். சற்றுக் களைப்பாறியபின் மீண்டும் சுமைதாங்கியுடன் தலையைக் கொடுத்துப் பொதிகளைத் தலையில் எடுத்துக் கொள்வார்கள். பாரத்தைத் தூக்கவும் இறக்கவும் மற்றவர்களின் உதவிகள் தேவைப்படவில்லை. சுமைதாங்கிகள் அவற்றைச் செய்து கொண்டன. சமூகசேவை நோக்கில் கட்டப்பட்ட சுமைதாங்கிகளும் மடங்களும் யாழ்ப்பாணத்தின் எல்லாப் பிரதான வீதிகளிலும் காணப்பட்டன. இன்று அவற்றில் பெரும்பாலானவை அழிந்துவிட எஞ்சிநிற்பவை மட்டும் பழைய வரலாற்றுக்குச் சாட்சிகளாகியுள்ளன. இவை பாதுகாக்கப்பட வேண்டும். எதிர்கால சந்ததியினருக்கு அவை தமிழ் மக்களின் கலாசாரங்களின் காட்சிகளாகவும் சாட்சிகளாகவும் இருப்பதற்காக கையளிப்பது காலத்தின் தேவையாகும்.

இந்த ஊருக்குக் கைதடியென்று பெயர்வருவதற்கும் இவ்விடமே காரணமாகி நிற்கிறது. போர்த்துக்கேயர் காலத்தில் இந்துக் கோயில்கள் பல அழிக்கப்பட்டிருக்கின்றன. அப்போது இப்பகுதியிலிருந்த பிள்ளையார் கோயிலும் இடித்தழிக்கப்பட்டிருக்கிறது. பக்தர் ஒருவர் மூலஸ்தான பிள்ளையார் விக்கிரகத்தை மண்ணில் புதைத்து விட்டிருக்கிறார். பிற்காலத்தில் மண் அகழ்பட்டபோது அப்பிள்ளையார் சிலையின் கைதறிபட்டு விட்டது (வெட்டப்பட்டு விட்டது) கைதறி என்பது பின்நாளில் கைதடியென மருவிவிட்டது என இவ்வூர் வாழ் மக்கள் குறிப்பிடுகின்றனர். யாழ்ப்பாணத்திலிருந்து இலங்கையின் தென்பகுதிகளுக்குச் செல்லும் பயணிகள் கைதடிப்பிள்ளையாரையும் முருகண்டிப்பிள்ளையாரையும் வழிபட்டுச் செல்வது வழக்கமாக இருந்து வருகிறது. பிள்ளையாரை வழிபட்டு மிதிவண்டியில் நாலுமிதி மிதிக்க கைதடிச் சந்தி வந்துவிடுகிறது. "மண்ணானாலும் திருச்செந்தூரில் மண்ணாவேன்" என்ற பாடல் என்னை அன்புடன் வரவேற்க ஆரியபவான் உணவுக் கடைக்குள் நுழைகிறேன். யாழ்ப்பாணத்தின் பல இடங்களிலும் ஆரியபவான் வடை பிரபல்யம் பெற்றிருந்தது. வடை என்றால் ஆரியபவான் என்றளவில் விளம்பரம் இருந்தது. விளம்பரம் மட்டுமல்ல உண்மையும் அதுதான். இந்தியர்கள் குறிப்பாக மலையாளிகள் பலர் யாழ்ப்பாணத்தின் பல இடங்களிலும் சாப்பாட்டுக் கடைகளை நடாத்திக் கொண்டிருந்தனர். அப்படி வந்த மலையாளி ஒருவரின் கடையே இந்த ஆரியபவான். கைதடிச்சந்தியால் பயணிப்பவர்கள் இங்குவந்து உண்டு களைப்பாறிப் போவது வழக்கமாக இருந்தது. தமிழ் மக்களின் மடங்கள் பலமிழந்து கைவிடப்பட்டபோது உணவுக் கடைகள் பலம் பெறத் தொடங்கிவிட்டன. காலமாற்றம் சிலவற்றை நிராகரிக்கச் செய்கிறது. சிலவற்றை வசீகரிக்கிறது. நல்லவை எங்கிருந்தாலும் அவை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

உண்டகளை தொண்டைக்கும் உண்டோ அல்லது தொண்டனுக்கும் உண்டோ? அது எனக்குப் பிரச்சினையாகவும் படவில்லை. ஆனால் புதுத்தெம்புடன் எனது நகர்வு தொடர்கிறது. கொஞ்சம் நில்லுங்கள் இது கைதடிச்சந்தி. முன்பு ஒரு சந்தர்ப்பத்தில் இரண்டு தமிழ்ப் பண்டிதர்கள் இந்த இடத்தில் சந்தித்திருக்கிறார்கள். ஒருவர் இந்த வழியால் போனால் எங்கே போகலாம் என்று கேட்பதற்குப் பதிலாக இவ்வழிச் சென்றால் எவ்வழிச் சேறலாம்? என்று வித்துவச் செருக்குடன் வழி கேட்டிருக்கிறார். மற்றவரும் குறைந்தவரா என்ன? அவரும் கரதண்டம்

சம்புகுண்டம்புக்கும். என்று பண்டித மறுத்தான் கொடுத்துவிட வழிகேட்டவருக்கு மொழியின் கருத்துப்புரியாமல் மட்டுமல்ல வழிதெரியாமலும் பரிதவித்திருக்கிறார். சம்பு என்பது நாவல் குண்டம் என்பது குழி. எனவே சம்புகுண்டம் என்பது நாவற்குழியைக் குறிக்கிறது. கரம் என்றால் கையைக் குறிக்கின்றது. தண்டம் என்பது நேரடியாகவே கைத்தடியைக் (ஊன்றுகோல்) குறிக்கிறது. எனவே கரதண்டம் என்பது கைதடியைக் குறிக்கின்றது. இவ்வழியால் போனால் கைதடி நாவற்குழிக்குப் போகலாம் என்ற கருத்துப் பெறப்படுகிறது.

இப்பொழுது எனது பயணம் நாவற்குழி ஊடாக இடம்பெற இருக்கிறது. நல்ல காலைப்பொழுது. கடைகளும் வீதிகளும் சுறுசுறுப்படையத் தொடங்கிவிட்டன. உள்ளூர் வெளியூர்களுக்கான பேரூந்துகள் இயங்கத் தொடங்கியுள்ளன. சுமைகள் ஏற்றிய பாரவூர்திகள் தெற்கு சந்தைகளை நோக்கி விரைந்து கொண்டிருக்கின்றன. புகையிலை, மிளகாய், வெங்காயம், வாழைக்குலையெனப் பாரவூர்திகளின் மேலும் தலைகாட்டிக் கொண்டிருக்கின்றன. சற்றுத் தொலைவில் விடுதியொன்று என் கண்ணில்படுகிறது. அங்கே ஆண்களும் பெண்களுமாக வயோதிபர்கள் பலர் காணப்படுகின்றனர். ஆம் அவர்கள் அநாதைகள் மட்டுமல்ல. பிள்ளைகளால் நிராகரிக்கப்பட்டவர்களும் இருக்கிறார்கள். ஏன் இந்தக் குடும்பக் குலைவு தமிழர் சமூகத்தில் ஏற்பட்டது. பெற்றோர்களைக் கவனிக்காத பிள்ளைகள் பின்நாளில் தங்கள் பிள்ளைகளாலும் புறக்கணிக்கப்படுவார்கள். பிள்ளைகளிருந்தும் அவர்களால் அநாதைகளாய் விடப்பட்ட முதுமைப் பெற்றோர்களைப் பார்க்கும்போது தமிழர் சமூகம் தமது கடமைகளைத் தவறவிடுகிறார்களா? இந்த மாற்றம் எதிர்காலத்தில் சமூகக் கட்டமைப்பில் பல பாதக விளைவுகளை ஏற்படுத்தும் என்ற துயர நினைவுகளோடு சற்று நகர சைவச்சிறுவர் இல்லம் என்ற அறிவிப்புப் பலகை என்னை ஆச்சரியப்பட வைக்கிறது. தாய்தந்தையர்களுடன் மகிழ்ந்திருக்கவேண்டிய பிள்ளைகள் ஏன் இப்படி இங்கிருக்கவேண்டும். இவர்களில் பலர் பெற்றோரை இழந்தவர்களாகவும் வறுமையில் வாடியவர்களாகவும் காணப்படுகிறார்கள். இன்னும் சிலர் பெற்றோர்களால் கைவிடப்பட்டவர்களாகவும் இருக்கின்றனர். யாழ்ப்பாண சமூகத்தில் கைவிடப்பட்ட முதியோர்கள், சிறுவர்கள் இவ்வாறான காப்பகங்களில் கொண்டுவந்துவிடப்படுவது மிகக் குறைவாகவே இருப்பது ஆறுதல் தருவதாக இருந்தாலும் குடும்பங்களில் ஆரோக்கியமான நிலை இருக்கிறதா? என்பது ஆய்வுக்குரிய விடயமாகவே இருக்கிறது.

அந்தோ தெரிகிறது நாவற்குழிச்சந்தி. இந்த இடந்தான் யாழ்ப்பாணத்தின் கைத்தொழில் நகரமாகக் கட்டியெழுப்பப்பட விருக்கிறது. சில முயற்சிகள் தொடங்கப்பட்டும் விட்டது. போதிய இடவசதி, தொழிலாளர் வசதி, புகையிரத மற்றும் நெடுஞ்சாலை வசதிகள், அருகிலே மூலவளங்கள் போன்ற கைத்தொழிலை ஒரிடப்படுத்தும் காரணிகள் சாதகமாக இருந்ததனால் இந்த இடம் ஒரு சிங்கப்பூராக மாற்றம் பெறுவதற்கு வாய்ப்புகள் கைகூடத் தொடங்கிவிட்டன. சில உல்லாச விடுதிகள் செயற்படத் தொடங்கியுள்ளன. இன்னும் இறால் பதனிடும் தொழிற்சாலை, சிக்மா நீர் இறைக்கும் இயந்திர இணைப்பு தொழிற்சாலை, கிளாஸ் (கண்ணாடிக்குவளை) உற்பத்தித் தொழிற்சாலை, ரயர் மீளமைப்பு எனப்பல தொழிற்சாலைகள் தங்கள் உற்பத்திகளைத் தொடங்கிவிட்டன. மேலும் பல உற்பத்திச்சாலைகளுக்கான கட்டுமானபணிகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த நினைவுகளுடனும் கனவுகளுடனும் பயணம் தொடர நீண்டதொரு வெளி கைதடி வெளியைப்போல் இருக்கிறது. அதேபாலம். இது நாவற்குழிப்பாலம். இருபக்கமும் சிறு கடல்வெளி. மீன்கொத்திப் பறவைகளின் அழகான அணிவகுப்பு. கடற்காற்றின் குளிர்ச்சியான மெல்லிய ஒத்தடங்கள். மனதுக்கும் உடலுக்கும் புத்துணர்ச்சியை ஊட்டிக் கொண்டிருக்கின்றது. இருந்தாலும் எதிர்க்காற்றை ஊடறுத்து என் மிதிவண்டி பயணிக்க வேண்டியிருக்கிறது. வாழ்க்கை என்பது போராட்டந்தானே. வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்ள இந்த எதிர்காற்றின் ஊடறுப்பு எனக்கு உதவியிருக்கிறது. எதிர்ப்புகள் எனக்கு இல்லையெனில் நான் வாழ்க்கையில் தோற்றுப்போயிருப்பேன். எதிர்ப்புகள் வந்தபொழுதுதான் அவற்றைத் தாண்டவும் நான் கற்றுக் கொண்டேன். இப்பொழுது என்னால் வாழ்க்கையின் சவால்களைத் துணிவுடன் எதிர்கொள்ள முடிகிறது.

நாவற்குழிப்பாலம் முடிவடைய ஒரு சிற்றோடை. இதில் கார்த்திகை மார்கழி மாதங்களில் உவர்நீரும் நன்னீரும் கலந்தோடும் இந்த ஓடையில் சிலர் பொழுதுபோக்காகவும் தொழில் ரீதியாகவும் தூண்டில் போட்டும் வலைவீசியும் மீன்பிடிப்பார்கள். ஒரே இடத்தில் நன்னீர் மீன்களையும் உவர்நீர் மீன்களையும் பிடிக்கும் அதிசயம் இங்குதான் நடைபெறுகிறது. இங்கு பிடிக்கப்படும் மீன்கள் மிகவும் ருசியானவை. வீதியின் கரையில் விற்கப்படும் மீன்களை வீதிப்பயணிகளே அதிகளவில் வாங்கிச் செல்கின்றனர். வீதியின் மறுகரை நீரோடையில் மாரிகால நீராடல்

இடம்பெறும். துள்ளிக்குதித்து நீரினில் வீழ்ந்து கரணம்போட்டு அடிவரை சென்று ஆனந்தம் காணும் ஆடவர் கூட்டம் குழந்தையாய் மாறி குதூகலிப்பதும் இந்த நீராடலில்தான் இடம்பெறும்.

வானத்தில் பல்லாயிரக்கணக்கான பறவைகள் வட்டமிட்டு நீர்நிலைகளிலும் நெல்வயல்களிலும் தரையிறக்கம் செய்து கொண்டிருக்கின்றன. இந்த அற்புதக்காட்சி இயற்கை அழகுகளுக் கெல்லாம் மகுடம் வைத்தாற்போல இருக்கிறது. இப்பறவைகள் றசியாவின் சைபீரிய குளிர்காலகாடுகளில் இருந்து வருகின்றனவாம். எத்தனை ஆயிரம் மயில்களைக் கடந்து பறந்து வந்திருக்கின்றன. சைபீரியாவில் கடும் குளிர்காலம் ஆரம்பிக்கும்போது இவை உலகின் பல பாகங்களுக்கும் புலம்பெயர்ந்து செல்கின்றன. யாழ்ப்பாணத்தின் செம்மணி, நாவற்குழி, கைதடி, தனங்கிளப்பு, சரசாலை, கப்புதூ போன்ற யாழ்குடாநாட்டின் பல இடங்களுக்கும் வருடாவருடம் வருகை தருகின்றன. இப்பகுதிகளிலுள்ள சிறுபற்றைக் காடுகளில் தங்கிமுட்டையிட்டுக் குஞ்சு பொரித்து மீண்டும் குஞ்சுகளுடன் தாயகம் நோக்கிப் பறந்து செல்கின்றன. கண்டம் விட்டுக் கண்டமாக நகர்ந்துவரும் இப்பறவைகள் பறப்புக்களின்போது எந்த இடத்திலும் தங்கி இளைப்பாற வருவதில்லை. வரிசையான பறப்புக்கள் நிரைநிரையான இறக்கங்கள் ஒழுங்கமைந்த வட்டமடிப்புக்களை பறவைகள் மிகநேர்த்தியாகச் செய்கின்றன. ஒழுங்கு , நேர்த்தி, தலைமைத்துவம், கீழ்ப்படிவு என்பவற்றை இந்தப் பறவைகளிடமிருந்துதான் மனிதன் கற்றுக்கொள்ள வேண்டும். பயணங்களின்போது மடங்களிலும் சுமைதாங்கிகளிலும் தங்கி தரித்து உண்டு களித்து வருகின்ற மனிதன் சைபீரிய காடுகளில் பறப்பை ஆரம்பித்து யாழ்ப்பாணத்தில் தரையிறங்குகின்ற பறவைகளிடம் கற்றுக் கொள்ள வேண்டியவை நிறையவே இருக்கின்றது.

வானப்பறவைகளின் பறப்புகளுக்கு மேலே மனிதரைச் சுமக்கும் விமானம் பறந்து செல்கிறது. கொழும்பிலிருந்து பாகிஸ்தான், இந்தியா, மற்றும் அதன் அயல்நாடுகளுக்குமான ஆகாய மார்க்கப் பாதைகள் யாழ்குடாநாட்டுக்கு மேல்தான் இருக்கிறது. இந்தியாவின், சென்னை, திருச்சி ஆகிய இடங்களிலிருந்து யாழ்ப்பாணம் பலாலி வான்தளத்துக்கு விமானங்கள் செல்வது வழக்கமாக இருக்கிறது. ஆகாயப் பறவைகளின் சிறகடிப்புப் பறப்புகளுக்கும் ஆகாய விமானங்களின் சிறகடிக்காப் பறப்புகளுக்கும் இடையே இயற்கையின் அழகும் செயற்கையின் அழகும்

போட்டி போடுவதாய் அமைந்திருக்கிறது. போட்டியென்று வந்துவிட்டால் செயற்கை இயற்கையிடம் தோற்றுத்தானே ஆக வேண்டும்.

யாழ்ப்பாணம் உங்களை அன்புடன் வரவேற்கிறது என்ற அறிவிப்பு வளைவு என் கண்ணில்படுகிறது. ஆம் இது செம்மணிச் சந்திதான். வரவேற்று உபசரிப்பதில் ஈழத்தமிழர்கள் சிறப்பானவர்களென்று கருதப்படுகிறார்கள். இந்த வரவேற்பு எனக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. தமிழர்களின் வரலாற்றுத் தலைநகரத்தை தரிசிக்கப் போகிறேன் என்ற ஆவல் மேலும் வலுப்பெறுவதற்கு இந்த நகர வளைவு வரவேற்பும் உந்து சக்தியாய் அமைந்து விடுகிறது. யாழ்ப்பாணம் என்னை வரவேற்ற பின்பு நான் அரியாலை ஊடாக யாழ்நகர் நோக்கிப் பயணிக்கப்போகிறேன். அன்பான வரவேற்புக்கும் பின்பு நான் முதல்முதலாக தரிசிப்பது உயிர் பிரிந்தவர்களை சுட்டுச் சாம்பலாக்கும் மயானத்தையேதான். செம்மணிச்சந்தியின் யாழ்நகர் வரவேற்பு வளைவைக் கடந்து அரியாலை ஊடாக யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் ஊடாக யாழ்ப்பாணம் ஆகிய இரு வழித்தடங்களிலும் பயணிப்பவர்கள் முதல்முதலாகக் காண்பது சுடலைகளைத்தான். அன்பாக வரவேற்ற பின்னர் இடுகாடுகளைக் காண்பிப்பது வாழ்க்கையின் நிலையாமையை எனக்கு உணர்த்துவது போல் இருக்கிறது. வாழ்க்கையில் பற்று அற்று இரு. மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை யென மூவகை ஆசைகளையும் விட்டுவிட்டு நிலையான பேரின்பத்தை அடையத் தயாராய் இரு என்பதைச் சொல்லாமற் சொல்லுவது போல் இருக்கிறது. இந்த அற்ப வாழ்க்கையில்தான் எத்தனை பேதங்கள் எங்களுக்குள். எத்தனை வேலிச் சண்டைகள் நமதூருக்குள். இங்கே எரியும் உடலங்களைப் பார்த்தாவது உங்கள் மனங்களைக் கொஞ்சம் தூய்மைப்படுத்திக் கொள்ளுங்கள். நீ யாருக்கும் கீழானவனுமல்ல. மேலானவனும் அல்ல. சராசரி மனிதன்தான். யாரும் தனது காரியங்ளைச் செய்வதற்காக சுடலைக்கு நடந்து செல்வதில்லை. மற்றவர்கள் தான் தூக்கிச் செல்கிறார்கள். நீ உயிர்வாழும்போது உனது பணம் மற்றவர்களுக்கு உதவியிருந்தால் உனது பிணம் சுமக்க ஆயிரம்பேர் வருவார்கள். உனது பணம் உன்னோடு இருந்து விட்டால் பிணத்தை இழுத்துச் செல்ல இயந்திரங்கள் பூட்டிய வண்டிகள் தானே வரும். அன்றைக்கொரு நாளாவது வண்டிக்காரனின் வண்டியை நிரப்ப உனது மரணத்தின் சம்பளம் உதவட்டும். என்ன நான்

புத்தனாகிப் போனேனா? இல்லை புத்தி கெட்டுப் போனேனா? எனக்கே புரியவில்லை. இது சுடலை ஞானந்தான். இப்போ இந்த ஞானியின் பயணமும் தொடர்கிறது.

இப்பொழுது நான் அரியாலைச் சந்திக்கு வந்துவிட்டேன். இந்த ஊர் நகரம் ஒன்று வருவதற்கான ஆரம்ப நிகழ்வுகளை கட்டியம் கூறிக்கொண்டிருக்கின்றன. வீதியின் இரு புறத்திலும் கல்லாலான அழகான வீடுகள். அவற்றின் முற்றங்களில் சிறிய பூந்தோட்டங்கள் இடையிடையே கடைகள், கோயில்கள் வீதிக்கும் வீட்டுக்கும் எல்லையாக மதில்கள். சில மதில்வாயில்களின் அருகே வழிப்போக்கர்கள் தாக சாந்தி செய்வதற்காக குடிநீர்ப் பானைகள் வைக்கப்பட்டுள்ளன. மக்களில் சிலர் இதனை சமூகசேவையாகக் கருதிச் செயற்படுகிறார்கள். இந்த ஊரில் முற்காலத்தில் பல மர அரிவு ஆலைகள் இருந்திருக்கின்றன. அதனால் அரியாலை என்று பெயர் வந்திருக்கலாமென ஊர்வாசிகள் சிலர் குறிப்பிடுகின்றனர்.

வீதிகளில் மக்கள் அதிகமாகக் காணப்படுகின்றனர். பாடசாலை செல்லும் மாணவர்கள் தொழில்களுக்குச் செல்லும் உழைப்பாளிகள், அதிகாரிகள் எனப்பலரும் தங்கள் இடங்களுக்கு விரைந்த வண்ணமுள்ளனர். இன்னும் சிலர் பேரூந்துகளுக்காக வீதிகளில் கூட்டம் கூட்டமாகக் காத்து நிற்கின்றனர். வீதிகளின் காலை அணிவகுப்பு மிகச் சிறப்பாய் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இதோ கச்சேரி வந்துவிட்டது. இனியென்ன அனைவருக்கும் கச்சேரிதான். யாழ்ப்பாணத்தின் நிர்வாகமையந்தான் இந்தக் கச்சேரி. அணியணியாய் நிழல்தரும் மரங்கள். சுற்றுப்புறமெங்கும் பூந்தோட்டங்களால் அழகுபடுத்தப்பட்டு மிடுக்குடன் நிமிர்ந்து நிற்கிறது. நீண்ட நேர்த்தியான கட்டட அமைப்புடன் காணப்படுகிறது. கச்சேரி சந்தியில் வெள்ளாடை தரித்த இளவட்ட மாணவர்கள் கல்லூரிக்குச் செல்பவர்களும் காதல் செய்ய செல்பவர்களுமாய் சந்திகளில் கூடிப்பேசிக் கொண்டிருக்கின்றனர். அவர்களில் சிலர் விழியம்புகளால் பேசுபவர்களாகவும் பலர் அதனால் காயப்பட்டவர்களாவும் காணப்படுகின்றனர். இனியென்ன புத்தரின் போதனைகளுக்கும் இங்கே விடுமுறைதான். இலங்கை நாட்டைப் போலவே.

இதோ யாழ்ப்பாணம் வந்துவிட்டது. மக்கள் வெள்ளம் சுறுசுறுப் பாக அலைமோதிக் கொண்டிருக்கிறது. அதோ யாழ்ப்பாணத்தின் அழகிய வெள்ளை மாளிகை. தமிழ் கன்னித்தாய் குடியிருக்கும் கோயில் ஆகா! என்ன அழகு தமிழர் கட்டடக் கலையின் உன்னதம் உயர்ந்து நிற்கிறது. சரஸ்வதித்தாய் முன்னே வீணையேந்திக் காட்சிதர சுற்றுப்புறமெங்கும் பூந்தோட்டங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்க யாழ்ப்பாண நூலகம் நிமிர்ந்து நிற்கிறது. ஆசியாவில் சிறந்த நூலகம் பல ஆயிரம் நூல்களைத் தன்னகத்தே கொண்டு அறிவுப்பசிக்கு விருந்தளித்துக் கொண்டிருக்கிறது. இந்த அறிவாலயம் யாழ்ப்பாணத்தைக் கல்வியால் வளப்படுத்தவும் யாழ்ப்பாண மூளையை உருவாக்கவும் இந்த நூலகம் அருமருந்தளித்து விந்தை செய்கிறது.

அருகில் சுப்பிரமணியம் பூங்கா. பூமலர் சோலைகளால் அழகுபடுத்தப்பட்டு மகிழ்ச்சியாய் பொழுதைப் போக்கவும் சிறுவர்கள் விளையாடி மகிழ்ச்சி கொள்வதற்குமான வசதிகள் செய்யப்பட்டிருக்கிறது. குழந்தைகள் சுழன்றும் சறுக்கியும் ஓடியும் பாய்ந்தும் குதூகலித்துக் கொண்டிருக்கிறார்கள். முதியவர்கள் காலாற இருந்து காற்று வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். சில இளவட்டங்கள் பூங்கன்றுகளிடையே சந்தித்து தங்கள் இதய மலர்களை விரித்துக் கொண்டிருக்கின்றனர். அதனருகே விளையாட்டு மைதானங்கள். அதில் ஆண்களும் பெண்களும் உடற்பயிற்சிகளிலும் விளையாட்டுக்களிலும் ஈடுபட்டுக் கொண்டிருக் கின்றனர். மத்திய கல்லூரி மைதானம், துரையப்பா விளையாட்டரங்கம், முற்றவெளியென எல்லா இடங்களிலும் மாணவ மாணவியர், வீர வீராங்கனையர் எனப்பலரும் உடலுக்கும் மனதுக்கும் உறுதியைத் தருகின்ற பயிற்சிகளிலும் விளையாட்டுக்களிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். உடலோடு உள்ளமும் ஆரோக்கியமாக இருந்தால்தான் உறுதியான சிந்தனைகளையும் ஆரோக்கியமான வாழ்க்கையையும் எமக்குள் ஏற்படுத்திக் கொள்ளலாம்.

நீண்டு நிமிர்ந்து காலங்காட்டிக் கொண்டிருக்கிறது. எடுப்பான மணிக்கூட்டுக் கோபுரம். அது நேரத்தை மட்டுமல்ல யாழ்ப்பாண இராச்சி யத்தை ஐரோப்பியர்கள் விழுங்கி ஏப்பமிட்ட காலவரலாற்றையு மல்லவா நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறது. போர்த்துக்கேயர் யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றியது மட்டுமல்லாமல் நல்லூர் கந்தசுவாமி கோயிலையும் இடித்தழித்து அதன் கற்களை, நல்லூரிலிருந்து யாழ்ப்பாண

முற்றவெளி வரைக்கும் மக்களை வீதியில் வரிசையாய் நிற்கவைத்து ஒருவர் மாறி ஒருவராய் சுமந்து கொண்டு வந்து சேர்ப்பித்திருக்கிறார்கள். இந்த அடிமைவாழ்வின் குறியீடுகளாகத்தான் யாழ்ப்பாணக் கோட்டையையும் மணிக்கூட்டுக் கோபுரத்தையும் எம்மால் பார்க்க முடிகிறது.

யாழ்ப்பாணக் கோட்டை போர்த்துக்கேயரால் பல்வேறு நோக்கங்களுக்காகக் கட்டப்பட்டது. எதிரிகளின் கடல் அச்சுறுத்தல் களிலிருந்தும் உள்ளூர் எதிரிகளிடமிருந்தும் தமது இராச்சியத்தைப் பாதுகாக்க செயற்கை முறையிலானதும் நவீன வசதிகள் கொண்டதுமான பலமான கட்டடங்கள் எதிரிகள் உள்ளே நுழையாதிருக்க அகழிகள் போன்ற பாதுகாப்பு முன்னேற்பாடுகளையும் செய்திருந்தனர். குற்றவாளிகளைத் தூக்கிலிட்டுக் கொல்லும் தூக்குமேடை யாவரும் பார்க்கும்படியாக உயரத்தில் கட்டப்பட்டிருக்கிறது. அரசுக்கு எதிராக சதி செய்தார்கள் என்ற குற்றச்சாட்டில் பலதமிழர்கள் போர்த்துக்கேயரால் தூக்கிலிடப்பட்டிருக் கிறார்கள். கோட்டையின் வடபுறம் பண்ணைக் கடல் யாழ்மண்ணை முத்தமிட ஆசையாய் அலைமோதி வருகிறது. பண்ணைக் கடல்வெளி யில் இடையிடையே கண்டற்காடுகள் காணப்படுகின்றன. இந்தக் காடுகள் தான் கடற்பறவைகளின் சரணாலயம். நகரமக்கள் கடற்கரை வீதிகளில் காலாற நடந்து காற்று வாங்கி ஆனந்தமாகப் பொழுதுகளை களிக்க இந்த இடம் பெரிதும் உதவியிருக்கிறது.

இதோ வந்துவிட்டது யாழ்மத்திய பேரூந்து நிலையம் மக்கள் வெள்ளம் நாலாபக்கமும் அலைமோதிச் செல்கிறது. வெள்ளங்களுக் கிடையே தோணிகள் போல பேரூந்துகள் ஊர்ந்தும் நகர்ந்தும் சென்று அசைந்து கொண்டிருக்கின்றன. உள்ளூர் வெளியூரென எல்லா இடங்களுக்கும் இங்கிருந்து பேரூந்துகள் இயக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. நகரத்துக்கென தனியான விளம்பரசேவை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. காணாமல் போனோர், கண்டுபிடிக்கப் பட்டோர், பொருட்களைத் தவறவிட்டோர், கண்டெடுத்த பொருட்கள் போன்ற அறிவிப்புகளுடன் வியாபார விளம்பரங்கள் சினிமாப்பாடல்கள் என்பன ஒலிபரப்பப்பட்டும் நகரத்து மக்களை விறுவிறுப்பாகவும் கலகலப்பாகவும் வைத்திருப்பதற்கு விளம்பரசேவை ஊக்கம் கொடுத்துக் கொண்டிருக்கிறது. யாழ்நகரத்தில் பத்துக்கும் மேற்பட்ட சினிமா திரையரங்குகள் இருக்கின்றன. மக்கள்கூட்டம் இவ் அரங்குகளில் அலைமோதுவதும் அவர்களைக் கட்டுப்படுத்த முடியாமல் அரங்க உரிமையாளர்கள் அவலப்படுவதும் அவர்கள் தனிப்பட்ட முறையில்

அடியாட்களை நியமித்து இரசிகர் கூட்டத்தைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முயல்வதும் குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ் நகரிலிருந்து பருத்தித்துறைவீதியூடாக எனது மிதி வண்டியை மெதுவாக நகர்த்தி மிகக் கவனமாக சற்றுத்தடுமாறினாலும் மக்களிடமோ வாகனங்களிடமோ மோத வேண்டியிருக்கும். அதனால் மிக அவதானமாக நல்லூரை நோக்கிப் பயணிக்கிறேன். நல்ல ஊர் குறுகி நல்லூரென்று அழைக்கப்படுகிறது. பெயருக்கேற்றாற்போல் ஊரும் அமைந்திருக்கிறது. யாழ்ப்பாணத்தை ஆட்சிபுரிந்த தமிழ் மன்னர்கள் நல்லூரைத் தலைநகராக்கி அரசமைத்துள்ளனர். நல்லூரில் மன்னர்களால் பல ஆலயங்கள், குளங்கள் குடியிருப்புமனைகள் என்பன கட்டப்பட்டிருந்தன. நாயன்மார் கட்டிலும் தமிழ்ச்சங்கம் ஒன்றை அமைத்துத் தமிழை வளர்த்துள்ளனரெனவும் அறிய முடிகிறது. நல்லூர் கந்தசுவாமி கோயில், சட்டநாதர் சிவன்கோவில், வீரகாளியம்மன் கோயில், கைலாச பிள்ளையார் கோயில், வெயிலுகந்த பிள்ளையார் கோவில் என்பவை அவற்றுள் சிறப்பித்துக் குறிப்பிடத்தக்கதாகும். போர்த்துக்கேயரிடம் நல்லூர் இராசதானி வீழ்ச்சிபெற நல்லூர் கந்தசுவாமி கோயில் இடித்து அழிக்கப்பட்டது. அதே இடத்தில் அழிக்கப்பட்ட கோவிலின் கற்களைக் கொண்டு தேவாலயம் ஒன்றை நிர்மாணித்திருக்கிறார்கள். யாழ்ப்பாண மன்னர்களால் நிர்மாணிக்கப்பட்ட பல கட்டிடங்கள் அழிவடைந்துவிட மிகுதியாகச் சங்கிலித் தோப்பு அரண்மனை வாயில் யமுனாஏரி மந்திரிமனை, சுரங்கப்பாதைகள் என்பவற்றை இன்றும் பார்க்க முடிவது வரலாறுகளை ஆய்வு செய்யத் துடிக்கும் அவாவை மேலும் துரிதப்படுத்து வதாக உள்ளது.

### 5:1இருபத்தைந்து ஆண்டுகளின் பின்னரான தரிசனம்

இப்பொழுது எனது பயணத்தின் நோக்கம் நல்லூரில் இருந்து யாழ்ப்பாணம் ஊடாக சாவகச்சேரியைச் சென்றடைவதாகும். காலம் எவ்வளவுக்கு மாறிவிட்டது. யுத்தம் எல்லாவற்றையும் விழுங்கிவிட்டது. நல்லூர் இராசதானி இருந்த இடம் கவனிப்பாரற்று அதுவும் அநாதையாய் இருக்கிறது. முத்திரைச் சந்தியில் கம்பீரமாய் வாளேந்தி குதிரைமீது அமர்ந்திருக்கின்ற சங்கிலிமன்னன் சிலை இடமாற்றப் பட்டு தெருவேலியோரம் புதிதாய் அமைக்கப்பட்டிருக்கிறது. சந்தியில் இருந்த சிலை இடித்து வீழ்த்தப்பட்டதனால் இப்படி ஒரு ஏற்பாட்டைச் செய்திருக் கிறார்கள். யாழ்ப்பாண இராசதானியின் எஞ்சியிருக்கும் மந்திரி இருந்த

மனையில் இப்போது சில அகதிகள் தங்கியிருக்கின்றனர். கட்டிடம் காணி என்பன பாதுகாக்கப்படாமல் கைவிடப்பட்டிருப்பது வரலாறுகளை மூடி மறைக்கவே ஊக்கம் கொடுப்பதாக அமையும். புராதன வரலாற்று தடையங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அவை அழிக்கப்படுமாயின் அம்மக்களின் வரலாறும் அழிக்கப்படும். எதிர்கால சந்ததியினருக்கு இப்படியான வரலாறுகள் தெரியாமல் போவதற்கு இது ஏதுவாகி விடும். எனவே வரலாற்றுச் சின்னங்கள் பாதுகாக்கப்பட்டு அவை எதிர்கால சந்ததியினருக்கு கையளிக்கப்பட வேண்டியது சமூகக் கடமையாகக் கொண்டு செயற்படுத்துவதே பொருத்தமானதாகும். பழைய நல்லூர் கந்தசுவாமி கோவிலின் அருகில் (இப்போது முத்திரைச் சந்திக்கருகில்) யாழ்ப்பாண மன்னர்களால் யமுனா ஏரி நிர்மாணிக்கப்பட்டது. பெரியளவில் அமைக்கப்பட்ட நீர்த்தடாகத்தை புனிதப்படுத்துவதற்கு இந்தியாவின் யமுனைநதியில் இருந்து நீர் கொண்டுவரப்பட்டு இந்த ஏரியில் கலப்பிக்கப்பட்டது. அக்கால தமிழ் மன்னர்களால் முயற்சி எடுத்துச் செய்யப்பட்ட இந்த ஏரி பாழ் அடைந்தும் சிறு பற்றைகள் வளர்ந்தும் கவனிப்பாரற்றக் கிடப்பது எமது தேசப்பற்றை நாமே எடை போட்டுப் பார்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. இராசதானிப் பிரதேசத்தில் எஞ்சிக் காணப்படுகின்ற தடையங்களையாவது காப்பாற்றுவதற்கு இப்பகுதியை வரலாற்றுப் பிரதேசமாக அறிவித்து பாதுகாப்பதோடு சுற்றுலாப்பயணிகள் தரிசிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதும் நன்மை பயப்பதாக அமையும்.

வரலாற்று இடங்களைத் தரிசித்த திருப்தியும் அவை கவனிக்கப் படாமல் இருப்பதால் வேதனையும் மனவுணர்வுகளில் தாக்கத்தை ஏற்படுத்த மீண்டும் எனது மிதிவண்டிப் பயணம் தொடர்கிறது. நல்லூர் கந்தன் கோபுரவாசல் அழகாய் என்னை வரவேற்கிறது. இந்தக் கோவில் மட்டும் அப்படியே இருக்கிறது. ஆனால் முன்னையகாலத்தைப் போல பக்தர்களைக் காண முடியவில்லை. இந்த மண்ணில் நல்ல வளமுடன் வாழ்ந்தவர்களில் பலர் தங்கள் வாழ்விடங்களை விட்டுப் புலம் பெயர்ந்து சென்றுவிட்டனர். எத்தனை மெய்யடியார்கள், முதியவர்கள், நண்பர்கள் கூடிக்குலாவி கதைத்து மகிழ்ந்த இந்தக்கோயிலின் சுற்றுப்பிரகார மணல்வெளி வெறிச்சோடிக் கிடக்கிறது.

நல்லூர் முருகனை வழிபட்டு பழையதும் புதியதுமான நினைவு களுடன் பயணம் தொடர்கிறது. முக்கியமான சந்திகளில் காவலுக்காக

அடுக்கப்பட்ட மண்மூடைகள் இந்த இடங்களில் மிக அவதானமாகச் செல்ல வேண்டும். அடையாள அட்டை இருக்கிறதா? என்பதை சரிபார்த்துக் கொள்கிறேன். அது இல்லையென்றால் வீடுபோய் சேர்வது சந்தேகம். எனது உயிர் இருக்கிறதா என்பதை அடையாள அட்டையைத் தொட்டுப் பார்த்துத்தான் அறிந்து கொள்கிறேன். நாடி பிடித்தறிவது தேவையற்ற விடயமாகி விட்டது.

யாழ்நகரம் வருகிறது. கண்டபடி எல்லா வீதிகளாலும் நகருக்குள் உள்நுழைய முடியாது. அதனால் மிக அவதானமாக செல்ல வேண்டிய பாதைகளை தீர்மானித்துக் கொள்கிறேன். நான் செல்லும் பாதையருகே முன்பு சில சினிமா அரங்குகள் இருந்தன. ஆனால் அவை இருந்ததற்கான அடையாளங்கள் கூடக் காணப்படவில்லை. வேறு சில உடைந்து சிதைவுற்றுக் கிடக்கின்றன. மக்கள் சிரித்து மகிழ்ந்த திரையரங்குகள் இன்று சிதறிக் கிடக்கின்றன.

இதோவந்து விட்டது. யாழ்பேரூந்து நிலையம். இருபத்தைந்து ஆண்டுகளில் உலகம் எங்கேயோ போய்விட்டது. யாழ்ப்பாணம் மட்டும் அப்படியே கிடக்கிறது. இல்லை இன்னும் தரங்குறைந்து குற்றுயிராய்க் குறுகிநிற்கிறது. மக்கள் வெள்ளம் வற்றிவிட்டது. பேரூந்துகள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் அலைந்து திரிகின்றன. உலகின் கண்காட்சி கூடங்களில் கூட காண முடியாத மோட்டார் வாகனங்கள் யாழ்ப்பாண வீதிகளில் இன்றும் மூச்சிறுத்து செல்கிறது. மக்கள் மிக முக்கியமான தேவைகளுக்கு மட்டுந்தான் நகருக்குள் வருகிறார்கள். அநாவசியப் பயணங்களைத் தவிர்த்துக் கொள்கிறார்கள். மக்களின் முகங்களில் அச்சம் நிறைந்த பரிதவிப்புத் தெரிகிறது. வேலைகளை அவசரமாக முடித்துவிட்டு விரைவாய் வீட்டுக்கு ஓடிவிட வேண்டும் என்ற அவசரம், மக்கள் இந்த அவசரகால நிலையில்தான் மூச்சுவிட்டுக் கொண்டிருக்கிறார்கள். மெலிந்த உடல்கள் குளிவிழுந்த கண்கள், அச்சம் கொண்ட பார்வை கொண்டவர்கள் தான் இன்று என் கண்ணெதிரே தோன்றுகிறார்கள். யுத்தம் இவர்களை உருக்குலைத்து விட்டது.

அறிவுப்பசிக்கு விருந்தளித்த நூலகம் அந்தோ கருகிப் போய் கிடக்கிறது. நூல்கள் செய்த பாவம் என்ன? எந்த நூல்களைப் படித்தாலும் இதற்கு விடை காண முடியாது. கன்னித்தாய் கருக்கலைப்புச் செய்யப் பட்டிருக்கிறாள். சரஸ்வதி கையில் வீணை தான் உண்டு. நாதம் இல்லை. அருகில் இன்னொரு சிலை புதிதாய் அவதாரம் எடுத்திருக்கிறது. இல்லை

ஒருமனிதன் சிலையாக்கப்பட்டிருக்கிறான். நூலகம் எரியுண்ட செய்தி கேட்டு அதிர்ச்சியில் மரணித்த அருட்தந்தை தாவீது அடிகளார் அவர்களின் நினைவுச் சிலைதானது.

நூலகத்துக்கு எதிரே பூஞ்சோலைகளால் அழகுபடுத்தப்பட்ட சுப்பிரமணியம் பூங்கா இருந்த இடம் தெரியவில்லை. பூக்கள் மட்டுமல்ல வாடிப்போனவை மக்களும்தான். அழிந்து விட்டவை வெறும் மரங்கள் மட்டுமல்ல மனிதர்களின் மனங்களும்தான். எத்தனை சிறுவர்கள் ஆடி ஓடி விளையாடிய இடம் மயானமாய் மாறிப் போய்க்கிடக்கிறது.

கலைகள் விளைந்த மண்ணில் அரங்குகள் பல கண்ட வீரசிங்கம் மண்டபம் அதோ வீரியம் இழந்து ஓட்டைகள் பல கண்ட சீமெந்து பூசிய வெற்றோடாய் காய்ந்து கிடக்கிறது. சலங்கையொலி எதுவும் கேட்கவில்லை. இன்னிசைக் குரல் எதுவும் ஒலிக்கவில்லை. கலை அனைத்தையும் இழந்து மௌனித்துப் போய் கிடக்கிறது மக்களைப் போல். மண்டபத்துக்கு முன்னே சில நடுகற்கள். தமிழாராய்ச்சி மகாநாட்டின் போது இறப்பிக்கப்பட்டவர்கள் நினைவாகக் கட்டப்பட்டிருக்கிறது. இனிவரும் காலங்களில் எத்தனை இடங்களில் நடுகற்கள் நாட்டப்பட வேண்டும் என்பதனை கட்டியம் கூறி நிற்கின்றன.

நிமிர்ந்து நிற்கும் மணிக்கூட்டுக் கோபுரமும் சரியாகத் தான் நேரத்தைக் காட்டிக் கொண்டிருக்கிறது. ஆனால் அதைப் பார்ப்பதற்குத் தான் அந்த இடத்தில் மக்கள் இல்லை. ஏழுமணிக்குள் ஓடிப்போய் வீட்டுக்குள் முடங்கிக் கொள்ள வேண்டும் என்பதை மட்டும் அது நினைவூட்டிக் கொண்டிருக்கிறது.

விளையாட்டு மைதானங்கள் வெறிச்சோடிக்கிடக்கின்றது. எத்தனை விளையாட்டுக்கள் தடகளப் போட்டிகள், துடுப்பாட்டம், உதைபந்தாட்டம் என களம்பல கண்ட அரங்குகளில் இன்று ஆடுவார் யாருமின்றி அநாதையாய் நிற்கிறது. அருகே மத்திய கல்லூரி உடைந்து போன கட்டடங்கள், சிதைந்து போன கல்வியென கல்விக் கண்கள் குருடாக்கப்பட்டுக் கிடக்கிறது. மாணவர்வரவுகளும் குறைந்து கொண்டு செல்கின்றன. கல்வியின் தரத்தினைப் போல் கல்வியில் தரப்படுத்தல்களுக்கு பின்பு கட்டடங்களும் தரைப்படுத்தப்பட்டுக் கிடக்கின்றன. முன்னைய காலங்களில் பாடசாலைகள், பேரூந்துகள், வீதிகள் என எங்கும் நிறைந்து காணப்பட்ட கல்லூரி மாணவர்கள் இன்று

மிகக் குறைவாக அங்கொன்றும் இங்கொன்றுமாக ஐதாக்கப் பட்டிருக்கிறார்கள்.

பண்ணைக்கடல் வெளியில் காலாற நடப்பார் யாரும் இல்லை. அது உயர் பாதுகாப்புக்குரிய இடம் என்பதால் உயிர்ப் பாதுகாப்புக்காக மக்கள் அங்கே செல்லாமல் இருக்கின்றார்கள். இயற்கை அள்ளித்தரும் தென்றற் காற்றைக்கூட அனுபவிப்பதற்கு இவர்கள் அச்சப்படுகிறார்கள்.

யாழ்நகரத்தின் புதிய தரிசனத்துடன் கச்சேரி அரியாலை நோக்கி A9 வீதிவழியாக இடம்பெறுகிறது. வீதியின் இருகரைகளிலுமாக குடியிருப்புகள், கடைகள், பொதுக்கட்டிடங்கள் என பலவும் பலத்த அழிவுகளுக்குப்பின் சீமெந்தால் ஒத்தடம் கொடுக்கப்பட்டதுபோல் பூசிமெழுகப்பட்டிருக்கிறது. உடைந்துபோன மதில்கள், கைவிடப்பட்ட குடிமனைகள், இழுத்துமூடப்பட்ட கடைகள் என நெடுவீதியின் இருபுறமும் மக்களற்ற அமைதி வலயமாக காட்சியளிக்கிறது. சில உடைந்துபோன வீடுகளுக்குள் புதிய முகங்கள் அவர்கள் பிச்சைப் பாத்திரத்தை மட்டும் தூக்காமல் இருக்கிறார்கள். இவர்கள் நாடோடி அகதிகள். உடைந்துபோன கற்கள், இவர்களுக்கு தலையணை கிழிந்தசேலை, குழந்தையைத் தாலாட்டும் தொட்டில், தங்களின் யானைப் பசியைப் போக்க மாங்காய், தேங்காய், பனங்காய் என மரங்கைளத் தேடி அலைந்து கொண்டிருக்கிறார்கள். யுத்தம் எப்படியெல்லாம் இவர்களை மாறுபடுத்திப் பார்க்க விரும்புகிறது.

இதோவந்துவிட்டது கச்சேரி. எத்தனை ஆயிரம் மாணவப் பறவைகள் இந்தச் சந்திகளில் சிறகடித்துப் பறந்தனர். காலமாற்றம் இவர்களை தூரதேசங்களுக்கு குடிபெயரவைத்துவிட்டது. செம்மணிக்கு வரும் சைபீரியப் பறவைகள் முட்டையிட்டு குஞ்சுபொரித்து மீண்டும் குடும்பமாக தங்கள் தாயகம் திரும்புகின்றன. ஆனால் இங்கு வாழ்ந்துவிட்டுச் சென்ற மனிதப்பறவைகள் தூரதேச புகலிடங்களில் நிரந்தரமாகத் தங்கிக் கொண்டன. யுத்தபருவகாலம் தொடர்ந்தும் இங்கு நீடிப்பதால் மனிதர்கள் மட்டுமல்ல துருவப்பறவைகளும் வருவதற்குத் தயங்குகின்றன. சுற்றுலாப் பறவைகளும் தங்கள் பயணங்களை ரத்துச் செய்யத் தொடங்கியுள்ளன. எத்தனை நாடுகளின் விமானங்கள் பறந்த இந்தப் பெருவான்வெளியில் பறவைகளைப் போலவே விமானங்களும் புலம்பெயர்ந்து சென்றுவிட்டன. வானமும் வெறு வெளியாய் தெரிகிறது. கீழேயுள்ளவர்களின் வயிறுகளைப் போலவே.

அதோ செம்மணிச்சந்தி. அதற்குமுன் மயானம் மீண்டும் என்கண்களில் படுகிறது. இப்பொழுதுதான் நான் சுடலையைப் பார்க்கிறேன். அப்படியென்றால் இவ்வளவு நேரமும் எதைப் பார்த்து வந்தேன். இங்கே எரிக்கப்பட்டவர்களும் புதைக்கப்பட்டவர்களுமாவது அமைதியாகத் தூங்கட்டும்.

செம்மணிச் சந்தியில் எல்லாப் பயணவூர்திகளும் ஒரு கரையோரமாக நிறுத்திவைக்கப்படுகின்றன. வாகனத்தொடரணி சென்ற பின்புதான் யாவருக்கும் பயணிக்க அனுமதி கிடைக்கும். அதுவரை எனது மிதிவண்டியும் நானும் சற்று வெயிலில் நின்று களைப்பாறுவோம். வீதியின் கரைகளில் பாழடைந்து துருப்பிடித்த வாகனச் சேதாரங்கள் பரவிக் கிடக்கின்றன. அவைகளின் சுயசரிதங்களைக் கேட்டு கண்ணீர் சிந்தவும் யாரும் தயாராக இல்லை. எப்படி இருந்தநான் இப்படியாகிப் போனேன் என்பதைத் தானே யாவும் சொல்கின்றன. அருகே செம்மணி உப்பளம். முன்பு இங்கு அதிகளவில் உப்பு உற்பத்தி செய்யப்பட்டது. இப்பொழுது மிகக் குறைவான அளவில் உற்பத்தி நடைபெறுகிறது. "உப்பு இல்லாப் பண்டம் குப்பையிலே" வீதியின் ஒருகரையில் உப்பும் மறுகரையில் குப்பையும் கிடக்கிறது. ஆனால் பண்டங்களுக்குத்தானிங்கே தட்டுப்பாடு. அதைப் பெற்றுக் கொள்ள பெரும் முட்டுப்பாடு. ஏனோ எமக்கு பெரும் கட்டுப்பாடு. இந்த உப்புச்சப்பு அற்ற நினைவுகளோடு செல்ல உப்புக் கடல் நீர்மீனும் நற்குளமீனும் கலந்தோடும் குளக்கடல் நீரோடையில் மீன்பிடிப்பார் எவரும் இல்லை. விற்பார் யாரும் இல்லை. வாங்கிக்கொள்ளவும் மனிதர்கள் இல்லை. மீன்களாவது சுதந்திரமாகச் செல்லட்டும்.

நாவற்குழிப்பாலம் அழகாகக் காட்சிதருகிறது. இதில் நீர்த்தடுப்பணையொன்று கட்டப்பட்டு இன்று பாழடைந்து போய் கிடக்கிறது. கடல்நீர் உட்புகுந்து நிலத்தை உவர்நிலமாக மாற்றுவதை தடுக்கும் நோக்கில் இந்த அணைகட்டப்பட்டது. நோக்கம் நல்லது தான். ஆனால் அதனை நடைமுறைப்படுத்தாததால் நன்னிலம் விரைவாக மாசுபட்டுச் செல்கிறது.

பாலம் கழிந்து சற்றுநகர நாவற்குளி என்னை வரவேற்கிறது. பனைகளும் தென்னைகளும் தங்கள் தலைகளைக்கீழே போட்டு தலையற்ற முண்டங்களாய் மரணங்களைத் தழுவியுள்ளன. இன்னும் சில

அடியறுக்கப்பட்டு வேறு தேவைகளுக்காக நகர்த்தப்பட்டுள்ளன. வெடியோசை அதிர்வுகள் மனிதர்களைப் போல் மரங்களையும் தலைகுனிய வைத்துள்ளன. தென்னங்கீற்றும் பனைமரக்காற்றும் மௌனித்துப் போய் மரண கீதம் பாடிக்கொண்டிருக்கின்றன.

இதே கைதடி நாவற்குழிதான் கைத்தொழில் நகராக உருப்பெற்று ஜப்பானைப்போல் சிங்கப்பூரைப்போல் மாற்றம் பெற கனவுகண்டு கொண்டது. உண்மையில் ஜப்பானைப் போல் இன்று மாறியும் விட்டது. கிரோசீமா, நாகசாகியாகி குண்டுகளால் அடிபட்டு அழிந்துபோய் கிடக்கிறது. நாவற்குளிச் சந்தியில் தொடரூந்து நிலையம் இன்னமும் திறந்து தானிருக்கிறது. நாய்களும் பேய்களும் சஞ்சரிப்பதற்காக, மூடுவதற்குத் தான் கதவுகளும் யன்னல்களும் இல்லையே. இருந்தாலும் முகவரியற்ற ஆடுகளும் மாடுகளும் ஏதோவொரு நம்பிக்கையில் இன்னமும் காத்துக் கொண்டுதான் இருக்கின்றன. இந்த வீதிச் சந்திப்பு வழியாக யாழ்ப்பாணம் மன்னார் பேரூந்துப் போக்குவரவுகளும் நடைபெற்றன. யாழ்நகரில் இருந்து நாவற்குளி தனங்கிளப்பூடாக கேரதீவை பேரூந்து சென்றடைய பின்னர் சிறிய படகு மூலமாக மக்கள் சங்குப்பிட்டியை அடைந்து அங்கிருந்து வேறு ஊர்திகள் மூலமாக பூநகரி மன்னார்வரை செல்ல முடிந்தது.

கைதடி முதியோர் இல்லத்தில் அவர்கள் முத்தியடையாமலே இடம் பெயர்ந்து விட்டனர். ஓரிடத்தில் இருந்து இறந்து போவதற்குக்கூட அவர்களால் முடியவில்லை. சாகும்வரை ஓட்டம் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. அருகில் புதிதாய் உருவான பனம்பொருள் அபிவிருத்தி நிலையம் பால் காய்ச்சப்படாமலே நஞ்சூட்டப்பட்டு மரணித்துப் போய் கிடக்கிறது. சற்று நகர பல்கலைக்கழக சித்தமருத்துவ பீடம், சித்தமருத்துவ வைத்தியசாலை சிதறடிக்கப்பட்டுக் கிடக்கிறது. இருந்தாலும் சீமெந்தும் சாந்தும் குளைத்துப்பூசி ஓரளவு குணமாக்கவும் செய்திருக்கிறார்கள்.

மீண்டும் கைதடிச்சந்தி, ஆரியபவான்வடை அன்புடன் வரவேற்க ஆவலுடன் உள்ளே நுழைகிறேன். வடை இருக்கிறது. ஆனால் மலையாளிகள் கைப்பக்குவம் இல்லை. யுத்தம் அவர்களையும் தாயகம் திருப்பிவிட்டது. வீதிகளைப் போலவே கடைகளும் மக்களின் வருகைக்காகக் காத்திருக்கின்றன. வீதிப்போக்குவரத்து செய்பவர்கள் குறைந்துவிட்டதனால் கடைகளின் வியாபாரங்களும் குறைந்துவிட்டன.

சிற்றுண்டிதாக சாந்தியுடன் புதுத்தெம்புடன் எனது பயணமும் மீண்டும் ஆரம்பமாகிறது. இந்த வீதிகளில் முன்பு எவ்வளவு மக்கள், ஊர்திகள் பயணம் செய்திருக்கின்றன. யாழ்ப்பாண உற்பத்திகள் பாரவூர்திகள் மூலமாக தெற்குப் பகுதிக்கும் தெற்குப் பொருட்கள் யாழ்ப்பாணத்துக்கும் இந்த வழியால் தானே எடுத்துச் செல்லப்பட்டன. இன்று வீதிகளும் களையிழந்து இங்கு வாழ் மக்களின் முகங்களைப் போல வெறிச்சோடிக் கிடக்கின்றன. இதோ கைதடிப்பிள்ளையார் இந்தக் கோவிலில் வழிப்பயணிகள், வாகனங்கள் என வழிபாட்டுக்காக தரித்துச் செல்லுவார்கள். பயணங்கள் குறைந்துவிட்டதால் கோவிற் தரிசனங்களும் குறைந்துவிட்டன. பெருமைவாய்ந்த பிள்ளையாரும் பெருமையற்று இருக்கிறார். கோவிலின் அருகே கைவிடப்பட்டிருந்த சுமைதாங்கி சத்திரம் என்பன அடையாளத்துக்குக்கூட விட்டு வைக்காமல் வேரோடு அகற்றிவிட்டார்கள். பழைய வரலாறுகள் மறைக்கப்பட்டுவிட்டன. சாத்திரங்கள் பார்த்துத்தான் சத்திரங்கள் இருந்த இடங்களைக் கண்டு பிடிக்க வேண்டியதாகிவிட்டது.

வேலைகளை ஆரம்பிக்கும்போது தான் பிள்ளையாரை வழிபடுவார்கள். இந்த வழிப் பிள்ளையாரை யாவரும் பயபக்தியுடன் வணங்குவார்கள். யாழ்ப்பாணத்தின் வீதிகளில் பலரின் விதிமுடிவடை வதால் பிள்ளையாரிடம் அபயம் கேட்கிறார்கள். இந்த அற்ப சொற்ப நம்பிக்கையில்தான் மக்களின் மிகுதி வாழ்க்கையும் ஓடிக்கொண் டிருக்கிறது. முன்னே கைதடிப்பாலம் கண்ணுக்குத் தெரிய சம்புகுண்டம் கரதண்டம் ஆகிய ஊர்களுக்கு விடை கொடுத்து மட்டுவில் நுணாவில் வழியாக எனது பயணம் மீண்டும் நகரத் தொடங்குகிறது.

கைதடி நுணாவில் வீதியின் இருபுறமுமாக குடிமனைகள் இடிந்தும் கைவிடப்பட்டும் பாழடைந்துபோயும் கிடக்கின்றன. ஊழிக்காற்று தாண்டவமாடி ஊர்மனைகளை அழித்துவிட்டது. இந்த வீடுகளிலும் மண்ணிலும் மகிழ்ந்திருந்த மக்கள் எங்கே? இந்தப் பூமிப்பந்தில் எங்கோ ஓர் இடத்தில் இவர்கள் அகதிகளாக வாழ்ந்து கொண்டுதானிருப்பார்கள். இவர்களின் இந்த வீடுகளைப் போல அவர் உறவுகளும் உருக்குலைத்து நாலாதேசமும் பரவி விடப்பட்டிருக்கின்றன. அம்மா அப்பா இந்தியாவில், மகன் லண்டனில், செல்ல மகள் கனடாவில், இப்படித்தான் இவர்கள் பிரிவுச் சுமைகளை நெஞ்சில் தாங்கி வாழக்கற்றுக் கொண்டிருக்கிறார்கள். இன்னும்சிலர் அநாதையாய் அகதியாய் வீதிகளில் விடப்பட்டிருக்கிறார்கள்.

நான் மிதிவண்டியை அதிகம் மிதித்து வந்ததால் அதுவும் என்னை மதிக்கவில்லை. உள்மூச்சை வெளியே விட்டு சயிக்கிள் ரயர் தனது வெறுப்பைக் காட்டிவிட்டது. எங்காவது ஒட்டகங்கள் வந்தால் ஒட்டிக் கொண்டு போகலாம். இந்தப் பாலத்தில்தான் இரவுகளில் பேய்களும் பிசாசுகளும் சஞ்சரிக்கின்றன என்ற பயமிக்க கதைகளைக் கேட்டிருக்கிறேன். பின்னே தட்டிப்பார்க்கிறேன் அடையாள அட்டை இருக்கிறது. சைக்கிளின் காற்றுப் போனது போல் எனது மூச்சுப் போனால் என்ன செய்வது? கொள்ளிவால் பேய்கள் ஊளையிடும் நரிகள் சஞ்சரித்த இந்தப் பாலத்தில் இப்போ நான் மட்டும் தனியனாக செல்கிறேன். முன்னொரு நாள் அதிகாலையில் தீப்பந்தம் ஏந்தி அடியார்கள் பாதயாத்திரை செய்ததைப் பார்த்திருக்கிறேன். இங்கு நின்று தச்சன்தோப்பில் ஓடும் புகைவண்டியைப் பார்த்திருக்கிறேன். இப்பொழுது அவை யாவும் பாழாய் பழங்கதையாய் போய்விட்டது. குடாநாட்டில் வாழ்கின்ற புதிய இளந்தலைமுறையினர் தொடரூந்தினை கண்டிருப்பதற்குக் கூட வாய்ப்பில்லாமல் போய்விட்டது. இப்போ இந்தப் பரந்த வெளியில் நான் சுவாசிப்பது வெப்பக் காற்றைத்தான். புற்களும் மரங்களும் காய்ந்துபோய் சருகாகக் கிடக்கின்றன. இங்கு வாழ்ந்து விட்டுச் சென்ற மனிதர்களைப் போல் மீண்டும் ஒரு வசந்த காலத்துக்காக அவை தவமிருக்கின்றன.

வைரவகோயில் சந்தி வருகிறது. வழிப்பயணிகள் பயன்பாட்டுக்காக மடம் ஒன்று இன்றும் இருக்கிறது. மடங்களின் பயன்பாடுகள் தற்காலத்தில் குறைவடைந்து விட்டாலும் பேரூந்துப் பயணிகள் அதனை நிழற்குடையாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இந்த மடத்தில் ஒவ்வொரு வருடமும் பங்குனித்திங்கள் நாட்களில் தண்ணீர்பந்தல் போட்டு இவ்வூர்மக்கள் தாக சாந்தி செய்து கொண்டிருக்கிறார்கள். மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில் திருவிழா இக்காலங்களில் கொண்டாடப்படுவதால் முற்காலங்களில் அடியார்கள் நடந்தும், மாட்டுவண்டிகளிலும் தற்காலத்தில் ஊர்திகள் உழவு இயந்திரங்கள், உந்துருளி, ஈருருளி மூலமாகவும் பயணிக்கின்றார்கள். பங்குனிமாத வெயிலில் பயணிப்பவர்களுக்கு இத்தகைய தண்ணீர்ப் பந்தல்களில் நீராகாரம் கொடுத்து உபசரிக்கப்படுகிறது. மோர், சக்கரைத்தண்ணீர், ஊறுகாய்நீர், தேசிக்காய்தண்ணீர் போன்றன தாக சாந்திக்காக வழங்கப்படுகின்றன. சில சமயங்களில் பொங்கல் உட்பட மோதகம், வடை, நீர்க்கஞ்சி என்பனவும் வழங்கப்படுகின்றன. சமாதான காலங்களில் அம்மன் கோவிலுக்கு அதிகமான பக்தர்கள் இப்பாதையல் வருவதால் அவர்களுக்கு இவ்வகையான தண்ணீர்ப்பந்தல்கள் பேருதவியாக அமைந்து

விடுகின்றன. யுத்தம் மக்களை புலம்பெயர்வுக்கு உள்ளாக்கியது மட்டுமல்லாமல் மக்கள் வீதிகளுக்கு வரவும் அச்சப்படுகின்றனர். இத்தகைய இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டிருப்பதால் தண்ணீர்ப்பந்தல் போடுபவர்கள் அதனைப் பயன்படுத்துபவர்கள் குறைவடைந்து செல்வதை அவதானிக்க முடிகிறது.

நுணாவில் சந்திக்கு சற்று முன்பாக சாவகச்சேரி நகர எல்லை அறிவிப்பு என்கண்ணில் படுகிறது. நகரம் என்பது வெறும் அறிவிப்பு மட்டும்தான். அதனருகேயுள்ள வீடுகள் மக்களின்றிக் கைவிடப்பட்டுக் கிடக்கின்றன. பலகுடிமனைகள் சிதைவடைந்து போய்க்கிடக்கின்றன. கைவிடப்பட்ட நகரம் ஒன்றைத் தரிசிப்பதற்கான ஆரம்ப அறிகுறியை நகர எல்லையிலேயே அவதானிக்க முடிகிறது. மட்டுவில் அம்மன் கோவில் பங்குனித் திங்களில் மேலும் அதிகமான பேரூந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன. அமைதி வாழ்க்கை சீர்குலைவுக்குப் பின் சேவைகள் யாவும் மட்டுப்படுத்தப்பட்டுவிட்டன.

கணீர் கணீர் என சிறிய மாட்டு வண்டியில் ஒலி எழுப்ப அதன் பின்னே பலசிறுவர்கள் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் திரும்பும் போது கைகளில் சில மோதகங்களுடன் வருகிறார்கள். இந்தக் காட்சியை பல வருடங்களுக்கு முன்னர் இந்த வீதிகளில் அவதானிக்க முடிந்தது. சில அடியார்கள் தில்லையம்பலம் பிள்ளையாருக்கு மோதகம் அவித்து வழிபட்டபின்னர் மாட்டுவண்டில்களில் இப்பாதையூடாக பயணிப்பது வழக்கம். இந்த மாட்டுவண்டில்களில் மோதகங்களையே சிறுவர்கள் ஓடிப் பெற்றுக் கொள்கிறார்கள். அவர்கள் இந்தவண்டிகளை "மோதகவண்டில்" என செல்லமாகவும் அழைக்கிறார்கள். இப்பொழுது இந்த வண்டில் பயணங்கள் நின்றுவிட்டன. பிள்ளையாரும் பிள்ளைகளும் மோதகங் களைக் கண்டு பல நாட்களாகிவிட்டன. யுத்தம் அவற்றையும் விழுங்கி விட்டது.

மிதிவண்டித் திருத்தகங்கள் எதுவும் வீதியோரம் காணப்பட வில்லை. எனது நடைப்பயணமும் தொடர்கிறது. இப்பொழுது நான் 190இல் நிற்கிறேன். இந்த இடத்தை இப்படித்தான் அழைக்கிறார்கள். கண்டியில் இருந்து 190 ஆவது மைல் தூரத்தில் இருப்பதால் அப்படி அழைக்கிறார்கள். இன்னும் நான் ஒரு மைல்தூரம் கடந்துவிட்டால் சாவகச்சேரி சென்று விடுவேன். எனது பயணமும் நிறைவு பெற்று விடும். கால்கள் நடக்கத் தயக்கம் காட்டுகின்றன. பெரியமரங்களின் நிழல்,

அருகினில் இருந்து இளைப்பாற ஒரு மடம், பக்கத்தில் நீர்குடிப்பதற்காக சிறுகிணறு. நான் சற்று ஓய்வெடுத்துக் கொள்ளவும் கொஞ்சம்படுத்து காலைநீட்டிக் கொள்ளவும் இதுதான் நல்ல இடம். முன்னோர்களுக்கு எனது நன்றிகள். வீதியோரங்களில் மரங்களை நாட்டி நிழல்களையும், தங்கி இளைப்பாறிக் கொள்ள மடங்களையும் கொடுந் தாகத்தைப் போக்க கிணறுகளையும் கட்டிய நல்லோர்களின் ஆத்மா சாந்தியடைவதாக. இந்த நன்றியறிதலுக்குப் பின் எனது நடை பவனி மீண்டும் புதிய உற்சாகத்துடன் ஆரம்பமாகிறது.

அதோ தெரிகிறது சாவகச்சேரி நகரம். நகரம் நான்கு ஐந்து நபர்களுடன் இயங்கிக் கொண்டிருக்கிறது. சுறுசுறுப்பாக இயங்கிய நகரம் ஆரவாரமற்று மௌனித்துப் போய்க் கிடக்கிறது. இடிந்துபோன கட்டடங்களுக்குள் ஒரு சில கடைகள் ஒற்றைக் கதவுகளுடன் அவையும் மூடப்பட தயாராகிக் கொண்டிருக்கின்றன. உள்ளே சந்தை அங்கே ஆடு மாடுகள் உறங்கிக் கொண்டிருக்கின்றன. இரண்டு மணிக்குப் பின்னர் சந்தை இப்படித்தான் மிருக சந்தையாக மாறிவிடுகிறது. ஆயிரக்கணக்கான மக்களிடையே நெருக்குப் பட்டு புதினம் பார்த்தநான் இன்று மனிதர்களற்ற வெறும் சந்தை வெளியைப் பார்க்கிறேன். எத்தனை எத்தனை மனிதரக்ள் எத்தனை வியாபாரத் தந்திரங்கள். விற்போர் கொள்வோர்களின் முரண்பாடுகள். ஆட்டம் பாட்டம் என மக்கள் சமுத்திரமாக நின்று ஆர்ப் பரித்த சந்தை இன்று ஆள்அரவமற்ற மயான பூமியாய் மாறியிருக்கிறது.

பேரூந்துகளின் தரிப்பிடத்தில் பேருக்குக்கூட பயணிகள் காணப்படவில்லை. தூரதேசங்கள் மட்டுமல்ல குறுந்தேசங்களுக்குப் பயணிப்பதற்கும் ஊர்திகள் இல்லை. தூரத்தில் சினிமா விளம்பரங்கள் சிதறிக்கிடக்கின்றன. அதோ வீரத்தமிழன் இராஜஇராஜசோழன் தென்கிழக்காசிய நாடுகளைக் கைப்பற்றி வீரக்கொடி நாட்டிய வரலாற்றைக் காண்பித்த சினிமா அரங்குகள் சிதறிப்போய் கிடக்கிறது. இந்த அரங்குகள் திரைப்படங்களைக் காண்பிக்காமல் யுத்தவடுக்களைக் காண்பித்துக் கொண்டிருக்கின்றன. இப்பொழுது இந்தப் படங்களைப் பார்ப்பதற்கு நீண்ட வரிசைகள் தேவையில்லை. நுழைவுச் சீட்டுக்கள் எதுவும் தேவையில்லை. யார் வேண்டுமானாலும் பார்க்கலாம். பரிநிர்வாணம் அடைந்த பின்பு மறைப்புகள் எதற்கு? இது நவீன சந்தை. இத்தனை ஆண்டுகளும் இந்த மண்ணில் சுவாசித்துக் கொண்டிருந்த மக்கள் எங்கே போய்விட்டார்கள்? இந்தப் பூமிப்பந்தில் எங்கோ ஒரு மூலையில் தங்கள்

மண்ணின் நினைவுகளுடன் சுவாசித்துக் கொண்டுதான் இருப்பார்கள். ஏதோவொரு அற்பசொற்ப நம்பிக்கையுடன் இந்தச் சந்தைப்பூ இன்னமும் மனிதவண்டுகளின் வருகைக்காகக் காத்துக் கொண்டுதானிருக்கிறது. இன்னொருநாளை நான் தரிசிக்க வேண்டுமானால் மாலை ஏழு மணிக்குள் வீட்டுக்குப் போய் சேர்ந்திட வேண்டும். இப்பொழுது நான் போகின்ற பாதை மரணபயத்தைத் தருகிறது. மாலை நேர இயற்கை ஒலிகள் சோக கீதம்பாடி என் துன்பத்தின் வலியைத் தூண்டிக் கொண்டிருக்கின்றன.

கொக்கரக்கோ...... சேவல்கள் கூறும் துயரச்செய்தி
ரிரீ ரிரீ ................ ஆட்காட்டிக் குருவியின் அபாய அறிவிப்பு
கூ...கூ....கூ............. குயில்கள் கூறும் காலத்தின் எச்சரிக்கை
கா....கா....கா........ காகங்கள் கூறும் கண்ணீர்க்கதை
வவ்.....வவ்...வவ்... நாய்கள் சொல்லும் மரண அறிவித்தல்

தென்னங்கீற்றும் பனைமரக்காற்றும் மரணித்து மௌனிகளாகிவிட்டன. பலாமரச் சோலையின் பச்சை முள் தபாற்பெட்டிகளுக்குள் இன்னமும் காகங்கள் தேடிக்கொண்டுதான் இருக்கின்றன. மரணச் சான்றிதழ்களையும் காணாமற் போனோர் தரவுகளையும் தேடுகின்றனவோ? தூரத்தில் நரிகள் ஊளையிட்டுக் கொண்டிருக்கின்றன. அதனருகே நாய்கள் குரைத்து எதிர்க்குரல் எழுப்பிக் கொண்டிருக்கின்றன. இந்தப் பயங்கரமரண ஒலிகளுக்கிடையே பயந்து பயந்து பதுங்கிப்பதுங்கி என் வீட்டுக்குப் போகிறேன். அப்பாடா! என் மிதிவண்டியாவது இனி இளைப்பாறட்டும். மீண்டும் எனக்கொரு அதிஷ்டம் இருந்தால் உங்களை இன்னொரு வீதியில் சந்திக்கிறேன்.

6

# பெரியபிள்ளை

குடும்ப வாழ்வு சிறப்பாக அமையுமாயின் சமூக வாழ்வும் சிறப்புக்குரியதாக அமைந்துவிடும். தமிழர்களின் வாழ்க்கையில் நம்பிக்கைகள், சடங்குகள் அதிகளவில் இடம்பிடித்துள்ளன. பெரும்பாலானவர்கள் அவற்றை ஏன்? எதற்காக செய்கின்றோம் எனத் தெரியாமலே செய்கின்றனர். ஒவ்வொரு செயல்களின் காரணகாரியங்களை தெளிவாக அறிந்து கொண்டாலே அவற்றில் உள்ள நன்மை தீமைகளை தெரிந்து கொள்ளமுடியும். ஒவ்வொருவரும் தமது குடும்பங்களில் நிகழுகின்ற சடங்குகள் சம்பிரதாயங்களில் உள்நுழைந்து காணப்படுகின்ற மூட நம்பிக்கைகளையும் , போலித்தனங்களையும் வேரறுக்க முன் வரவேண்டும்.

நாளைக்கு வயலில் நிறைய வேலையிருக்கு. வேளைக்கு வந்திடு என மாமன் சொன்னதால் எனக்கு இரவுசரியாகத் தூக்கம் வரவில்லை. அடிக்கடி எழும்பி நேரம் பார்த்ததுதான் மிச்சம். விடியப்புறம்தான் தூக்கிப் போட்டால் போற் தூக்கம் வந்து தொலைச்சுது. அடேய்..... எழும்படா.... எழும்படா என முறுக்கேறிய கைகளால் தட்டி எழுப்பியது மாமன்தான். குளிர்ந்த காற்றின் தழுவல்களை விலக்கி ஆழ்ந்த உறக்கத்தின் மயக்கத்தைக் குலைத்து எழுந்து நடக்கிறேன். என் அப்பன் அம்மா எனக்கென ஒன்றும் விட்டுப் போகவில்லை. விட்டுப்போனது இந்த ஓலைக் கொட்டில் மட்டும்தான். வேலியில் இருந்த துவாயை தலையில் கட்டி, கோடியில் கிடந்த மண்வெட்டியை தோளில் தாங்கி எல்லைக்கு செல்லும் வீரனைப்போல் கம்பீரமாய் நடக்கிறேன்.

என் மாமன் கொஞ்சம் பகிடிக்காறன். பிந்தினால் கிண்டல்செய்து என்னை இடித்துக் கொண்டேயிருப்பான். அம்மாவின் கூடப்பிறந்த தம்பி. அப்பரும் அம்மாவும் செல்விழுந்து ஒன்றாய் செத்துப்போனதுக்கு பிறவு மாமன்ரை உதவியும் ஒத்தாசையும் எனக்கும் தேவைப்படுது. என்னைப் போல எத்தனை எத்தனை உயிர்கள் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கு. சாப்பாடு இல்லாவிட்டாலும் பறவாயில்லை நிம்மதியாய் இருக்க விடுறாங்களா? இந்த நினைவுகளுடன் விரைந்து நடந்திட தோட்டமும் வந்துவிட்டது. மாமன் வேலையை தொடங்கிவிட்டார். என்ன அந்தாள் இரண்டு நக்கலடிக்கும். கேட்டுவிட்டு வேலையை ஆரம்பிப்பம்.

“ம்.... இப்பான் மாப்பிளை வாறார் ஆலாத்தி ஏதும் எடுக்கிறதோ?” இது மாமனின் பல்லவி. உனக்கென்ன அவ்வளவு நித்திரை வாழ்க்கையிலே முன்னேற வேண்டும் என்ற எண்ணம் இல்லையோ? சரிசரி பாத்திகளைக் கட்டு. ஏன்மாமா ஒவ்வொரு முறையும் புகையிலைதானே நாட்டுறது. இம்முறையேன் குரக்கனில் விழுந்திட்டியள். இல்லையடா பாதைகளும் தடைபட்டுப் போய்கிடக்கு. கொழும்புக்கு புகையிலை அனுப்புறதும் கஷ்டம். எந்தநேரம் என்ன நடக்குமோ தெரியாது. குரக்கன் என்றால் எங்கடை சாப்பாட்டுக்கென்றாலும் நின்றுபிடிக்கும். எந்தப் பிரச்சினைகள் வந்தாலும் எங்களுக்கு சாப்பாட்டு பஞ்சம் வராது. மாமன் சொன்னது நியாயம்தான். எங்களுக்கு தேவையானவற்றை நாங்களே செய்து கொண்டால் ஏன் நாங்கள் மற்றவனிடம் கையேந்த வேண்டும். மருமோன்

இந்த ஆறுபரப்பு நிலத்திலே நான்கு பரப்பிலே குரக்கனும் மிகுதி நிலத்திலே வீட்டுக்குத் தேவையான மரக்கறிவகைகளையும் போடுவம். மாமன் சொன்னது எனக்கும் சரியெனப்பட்டது.

நண்டுக்கறிவாசனை மூக்கை துளைக்க நிமிர்ந்து பார்க்கிறேன். தூரத்தில் நடைவரம்பில் ஒருபெண். தலையிலே கடகம். கையிலே தண்ணீர் போத்தல். மோராக இருக்குமோ? ம்.. அது மாமியேதான். மாமா அந்தோபாருங்கோ உங்கடை செல்லம் வருது. புன்னகைத்த முகத்துடன் தலைப்பாகையைக் கழற்றி நெற்றிவியர்வையை துடைத்துவிட்டு ஒரு பார்வை விட்டெறிகிறார் மாமன். என்ன மாமா இண்டைக்குத் தான் மாமியை முதன் முதலாய்ப் பார்க்கிறமாதிரிக் கிடக்குது. இல்லையெடா மருமோன் எனக்கு வாழ்க்கைப்பட்டதாலே பாவம் அதுவும் கிடந்து கஷரப்படுது. கடைக்கு போய்சாமான் சக்கட்டு வாங்கி சமைச்சுப்போட்டு அதை தலையிலே வைத்துக் கொண்டு உந்த வெயிலுக்கால வாறதைப்பார். என்ன செய்யுறது மாமா. குடும்பம் எண்டு வந்திட்டால் உப்படித்தான் ஆளுக்காள் ஒத்தாசையாய் இருந்தால்தான் வாழ்க்கை சக்கரத்தை ஓட்ட முடியும்.

என்னமாமி இண்டைக்கு கறிவாசம் தூக்குது. ஓமடா பெட்டிக்காரன் வந்தவன் அவனிட்டைதான் நண்டு வாங்கினனான். உனக்கும் விருப்பம்தானே. அவள் புள்ளைக்கும் நண்டெண்டால் நல்ல விருப்பம். பூவரசம் இலையிலே மாமி குழைச்சுத்தந்த சோறு கறி சொல்லி வேலையில்லை.

அதுசரி செல்லம். பள்ளிக்கூடத்தாலே செல்வி வந்திட்டாளே? ஓமோம். அவள் வந்து இப்போ ரீயுசனுக்கு போய்விட்டாள். இனி ஆறுமணிக்குத்தான் வருவாள். அவளும் இப்பவோ அப்பவோ எண்டிருக்கிறாள். எங்களுக்கு இருக்கிறது ஒரு பிள்ளைதானே சாமத்தியவீட்டை நல்ல சிறப்பாய் செய்ய வேண்டும். சரிசரி நீங்கள் இரண்டு பேரும் கதைச்சுக் கொண்டிருங்கோ. நான் போய் ஆடு மாட்டுக்கு தண்ணிவைச்சிட்டு ஓடிவந்திடுறன். ஓம் மருமோன் போட்டு கெதியாய் வா. செல்லம் நீர் என்ன சொல்லுறீர். இப்ப நாடு கிடக்கிற கிடையிலே சாமத்திய கொண்டாட்டம் தேவையோ? பொம்புளைப்புள்ளைகளிலை ஏற்படுகின்ற சராசரி மாற்றந்தானே அது. அதுக்கேன் விழா கொண்டாட்டம் எல்லாம். உங்களுக்கென்ன விசரேயப்பா? நாங்கள் கொடுத்ததுகளையெல்லாம் வேற எப்படி வாங்கிறது. அதோட

கொண்டாட்டம் எண்டால்தானே நாலுபேர் வருவார்கள். எங்கடை செல்வியையும் பார்ப்பார்கள். நாளைக்கு கலியாணம் எண்டு வரேக்கை தேடிவருவினமல்லோ. செல்லம் என்ன நீர் சின்னப் புள்ளை மாதிரிக் கதைக்கிறீர். சாமத்தியவீடு என்பது கொடுத்த காசுகளை திருப்பி வாங்கவும் பொம்புளையை விளம்பரப்படுத்துவதற்கும் செய்கிற திருவிழாவோ? அப்படித்தான் வாங்க வேணுமெண்டாலும் கலியாண வீட்டை சிறப்பாய் செய்து வாங்குறதுதான் இப்ப அவள் படிக்கட்டும். நல்ல தொழிலைத் தேடட்டும். அதுக்குப் பிறகு ஆறஅமர இருந்து யோசிப்பம்.

உங்களுக்கென்ன தெரியும் எங்கட அம்மாவின்ரை காலத்திலே சாமத்தியவீடெண்டா மூன்று நாலு நாளைக்கு முன்பே மரத்தில் லஸ்பீக்கர் கட்டிப் பாட்டுப் போடுவினம். ஊரெல்லாம் பாட்டுக்கேட்டு சந்தோசமாய் இருப்பினம். உறவுகள் மூன்று நாளைக்கு முதலிலே வந்து பலகாரச்சூடு, பந்தல்போடு, சோடிப்பு என வீடே அமர்க்களமாய் இருக்கும். அவ்வளவும் ஏன் என்ரை சாமத்தியவீட்டுக்கு நீங்களும் வந்தனியள்தானே. வீடியோவிலும் என்னைப் பார்த்து திருட்டு முழிமுழிச்சுக் கொண்டிருக்கிறியள். வீடியோ? போட்டோ பாட்டு என சிறப்பாய்தானே செய்தவையள். அப்படியொரு சிறப்பை எங்கடை புள்ளை பார்க்க வேண்டாமோ? அப்படியில்லை செல்லம். முந்திய காலத்திலே சனங்களுக்கு வேலை இல்லை. இப்படியான கொண்டாட்டங்களிலே கலந்து சந்தித்து விருந்து கொண்டாடிப்போறது ஞாயம்தான். அதற்காக மரத்திலை ஸ்பீக்கர் கட்டி நாள் கணக்காய் ஊரைக்குழப்புறதிலை ஞாயம் இல்லை. இருந்தாலும் கிராம வாழ்க்கையிலே பாட்டுக்கேட்ட திசையை நோக்கி மக்கள் நடந்துபோய் வீட்டைக் கண்டுபிடிச்சிருப்பினம். ஆனால் இண்டைக்கு வீடியோ எடுப்பதற்காகவே விழா எடுக்கினம். எத்தனை பேரின்ரை நேரத்தை மண்ணாக்கினம். சடங்குகளுக்கு ஒரு மணித்தியாலம் எண்டால் வீடியோ சடங்குக்கு நாலுமணித்தியாலம் எடுக்கினம். அதுமட்டுமா வந்தசனங்கள் சாப்பிட்டுட்டு காசு கொடுக்க காவல் இருக்குங்கள். பெண்ணை உடுப்பு மாத்த எண்டு கூட்டிக்கொண்டு போய்விடுவினம் உப்புடி எத்தனை உடுப்பு மாத்துக் கட்டங்கள் வரும். சனங்கள் காசைகையிலை வைத்துக்கொண்டு புறுபுறுத்துக் கொண்டு நிக்குங்கள். இது தேவையோ? நீங்கள் என்ன சொன்னாலும் நான் ஒத்துக் கொள்ள மாட்டன். உதேன் வெளிநாட்டிலே எங்கடை ஆக்கள் சாமத்திய கொண்டாட்டத்திலே பெண்ணை கெலிகெப்றரில் ஏத்திக்கொண்டு போய் மண்டபத்துக்குக்கிட்ட இறக்கினவையாம். அவையளுக்கு எவ்வளவு

பெருமையாய் இருக்கும் தெரியுமா? அதுசரி இப்ப உமக்கு தேவைப்படுது அவ்வளவுதான். ஏன் எங்கடை புள்ளையை படிப்பிச்சு நல்லதொழில் துறைக்கு அனுப்பினால் எல்லாப் பெருமையும் தேடிவரும். அதைவிட்டுப்போட்டு பொம்புளையை கெலிகப்றறில் ஏத்துறது எண்டு அலம்புறீர். உமக்கொண்டு தெரியுமோ? எவ்வளவுசனம் இங்கு அகதி முகாம், அநாதையில்லம், சிறுவர் இல்லம், முதியோர் இல்லம் எனக்கிடந்து கஷ்ரப்படுதுகள். அங்கை கெலிகப்றறில் ஏத்திக் கொண்டுபோன வாடகைக்காசு மட்டும் ஐந்து இலட்சமாம். அதையிங்கே அனுப்பினால் எத்தனை வயிறுகளுக்கு கஞ்சிவாக்கலாம். இதனாலை எவ்வளவு பெருமை வரும். அதைவிட்டுப்போட்டு காசைக்கரியாக்கிற வேலையைப் பாராதேம். சரியப்பா உங்களோடு கதைச்சு வெல்லேலாது. அந்தா மருமோனும் வாறார். நான்போட்டு வாறன்.

என்ன மாமா, மாமி ஏதோ கோபத்திலே போற மாதிரிக்கிடக்குது. இல்லையடா மகளின்ரை சாமத்திய வீட்டை பெரிசாய் செய்ய வேண்டுமாம். அது தேவையில்லையென்று சொன்னன் அதுதான் மூஞ்சையை நீட்டிக்கொண்டு போறா. ஏன் மாமி கேட்டதிலே ஞாயம் இருக்குத்தானே. உங்களுக்கு இருக்கிறது ஒரு பிள்ளைதானே. நாலுபேரைப் போல அவளுக்கும் ஆசையிருக்கும்தானே அதையேன் நீங்கள் தடுக்கிறியள்.

சரிமருமோன் வேலையைத் தொடங்குவம். நீ வாய்காலைக் கீறு. நான் பாத்திகளைக் கட்டுறேன். இங்கைபார் நான் தடுக்கிறன் என்று நினைக்காதே. அவன் செய்தான் இவன் செய்தானெண்டு நாங்களும் செய்யக்கூடாது. தவறான உதாரணங்களை நாங்கள் பின்பற்றக்கூடாது. சரியான உதாரணங்களைத்தான் முன்னுதாரணமாய் எடுக்கவேணும். இந்தக் காலத்திலை பொம்புளைப் பிள்ளைகள் எவ்வளவு பெரிய வேலைகளையெல்லாம் செய்யுதுகள். இலட்சங்களை செலவு செய்து இப்படியான கொண்டாட்டங்களை செய்துவிட்டு படிப்பை கோட்டை விட்டு குசினிப்பெண்ணாய் இருப்பதைவிட இலச்சியங்களை மனசிலை வைச்சு புதுமைப்பெண்ணாய் வாழ்கிறது எவ்வளவோமேல். அதைத்தான் நான் விரும்புறன்.

அதுசரி மருமோன் ஆடு மாட்டுக்கு தண்ணிவைக்கப்போனியே எப்படி இருக்கு? நல்ல குழுவன்கிடாய் தீபாவளிக்கு எப்படியும் இருபதுக்கு விக்கலாம். மற்றக்கிடாயை வைரவருக்கு நேந்து

விட்டிருக்கிறன். கிடாய்வெட்டன்று வெட்டுகிறதாய் உத்தேசம். இங்கே பார்மருமோன் நீ தப்பு செய்யுறாய். உனக்கு காசு வேணும் எண்டால் ஆட்டைவில். இல்லை இறைச்சி வேணும் என்றால் நாலு பேரை வெட்டிச் சாப்பிடுங்கோ. ஆனால் கோவில் குளம் என்று சாமிமேலே சாட்டுப்போடாதேங்கோ. ஏன் சாமி உங்களைக் கேட்டதை இறைச்சி தாவென்று. நீங்கள் செய்கிற தவறுகளுக்கு ஞாயம் கற்பிக்காதேங்கோ. இல்லை மாமா காலா காலம் செய்யிறமுறைதானே. அதிலை என்ன தப்பு? சில வருசங்களாய் வைரவருக்கு சரியா கிடாய் வெட்டாததாலே தானே தெருச்சந்திவெளியே இப்ப ஆக்களை வெட்டிப் போடீனம். இதுக்கெல்லாம் சாமிக்குற்றம்தானே காரணம். இங்கைபார் மருமோன் மனிசனை மனிசன் வெட்டுறவேலையை மனநிலை பாதிக்கப்பட்டவனாலைதான் செய்ய முடியும். அதனாலே முதலிலை மனநிலையிலே மாற்றங்களைக் கொண்டுவரவேணும். கொஞ்சம் கஷ்ரம்தான் முயற்சிக்க வேண்டும். அதைவிட்டுப்போட்டு சாமிமேலை பாரத்தைப்போட்டு வாயில்லா ஜீவனை கோவிலில் வைத்து வெட்டி மனிசனும் மிருகமாகக்கூடாது.

அதுசரிமாமா பாத்திகட்டிறியள் குரக்கன் நாத்துக்கு என்ன செய்யப்போறியள். அடுத்த வயலில் போட்டிருக்கிறன். பிடுங்கி நடவேண்டியதுதான். அங்கே பாருங்கோ மாமா, மாமியும் செல்வியும் வரீனம். ஓமடா இடைநேரத்திலை வரீனம் என்னவேன் விசேசமோ? என்னமாமி இந்த நேரம். அதொண்டுமில்லை செல்வியின்ரை ரியூசன் மாஸ்ரரை சுட்டுப் போட்டாங்களாம். அதுதான் வகுப்பு இல்லையாம் வந்திட்டாள். நாங்கள் வீட்டை நிண்டு என்ன செய்யுறது. தேத்தண்ணிவைச்சுக்கொண்டு வாறம். வாறவழியிலே மதவடியிலே நாயைச் சுட்டுப்போட்டாங்கள் துடிச்சுக் கொண்டு கிடக்குது. இப்ப மனிசரைப் போல நாய்களையும் சுடவெளிக்கிட்டுட்டாங்கள். பாவம் நாய், யாற்றை நாயோ? சரி அதுபோகட்டும் நீங்கள் தேத்தண்ணியைக் குடியுங்கோ.

செல்வி படிப்பெல்லாம் எப்படிப்போகுது. பறுவாயில்லை. இந்த முறை இரண்டாம் பிள்ளைக்குள்ளே எப்படியும் வருவன். அதுதான்டா அப்பாவுக்குள்ள ஒரே ஆசை. பிள்ளை, அம்மா ஏதேனும் சொன்னவாவோ? ஓம் அப்பா. இப்ப வரேக்கைதான் சொன்னவா. சாமத்தியக் கொண்டாட்டத்திலை எனக்கும் உடன்பாடில்லை.

வசதியுள்ள ஆக்கள் ஆடம்பரமாய் செய்து காட்டீனம். மற்றாக்கள் எவ்வளவு கஷ்ரப்படீனம். என்னோடை படிக்கிற பிள்ளைகள் எத்தனை பேர்சாப்பிடாமல் வரீனம். சிலபேர் மயங்கி விழுகினம். என்ரை சினேகிதி விஜின்ரை அப்பாவை கடத்திக்கொண்டு போட்டினம். சுபாவின்ரை அண்ணன் சாவு அடைஞ்சிருக்கிறார். இப்படி எங்களை சுற்றியுள்ளாக்கள் துன்பப்பட்டுக் கொண்டிருக்கேக்கை எனக்கொரு விழா எடுப்பது எனக்கு விருப்பம் இல்லை. அதற்காக துன்பங்களைக் கண்டு கோழையாய் ஒதுங்கிப்போகவும் நான் விரும்பவில்லை. படிப்பாலையோ அல்லது வேறு எதாலையுமோ சமூகத்துக்கு ஒரு விடிவைக் கொண்டு வரமுடியுமெண்டால் அதற்கும் நான் தயாராகவே இருக்கிறன்.

என்னடி என்ரை செல்லக்குட்டி. இந்த சின்னவயசிலை உப்பிடி எங்கை கதைக்கப்பழகினனி. எல்லாம் உங்களிட்டை இருந்துதான் அப்பா? ம்...ம்.... அப்பாவும் பிள்ளையும் சேர்ந்திட்டால் செல்லங்கொஞ்சுறதுதான் வேலை. உதைவிட்டு விட்டு வேலையைப் பாருங்கோ. செல்லம் நீர் பேசாமல் இரும். உமக்கேதும் தெரியாட்டிக்கு செல்வியைக் கேட்டுத் தெரிஞ்சு கொள்ளும். ம்... அதுசரி நல்ல அப்பரும் புள்ளையும்.

என்னமாமி உங்கட சுதி குறைஞ்சு கொண்டு போகுது. ஓமடா உவை இரண்டு பேரும் சேர்ந்தால் என்னை இறக்குறதுதான் வேலை. ஏன் மாமி நீங்கள் சாப்பாட்டிலை காட்ட வேண்டியதுதானே. அதுதான் இரண்டுபேருக்கும் இண்டைக்கு கஞ்சிதான். என் செல்லம் கஞ்சியெண்டால் குறைவோ. இரவுக்கு நான் சமைக்கிறன். உதென்ன புதுப்பழக்கம் எங்கையேன் ஆம்புளைகளும் சமைக்கிறதோ? நல்ல கேள்வி கேட்டீர் நான் தோட்டம் துரவு எண்டு திரியுறதாலை சமைக்க நேரம் கிடைப்பதில்லை. இண்டைக்கு பாரும் என்ரை சமையலை. ஆம்புளைகள் சமைக்கிறதிலை தப்பேதும் இல்லை. அப்பா எண்டால் அப்பாதான். இண்டைக்கு என்ன சமையல் அப்பா? அம்மாவின்ரை சாப்பாடு சாப்பிட்டு நாக்கு செத்துப்போச்சு. இரவுக்கு பால்பிட்டவியுங்கோ. ஓம் செல்வி மிச்சம் கிடந்தால் அம்மாவுக்கும் கொடுப்பம் என்ன? ம்.... இரண்டு பேரும் வீட்டுக்கு வாங்கோ. உங்களுக்கு பால்பிட்டுக் கேட்குதோ. வாங்கோ பால் அபிசேகமே செய்து விடுறன்.

சரி சரி வாங்கோ நேரமாய் போச்சு. ஏழுமணிக்கு சித்திபாக்க வேணும். ஏன் செல்லம் அவாவுக்கு ஏதேனும் சுகமில்லையோ? இல்லையப்பா அது நாடகம். அதுதானே பார்த்தன். நாடகம் எண்டால்

எங்கடை ஆக்கள் ரீ.விக்கு முன்னாலை மூக்கைத் தூக்கிக் கொண்டு நிப்பினம். சண்டை, கொலை, சதி, கற்பழிப்பு என இதைத்தானே எல்லாத்திலேயும் காட்டீனம். வீட்டிலை எப்படியெல்லாம் உடுத்து சோடிச்சுக் கொண்டிருக்கினம். எங்கடை சனங்கள் எங்கட பிரச்சினை களைப் பார்த்து அழுகிற காணாதென்று இப்ப ரீ.வி நாடகங்களையும் எல்லோ பார்த்து அழுகினம்.

இஞ்சைபாருங்கோ! பொம்புளைகளை குறை சொல்லாதேங்கோ. ஆம்புளைகள் கூட்டம் கும்மாளம் என வெளிக்கிட்டுப் போடுவியள். வீட்டிலை பொம்புளைகள் தனியாக இருந்து என்ன செய்யுறது? இங்கே பாரும் செல்லம் நான் ரீ.வி பார்க்கிறதை குற்றம் சொல்லவில்லை. நல்ல விசயங்களை அது காட்டவில்லை என்றுதான் குற்றம் சொல்கிறன். மக்களை சிந்திக்க சிரிக்கவிடாமல் ஒரு மாயைக்கே கட்டிப் போட்டெல்லோ கிடக்குது.

நாங்கள் எல்லாரும் இரவுகளில்தான் வீட்டிலை சந்திக்கிறம். இந்த சந்திப்பிலேதான் கூடிக்கதைக்கவும், சிரிக்கவும் மனம் விட்டுப் பேசவும் முடியும். இப்படி சந்தோசமான நாட்களை நாங்கள் ரீ.வி க்கு முன்னாலே இழந்து போறம். நாம் இழந்து போறது வெறும் நேரங்களை மட்டுமல்ல. குடும்ப வாழ்க்கையின் மகிழ்ச்சியான நாட்களையும்தான்.

சரிமாமா நீங்கள் எல்லாரும் வீட்டுக்கு போங்கோ. நான் ஒருக்கால் கடைக்குப் போட்டு அப்படியே வீட்டை போறன். நாளைக்கு சந்திப்பம். சரியடா மருமோன் இரவுக்கு வீட்டுக்கு வந்திடு பால்பிட்டு சாப்பிடலாம். இல்லை மாமா ஊர் அடங்குச்சட்டம் இருக்கிறதாலை வரேலாது. நாளைக்கு சாப்பிடலாம் தானே. சரி... சரி... கவனமாய் போயிட்டு வா.

அப்பாடா! இவ்வளவு நேரமும் போனது தெரியவில்லை. மாமா, மாமி, செல்வி என அனைவரும் நின்றதாலே எவ்வளவு சந்தோசமாய் இருந்தது. எவ்வளவு விசயங்களை நான் தெரிஞ்சு கொண்டன். எல்லோரும் ஒற்றுமையாய் வாழ்ந்தால் எவ்வளவு சந்தோசம். என்னைப்போல தனிமரங்களுக்கு இவ் உறவுகள்தானே ஆறுதல். எத்தனைபேர் உறவுகள் இருந்தும் கோபம் கொண்டு கதைச்சுபேசாமல் காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கினம். எத்தனை பெற்றோர்கள் பிள்ளைகளை வெளிநாடு களுக்கு அனுப்பிப் போட்டு இங்கு தனிக்கட்டைகளாய் கிடந்து கஷ்ரப்படுதுகள். பணத்தை எப்பவும் சம்பாதிக்கலாம். ஆனால்

உறவுகளையும் மகிழ்ச்சியான நாட்களையும் சம்பாதிக்க முடியுமா? இந்த நினைவுகளுடன் தலைகுனிந்து நடந்தபோது என்வீடும் என்னை வா என்றழைத்து அமரச் செய்துவிட்டது. கடைப்பாணும் சுடுதேனீரும் என் வயிற்றை கொஞ்சம் சமாதானப்படுத்திவிட விரித்துப் போட்டபாய் என்னை சுருட்டிப்போட காத்துக் கிடக்கிறது.

மீண்டும் என்மேல் முறுக்கேறியகை. மருமோன் எழும்பு. மாமாவின் அதே குரல். திறக்க மறுத்த கண்களை மீண்டும் திறப்பித்து மாமாவைப் பார்க்கிறேன். என்ன மாமா இண்டைக்கு வேளைக்கு வந்திட்டியள். பால்பிட்டு கொண்டு வந்தனீங்களோ? இல்லையடா பால்பிட்டு பால் பொங்கலாய் போச்சு. என்ன மாமா சொல்லுறியள். செல்வி பெரிய பிள்ளையாகிவிட்டாள். அப்படியா? அதுக்கேன் நீங்கள் சின்னப்புள்ளை ஆகிறியள். செல்வி நேற்று கதைச்சகதையைப் பார்க்கேக்க அவள் பெரிய பிள்ளை எண்டு உங்களுக்கு தெரியவில்லையோ? பெரியபுள்ளை என்பது வெறும் உடலியல் மாற்றத்தாலே வருவதில்லை. அறிவும் அனுபவமும் வந்திட்டால் அன்றே பெரிய பிள்ளை ஆகிவிட்டார் என்பதுதான் அர்த்தம்.

எடே! மருமகன் எப்ப உமக்கு இந்த ஞானம் எல்லாம் வந்தது. நீரும் பெரியபிள்ளை ஆகிவிட்டீரோ? எல்லாம் உங்களிடம் இருந்துதான் மாமா. சரி வாங்கோ போய் ஆகவேண்டியதைப் பார்ப்பம்.

அழகிய வீட்டில் ஆனந்தம் பொங்க மாமி ஒரு பக்கம். மாமா ஒரு பக்கம் உதவிக்கு இன்னும் சிலர். அதினிடையே நேற்றுப் புதுமைப் பெண்ணாய் பொங்கிய செல்வி இன்று என்னைக் கண்டு கால் மண்ணைக் கண்டு முதல் முதலாய் வெக்கப்பட்டுப் போகிறாள். வெட்கப்பட்டது அவளுடன் மட்டுமா? நானும்தான். மீண்டும் ஒரு விடியலுக்காக காத்திருக்கிறேன்.

7

## கலாசார வாழ்வு

கலாசாரம் என்பதற்கு தெளிவான விளக்கம் கொடுப்பது மிகவும் கடினமானதாகும். உலகில் பல்வேறு கலாசாரங்கள் காணப்படுகின்றன. எது நல்ல கலாசாரம்? எது கெட்ட கலாசாரம் என்று பாகுபடுத்திப் பார்ப்பதும் அதை விடக் கடினமானதாகும். எல்லாக் கலாசாரத்திலும் பல நல்ல விடயங்களும் இருக்கின்றன. சில தவறான விடயங்களும் இருக்கின்றன. எனவே ஒவ்வொரு கலாசாரத்தவர்களும் தங்கள் பண்பாடுகள், பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகளில் உள்நுழைந்திருக்கின்ற தவறான சம்பிரதாயங்களை விலக்கி வாழ்வதற்கான மனதியல் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும். அப்போதுதான் ஒவ்வொருவரும் தங்கள் கலாசாரங்கள் பற்றிப் பெருமைப்பட்டுக் கொள்ள முடியும். அத்தோடு உலக

முரண்பாட்டுக் கலாசாரத்துக்குள்ளும் ஈடுகொடுத்து வாழக்கூடியதாகவும் அமைத்துக் கொள்ள முடியும்.

**கலாசார வாழ்வு**

பரந்துபட்ட உலகில் எல்லோரும் ஒரேமாதிரியான வாழ்க்கைக் கோலங்களைக் கொண்டிருக்க முடியவில்லை. இடஅமைவு, காலநிலை என்பன அவர்களின் பண்பாடுகளையும் கலாசாரங்களையும் தீர்மானிக கின்றன. கடும் வெப்பப் பிரதேசங்களில் வாழ்கிறவர்கள் கறுப்பு நிறத்தவர்களாகவும் சுருட்டையான கட்டை முடியுடையவர்களாகவும் காணப்படுகின்றனர். அதிக வெப்பம் அவர்களின் தோலை கறுப்பாக மாற்றியிருக்கிறது. வெப்பத்தில் இருந்து மண்டையோட்டை பாதுகாக்க தலை முடி சுருட்டையாகவும் தோல் தடிப்பாகவும் இருக்கிறது. பொதுவாக ஆபிரிக்கா கண்டத்தில் வாழ்பவர்கள் இத்தகைய தன்மை கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

குளிர் வலயங்களில் வாழ்பவர்கள் வெள்ளை நிறத்தவர்களாகவும் மெல்லிய பழுப்பு அல்லது வெள்ளை நிறமும் உடையவர்களாகவும் காணப்படுகின்றனர். வெப்பம் இப்பகுதிகளில் மிகக் குறைவாக இருப்பதால் அவர்கள் வெள்ளை நிறமானவர்களாக இருக்கின்றனர். நீளமான மென்மையான தலைமுடி, மெல்லிய தோலமைப்பைக் கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர்.

இலங்கை, இந்தியா நாடுகளில் வாழ்பவர்கள் ஓரளவு வெப்பத்தையும் ஒரளவு குளிர்கலந்த காலநிலையை அனுபவிப்பதால் ஆபிரிக்கக் கறுப்பர்களை விட குறைவான கறுப்பு நிறத்தவர்களாகக் காணப்படுகின்றனர். ஆபிரிக்க, அமெரிக்க, ஐரோப்பிய கண்டங்களில் கறுப்பு நிறத்தவர்களுக்கும் வெள்ளையினத்தவர்களுக்கும் இடையே அதிகளவில் கலப்புகள் ஏற்பட்டதால் உருவான புதிய இனத்தவர் ஓரளவு பொதுநிறமானவர்களாகக் காணப்படுகின்றனர்.

உலக மக்களின் நிறம், உடல் அமைப்பு, முகத் தோற்றம் என்பவற்றைப் பெரும்பாலும் காலநிலைகளே தீர்மானிக்கின்றன. எவ்வாறு உலக வாழ் மக்கள் வேறுபட்ட நிறங்களையும் தோற்றப் பொலிவுகளையும் கொண்டு விளங்குகின்றனரோ அவை போல அவர்களின் கலாசாரங்கள், பழக்கவழக்கங்கள், பண்பாடுகள் என்பனவும் மாற்றம் பெறுகின்றன.

ஆபிரிக்கக் கண்டம் வரட்சியான நிலத் தோற்றத்தைக் கொண்டிருப் பதால் விவசாய நடவடிக்கைகள் அங்கு விருத்தி பெறவில்லை. அதனால் அவர்கள் இறைச்சிவகைகளையே முக்கிய உணவாகக் கொள்கின்றனர். குளிர்ப் பிரதேசங்களில் கோதுமை, பழவகை என்பன அதிகமாக விளைவதாலும் அதிகமான மேய்ச்சல் நிலங்கள் இருப்பதால் விலங்கு வளர்ப்பும் நல்ல முறையில் விருத்தி பெற்றுள்ளது. இப்பிரதேசங்களில் வாழும் மக்கள் முக்கிய உணவாக கோதுமை, இறைச்சிவகை, பழவகை என்பவற்றை உட்கொள்கின்றனர்.

இலங்கை , இந்தியா போன்ற நாடுகளில் முக்கியமான விவசாய நடவடிக்கையாக நெல்லுற்பத்தி இருப்பதால் பிரதான உணவாக நெல் அரிசிச் சோற்றை உட்கொள்கின்றனர். காலநிலை அப்பிரதேச மக்களின் உணவுப் பழக்க வழக்கங்களையும் தீர்மானிக்கின்ற சக்தியாக விளங்குவதை அவதானிக்க முடிகிறது.

ஆபிரிக்காவில் கடும் வரட்சி இருப்பதனால் தூசிப்புயல் வீசுவது வழமையானதாக இருக்கிறது. வெப்பம், தூசி என்பனவற்றில் இருந்து தமது உடலை பாதுகாக்க தலை மூடிய மெல்லிய ஆடைகளை அணிந்து கொள்கின்றனர். குளிர் பிரதேச நாட்டுமக்கள் குளிர்காலங்களில் உடல் மூடிய தடித்த ஆடைகளை அணிகின்றனர். இலங்கை இந்திய மக்கள் வெப்பத்தைக் குறைக்க காற்று உட்புகக்கூடிய மெல்லிய ஆடைகளை அணிகின்றனர். உலக மக்களின் ஆடை அணிகளை தீர்மானிப்பதில் காலநிலை செல்வாக்கு செலுத்துவதனை அறிய முடிகிறது.

மக்களின் உடல் அமைப்பு, உணவு வகைகள், உடை அமைப்பு என்பவற்றை அப்பிரதேசங்களின் காலநிலைகளே தீர்மானிக்கின்றன என்பது ஏற்றுக் கொள்ளப்படும் அதேவேளை பண்பாடுகளையும் கலாசாரங்களையும் யார் தீர்மானிக்கிறார்கள் என்பது ஆய்வுக்குரிய விடயமாகிறது.

கலாசாரம், பண்பாடு என்பதற்கு தெளிவான விளக்கம் வகுத்துக் கொள்வது கடினமானது. இருப்பினும் ஒரு சமூகம் நல்லது என ஏற்றுக் கொள்கின்ற நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் சடங்குகள் என்பவற்றின் கூட்டுத் தொகுதியை கலாசாரம் என வரையறுத்துக் கொள்ளலாம். ஆயினும் ஒரு சமூகத்துக்கு நல்லது எனத் தோன்றும் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் என்பன வேறு சமூகத்துக்கு தவறானதாகத் தெரியலாம்.

உலகின் பல்வேறு சமூகங்கள் பல்வேறு விதமான கலாசாரங்களைப் பின்பற்றுகின்றன. ஒரு சமூகத்தின் கலாசாரத்தை தீர்மானிப்பதில் அச் சமூகத்தின் நம்பிக்கைகள், மதங்கள் என்பன முக்கிய பங்காற்றுகின்றன. மதங்களையும் , நம்பிக்கைகளையும் அந்த இடத்தின் சூழலும் காலநிலையும் ஓரளவுக்கு தீர்மானிப்பனவாக இருக்கின்றன.

இலங்கைத் தமிழர்கள் தனித்துவமான கலாசாரங்களை உடையவடர்கள் அவற்றை இறுக்கமாகக் கடைப்பிடிப்பவர்களாகவும் இருக்கின்றனர். புலப் பெயர்வுகளுக்குப் பின் ஐரோப்பிய மற்றும் மேற்கத்தேய கலாசாரங்களில் இன்று வாழவேண்டிய சூழ்நிலைகளும் ஏற்பட்டிருக்கிறது. ஆபிரிக்கர்கள் பொதுவாக மேற்கத்தேய நாடுகளுக்கு புலம்பெயர்ந்த போது அந்நாடுகளின் கலாசாரங்களை அப்படியே பின்பற்றத் தொடங்கிவிடுகின்றனர். ஆனால் இலங்கைத் தமிழர்கள் அவ்வாறு உடனடியாகப் பின்பற்ற முடிவதில்லை. தமது கலாசாரத்தில் கூடிய கவனமெடுத்து அவற்றைக் கடைப்பிடித்து வாழ்வதிலும் தீவிரம் காட்டி வருகின்றனர். இருப்பினும் தமிழ் கலாசாரத்துக்கும் மேற்கத்தேய கலாசாரத்துக்கும் இடையே ஒரு உடன்பாட்டைக் கண்டு வாழவேண்டிய நிர்ப்பந்தத்தில் அவர்கள் இருக்கிறார்கள் என்பது உண்மையாகும்.

மேற்கத்தேய கலாசாரத்தில் தனிக்குடும்ப வாழ்வு முக்கியம் பெறுகிறது. இந்தக் குடும்ப வாழ்வு வசதிமிக்கதாகவும் உடல், உள ஆரோக்கியம் நிறைந்ததாகவும் இருக்கிறது. பெற்றோர்கள் தொழிலுக்குச் செல்பவர்களாக இருக்கின்றனர். சமையல் வேலைகளுக்கு அதிக நேரங்களை செலவு செய்வதில்லை. கூடுதலாக உடனடியாக தயாரிக்கக் கூடிய உணவுகளையே தயாரிக்கின்றனர். கடைகளில் தமக்கு விருப்பமான உணவுகளை வாங்கியுண்கின்றனர். உணவு தயாரிப்பிலும், உண்ணும் போதும் கூடியளவில் சுத்தம் சுகாதாரம் என்பவற்றில் கவனம் செலுத்துகின்றனர். கைகளால் உணவுகளை தொட்டு எடுத்து உண்ணும் பழக்கம் அற்றவர்கள். அதனை அருவெருப்பாகவும் கருதுகின்றனர். சாப்பிடும்போது முள்கரண்டி, கரண்டி, சிறிய பற்கத்தி என்பவற்றைப் பயன்படுத்துகின்றனர்.

தமிழ்மக்களின் கலாசாரத்தில் இன்று தனிக்குடும்ப வாழ்வு முதன்மை பெற்றுவருகிறது. இருப்பினும் தாய் தந்தையரின் பெற்றோர்களை தமது வீடுகளிலேயே வைத்து கவனித்து வருகின்றனர். மேற்கத்தேய

கலாசாரத்தில் வயதான பெற்றோர்கள் காப்பகங்களில் விடப்பட்டு அரசாங்கமே அவர்களைக் கவனித்துக் கொள்கிறது. தமிழ்க் குடும்பப் பெண்கள் தொழிலுக்குச் செல்வது குறைவாகவே இருக்கிறது. அவர்கள் அதிக நேரங்களை சமையல் வேலைகளில் செலவு செய்கின்றனர். மூன்று வேளையும் உணவு தயாரித்து பரிமாறுவது முக்கிய கடமையாகவும் கருதுகின்றனர். உணவுகளை கைகளால் தொட்டு எடுத்து அருந்தும் பழக்கமுடையவர்களாகவும் இருக்கின்றனர். புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் பொது இடங்களில் மேற்கத்தேய கலாசார முறைப்படியும் தமது சமூக நிகழ்வுகளில் தமிழ் கலாசார முறைப்படியும் உணவு அருந்தும் பழக்கத்தைத் தற்போது கொண்டிருக்கின்றனர்.

மேற்கத்தேய வெள்ளையர்கள் தங்கள் வீடுகளை மிக சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருப்பதில் ஆர்வம் காட்டிவருகின்றனர். குறிப்பாக சமையல் அறை, கழிவறை என்பனவற்றில் அதிக கவனமெடுக்கின்றனர். பூங்கன்றுகள், செல்லப் பிராணிகள் வளர்ப்பதில் அதீத ஆர்வத்தை மேற்கத்தேயத்தவர்கள் காட்டுகின்றனர். நாய் முக்கியமான செல்லப் பிராணி. அதற்கென தனியான அறை, தனியான உணவு, மருத்துவக் காப்புறுதி போன்ற ஏற்பாடுகள் அதற்கு செய்யப்படுகின்றன. தாம் போகும் இடங்களுக்கு நாயையும் கூட்டிச் செல்லும் பழக்கமுடையவர்கள். கூடுதலான பெண்கள் இதில் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள். இலங்கையில் தமிழர்கள் கூடுதலாக நாய்களை வளர்த்தாலும் மேற்காட்டிய வசதிகளை நாய்களுக்கு செய்து கொடுப்பதில்லை. மேலும் உரிமையற்ற நாய்கள் ஊர் எங்கும் அலைந்து திரிகின்றன. மேற்கத்தேய நாடுகளில் நாய்கள் யாருக்கும் உரிமை இல்லாமல் இருக்கவும் முடியாது. வெளியே தனியாக அலைந்து திரிவதும் கிடையாது. நாய்களுக்கு கற்பிக்கவென பாடசாலைகள் இருக்கின்றன. அவற்றுக்கென மருத்துவமனைகள் இயங்குகின்றன. நாய்களை படிப்பிக்கவும் மருத்துவத்துக்குக் கூட்டிச் செல்ல வேண்டிய பொறுப்பும் நாய் உரிமையாளர்களுக்கு இருக்கிறது. புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழர்களில் சிலர் தற்போது இவ்வாறான செல்லப் பிராணிகளை வளர்ப்பதிலும் ஆர்வம் காட்டிவருகின்றனர். வெளிநாடுகளில் ஒருநாயை வளர்த்தெடுக்க ஆகும் செலவை இலங்கையில் முப்பது நபருக்காவது போசாக்கான உணவுகளை வழங்கிக் கொள்ள போதுமானதாக இருக்கும்.

மேலைத்தேச நாடுகளில் குடும்ப உறவுகள் தமிழர் கலாசாரத்தைப்

போல இறுக்கமானதாக இருப்பதில்லை. குடும்ப உறுப்பினர்கள் யாவருக்கும் போதுமான சுதந்திரம் இருக்கிறது. தந்தையோ தாயோ பிரிந்து வேறு திருமணம் செய்து வாழ்வது சாதாரண விடயமாக இருக்கிறது. பிள்ளைகள் பதினெட்டு வயதுவரும் வரை கூடுதலாக குடும்பங்களில் இருக்கின்றனர். பின்னர் தமது பாலியல் நண்பர்களுடன் தனித்து வாழத் தொடங்கி விடுகின்றனர். அவர்களுக்கு அரசாங்கம் உதவித்தொகை வழங்குவதால் இயல்பான வாழ்க்கையாக இது நோக்கப்படுகிறது. தமிழர் கலாசாரத்தில் குடும்பப் பிரிவு என்பது மிகக் குறைவாக இருப்பதோடு அது அநாகரிகமான செயலாகவும் நோக்கப் படுகிறது. பிள்ளைகள் திருமணம் ஆகும்வரை பெற்றோர்களின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றனர். திருமணத்துக்கு முன்னர் தனித்து வாழ்வதற்காக அவர்கள் செல்வதில்லை. புலம் பெயர்நாடுகளில் தமிழர்கள் கலாசார முறையான வாழ்க்கையை வாழ்ந்து வந்தாலும் தற்பொழுது விவாகரத்து பிரிந்து வாழ்தல் என்பவற்றில் கணிசமான அதிகரிப்பு ஏற்பட்டுவருவது அவதானிக்கப்படுகிறது.

தமிழர் பண்பாடுகளில் கற்பொழுக்கம் ஒருவரின் வாழ்வியல் மானத்தோடு நோக்கப்படுகிறது. கற்பு என்பது எல்லோருக்கும் பொதுவானது. ஆனால் அதனை பெண்களோடு மட்டும் தொடர்பு படுத்திப் பார்க்கும் மரபு தமிழ் கலாசாரத்தில் இருக்கிறது. ஆண்களும் கற்புடன் வாழவேண்டும் என்பதை கலாசாரம் சொன்னாலும் அது வலுவிழந்த சொல்லாகவே இருக்கிறது. கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் துணையாக வாழ்வதும் ஆயுள்வரை சேர்ந்து வாழ்வதும் தமிழ்ப் பண்பாடாக இருக்கிறது. மறுமணம்புரிவதும் பிரிந்து வாழ்வதும் அநாகரிகமாக நோக்கப்படுகிறது. மேலைத்தேய பண்பாடுகளில் இது சாதாரண விடயமாகவே நோக்கப்படுகிறது. திருமணத்தின் முன்னரும் பின்னரும் தாம் விரும்பியவர்களுடன் பாலியல் உறவுகளை வைத்துக் கொள்வது அவரவர் சுதந்திரமாக நோக்கப்படுகிறது.

தமிழ்ப்பெண்கள் தங்க நகைகளை அணிந்துகொள்வதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். அதனை பெருமை தரும் சமூகக் கௌரவமாகவும் கருதுகின்றனர். மேற்கத்தேயப் பெண்கள் தங்க நகைகளால் தங்களை அலங்கரித்துக் கொள்வதில்லை. அவர்கள் கூடுதலாக விலை கூடிய ஆடைகளை அணிவதில் விருப்புக் கொண்டிருக்கின்றனர். வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் குடும்பக் கொண்டாட்டங்களின் போது அதிகமாக நகைகளை விரும்பியணிவதோடு அதன் மூலமாக

கௌரவம் கிடைப்பதாகவும், பணத்தை தங்கமாக சேமிக்க முடிவதாகவும் கருதுகிறார்கள்.

மேற்கத்தேயப் பாடசாலைகள் மாணவர்களுக்கு அதிக சுதந்திரம் கொடுக்கின்றன. வகுப்பறைகள் எப்போதும் மகிழ்ச்சிக்குரியதாகக் காணப்படுகின்றது. ஆசிரியர் மாணவர்கள் தொடர்புகள் நட்பு முறையில் அமைந்திருக்கிறது. மாணவர்களுக்கு சீருடை என எதுவும் இருப்பதில்லை. தாங்கள் விரும்பும் ஆடைகளை அணிந்து வருகின்றனர். வகுப்பறைகளுக்கு வெளியே அவர்கள் புகைபிடித்தல், உற்சாகத்துக்கான சில மதுவகைகளை அருந்துதல், கட்டியணைத்து முத்தமிடல் போன்ற செயல்களில் மிக இயல்பாக ஈடுபடுகின்றனர். வீடுகளில் அதிகநேரம் படிக்கவோ தனியார் கல்வி நிலையங்களுக்கு செல்லவோ மாணவர்கள் விரும்புவதில்லை. பாடசாலைக் கல்வி போதுமானதாக இருப்பதாகக் கருதுகிறார்கள். பருவ வயதினருக்கு பாலியற்கல்வியைப் போதிக்கின்றனர். பாதுகாப்பான உடல் உறவுக்கு ஊக்கப்படுத்துகின்றனர். இவ்வாறான செயற்பாடுகளால் உடல், உள ஆரோக்கியம் பாதுகாக்கப்படுவதாகவும் அதனால் கற்றலில் முழுமையாக ஈடுபட முடிவதாகவும் மேற்கத்தேய கல்வியியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். அவற்றை வாழ்க்கையிலும் நடைமுறைப்படுத்துகின்றனர்.

தமிழ்க்கலாசாரம் இந்தக் கோட்பாடுகளில் இருந்து தூரவே விலகிநிற்கிறது. பாடசாலைகள் மாணவர்களுக்கு அதிக சுதந்திரங்களைக் கொடுக்கவில்லை. ஆசிரியர் மாணவர் தொடர்புகள் ஆரோக்கியமான தாகக் காணப்படவில்லை. மாணவர்கள் வீடுகளிலும், தனியார் கல்வி நிலையங்களிலும் மேலதிகமாக கல்வி கற்கின்றனர். இலங்கையின் கல்வியமைப்பு போட்டி முறையில் மாணவர்களை தெரிவு செய்வதால் மாணவர்கள் தமது பருவகாலங்களின் பெரும் பகுதியைக் கற்றல் நடவடிக்கைகளிலேயே செலவு செய்கின்றனர். புகைபிடித்தல் உற்சாகபானம் அருந்துதல், கட்டியணைத்து முத்தம் கொடுத்தல் என்பன பாரதூரமான குற்றச் செயல்களாகக் கருதுகின்றனர். காதல் செய்வதும் கண்டிக்கப்படும் அதேவேளை அவை கல்வியை சீரழிக்கும் செயலாகுமெனக் குறை சொல்லப்படுகிறது. புலம்பெயர் நாடுகளில் வாழும் பெற்றோர்கள் தம்பிள்ளைகள் தொடர்பாக பாடசாலைக் கல்விக் காலங்களில் அதிக கவலை கொண்டுள்ளனர் என்பது அவதானிக்கப் படுகிறது. தமிழ்கலாசாரத்துக்கும் மேற்கத்தேய கலாசாரத்துக்குமான பாரிய முரண்பாட்டை பாடசாலைகளிலேயே காண்கின்றனர். ஒரு

கலாசாரத்தில் நல்ல விடயமாக ஊக்கப்படுத்தும் செயல் இன்னொரு கலாசாரத்தில் மிகத்தவறானது எனக் கண்டிக்கப்படுகிறது.

மேலைநாடுகளில் தமது பிள்ளைகள் காதல் செய்கிறார்கள் எனத் தெரியவந்தால் மகிழ்ச்சிப்படுகிறார்கள். பருவ வயதில் காதல் கொள்ளவில்லையானால் துன்பப்படுகிறார்கள். சில சமயங்களில் மருத்துவரிடம் ஆலோசனைகளும் பெறுகிறார்கள். தங்கள் பிள்ளைகள் பாடசாலைச் சுற்றுலாக்கள் செல்லும் போது கருத்தடை சாதனங்களைக் கொடுத்தும் அனுப்புகிறார்கள். தமிழ் பெற்றோர்களால் இவ்வாறு நடந்து கொள்ள முடிவதில்லை. காதல் கொள்வதை அடியோடு வெறுக்கிறார்கள். சுற்றுலாக்களின்போது பாதுகாப்பு மாத்திரைகள் கொடுத்து அனுப்பாத தமிழ்ப் பெற்றோர்கள் ஆசிரியர்களால் எச்சரிக்கப்படும் சம்பவங்களும் நடைபெறுகின்றன. புலம் பெயர் தமிழர்களின் கலசார முரண்பாடுகளில் இந்தப் பிரச்சினையே முதன்மை பெறுவதாக நோக்க முடிகின்றது.

தமிழர்களின் வாழ்வியலில் சடங்குகளும் சம்பிரதாயங்களும் நிறைந்து காணப்படுகின்றன. திருமணம், மரணம் போன்ற நிகழ்வுகளின்போது கிரியைகள் மிக நீண்ட நேரம் நடைபெறுகின்றன. இச்சடங்குகளில் அதிகமானவர்கள் பங்குபற்றுகின்றனர். வெள்ளையர்கள் தங்கள் குடும்பச் சடங்குகளுக்காக அதிக நேரங்களை செலவு செய்வதில்லை. திருமணம் ஒரு தேவாலயத்தில் மோதிரம் மாற்றலுடன் முடிவடைகிறது. இந்தச் சடங்குக்கு மிகக் குறைவானவர்கள் வரவழைக்கப்படுகின்றனர். அவர்கள் பூக்கொத்துக்கள் கொடுத்து மணமக்களை வாழ்த்துகின்றனர். திருமண விருந்து ஒரு உல்லாச விடுதியில் நடைபெறும். வெள்ளையர் சடங்குகள் மிகக் குறுகிய நேரத்துக்குள் நடந்து முடிந்துவிடுகிறது. தமது வாழ்வில் இடம்பெறும் ஒரு சிறிய விடயமாக அதனை நோக்குகிறார்கள். தமிழர்கள் தங்கள் வாழ்வின் பிரதான கடமையாக சடங்குகளைக் கருதுகிறார்கள். அதற்காக அதிகமானவர்கள் வரவழைக்கப்பட்டு மிக நீண்ட நேரமாக சடங்குகளை நடாத்துகின்றனர்.

புலம்பெயர் நாடுகளில் தமிழர்களின் திருமணங்கள் இருவகை கலாசாரங்களைப் பின்பற்றியதாகக் காணப்படுகிறது. திருமணக் கிரியைகள் பொதுவாக தமிழ்கலாசார முறைப்படியும்.வரவேற்பும் உபசரிப்பும் வெள்ளையர் கலாசாரத்தைப் பின்பற்றியதாகவும் இடம் பெறுகிறது.

திருமணங்கள் நிச்சயிக்கப்படுவது இன்று சிக்கல் நிறைந்ததாகக் காணப்படுகிறது. வெளிநாடுகளில் வாழும் இளைஞர்கள் தாயகத்தில்

இருந்து பெண்களை வரவழைத்து திருமணம் செய்து கொள்வதை விரும்புகின்றனர். தாயகத்தில் வாழ்வோர் தமிழ்ப் பண்பாடுகளை இறுக்கமாக பின்பற்றுவதாலும் குடும்பப் பெண்ணாக காலம் முழுக்க வாழ்வார்கள் என்ற நம்பிக்கையிலும் தாயகப் பெண்கள் வெளிநாட்டுத் திருமணங்களுக்காக நிச்சயிக்கப்படுகிறார்கள். ஒருகண்டத்தில் வாழும் பெண்ணை இன்னொரு கண்டத்தில் வாழும் இளைஞன் பெண்ணின் புகைப்படத்தைப் பார்த்தும் மற்றவர்களின் கருத்துக்களைக் கேட்டும் தன் வாழ்க்கைத் துணையை நிச்சயித்துக் கொள்கிறான். நீண்டதொரு வாழ்க்கைப் பயணத்தில் ஈடுபடப் போகிறவர்கள் நேரடியாகச் சந்தித்து கருத்துக்களைப் பரிமாறி தமது வாழ்க்கையை தீர்மானித்துக்கொள்ள முடியாதவர்களாக இருக்கிறார்கள். புகைப்படம் கொடுக்கும் அனுமதியை வைத்துக்கொண்டு பல திருமணங்கள் நிறைவேறுகின்றன. சில திருமணங்கள் தடைப்படுகின்றன. திருமணத்துக்காக வெளிநாடுகளுக்கு வரும் பெண்களில் சிலர் திருமணமாகாமலே தாயகத்துக்குத் திருப்பி அனுப்பப் பட்டிருக்கிறார்கள். இன்னும் சிலர் திருமணமாகி சில நாட்களிலேயே பிரிந்து வாழ்கின்றனர். வேறு சிலர் விவாகரத்துப் பெற்று வேறு திருமணங்கள் புரிந்து வாழ்கின்றனர். தமிழர் கலாசார வாழ்வில் புதிய மாற்றங்கள், சிக்கல்கள், திருமண வாழ்விலும் குடும்ப வாழ்விலும் இன்று எதிர்நோக்கப்படுகிறது. புலம்பெயர் நாடுகளில் பிறந்து வளர்ந்த தமிழ் இளையோர் இன்று திருமண உறவுகளை தாம் வாழும் நாடுகளிலேயே உருவாக்கிக் கொள்ள விரும்புகிறார்கள். தாயகத்தில் இருந்து மணமகளை வரவழைப்பது குறைவடைந்து செல்கிறது. வெளிநாட்டு வாழ்க்கையில் இன்று காதல் திருமணங்கள் அதிகளவில் இடம்பெற்று வருகின்றன. இனம், மொழி, சாதி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு புலம்பெயர் இளையோர் திருமண உறவுகளை ஏற்படுத்திக் கொள்கின்றனர்.

மேலைத்தேச நாடுகளில் ஒருவர் இன்னொருவருடன் சந்தித்துக் கொள்ளும்போது பல இனிமையான வார்த்தைகளைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். வணக்கம் 'இந்தநாள் நல்ல நாளாகட்டும்' , 'நல்ல உணவாகட்டும்', 'மீண்டும் சந்திப்போம்' போன்ற வார்த்தைகளை அதிகம் பயன்படுத்துகின்றனர். இப்படிச் சொல்லாதவர்களை நாகரிகம் அற்றவர்களாகக் கருதுகின்றனர். இந்த வார்த்தை பயன்பாடுகளுக்கு உயர்வுதாழ்வு, அந்தஸ்து என எதுவும் கிடையாது. கடைகளுக்கோ அல்லது வேறு இடங்களுக்கோ சென்றால் வணக்கம் சொல்லி வரவேற்று

போகும்போது 'இந்நாள் நல்லநாளாகட்டும் மீண்டும் சந்திப்போம்' என வாழ்த்தியனுப்புவார்கள். இவ்வாறான பழக்க வழக்கங்களை பாடசாலைகளிலேயே சொல்லிக் கொடுக்கிறார்கள். தாயகத்தில் தமிழர்கள் இவ்வாறான வார்த்தைப் பிரயோகங்களை குறைவாகவே பயன்படுத்து கின்றனர். கூடுதலாக அந்தஸ்துப் பார்த்தே இவ்வாறு கதைக்கும் பழக்கமுடையவர்களாக இருக்கின்றனர். தமக்கு கீழ் உள்ள பணியாளர்களுக்கு மரியாதை செய்யும் பழக்கம் மிக அரிதாகவே இருக்கிறது. தொழிற்பேதங்கள் அதிகம் இருக்கின்றன. தொழிலை வைத்தே ஒருவருக்கு கொடுக்க வேண்டிய மரியாதையை தீர்மானித்துக் கொள்கிறனர். மேற்குலகில் தொழிற்பேதங்கள் இருப்பதில்லை. யாவரும் சமமான கணிப்புப் பெறுகின்றனர். முதலாளி தொழிலாளி எனத் தரம் பார்ப்பது மிகக் குறைவு. பல இடங்களிலும் தொழிலாளி செய்கின்ற வேலைகளில் முதலாளியும் பங்குகொண்டு செயற்படுவதை அவதானிக்க முடிகிறது.

தாயகத்தில் சில அரச காரியாலயங்களின் வாயில்களில் "பாதணிகளை கழற்றிவைக்கவும்" என அறிவிப்புப் போடப்பட்டிருக்கும். ஆனால் அதற்குள்ளே அதிகாரிகளும் அவரது நண்பர்களும் பாதணிகளுடன் இருப்பதை அவதானிக்க முடியும். இவ்வாறான நாகரிகமற்ற விளம்பரங்களை எந்த மேற்கத்தேய நாட்டிலும் கண்டு கொள்ள முடிவதில்லை. மேலும் தமிழர் தாயகத்தில் மேலதிகாரிகள் தமக்கு கீழ் உள்ள பணியாளர்களுடன் பெரும்பாலும் கடினமாகவே நடந்து கொள்கிறார்கள். தொழில் நிலைகளில் பார்க்கப்படும் ஏற்றத் தாழ்வுகளே இவ்வாறான பண்பாடுகளற்ற வார்த்தைப் பிரயோகங்களுக்கு வழிவகுக்கிறது. மேற்கத்தேய நாடுகளில் மேலதிகாரிகள் அன்பாக வரவேற்று பண்பாகப்பேசி சாதுரியமாக வேலையை வாங்கிக் கொள்கிறார்கள். மனித உரிமைகளுக்கு மதிப்பளிப்பது மட்டுமல்ல மனிதப் பண்புகளுக்கு மதிப்பளித்து செயற்படுகிறார்கள். புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழர்கள் இன்று இனிமைதரும் வார்த்தைப் பிரயோகங்களை அதிகளவில் பயன்படுத்தி வருகிறார்கள். ஒரு தமிழர் இன்னொரு தமிழனைச் சந்திக்கும்போது வணக்கம் சொல்லி கைலாகு கொடுத்து வரவேற்பதுடன் தமது தமிழ்ப்பற்றையும் வெளிக்காட்டுகின்றனர்.

வெளிநாட்டினர் கூடுதலாக சட்டதிட்டங்களை மதித்து நடப்பதிலும் சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருப்பதிலும் அக்கறையாக

இருக்கிறார்கள். வீதியொழுங்குகளை மிக நேர்த்தியாக கடைப்பிடிக்கி றார்கள். தமிழர் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளின் சுதேசிகள் நாட்டுப்பற்று அதிகமானவர்களாக இருக்கிறார்கள். நடைபாதைகளில் கழிவுப் பொருட்கள் ஏதாவது இருந்தால் அதனை எடுத்து குப்பைத் தொட்டியினுள் போடுகிறார்கள். பல வீதிகளிலும் பத்திரிகைகள் பெட்டியொன்றினுள் வைக்கப்பட்டிருக்கும். அதற்குரிய பணத்தைப் போட்டுவிட்டு செய்தித்தாள்களை எடுக்கின்றனர். பணம் போடாமலே அதனை எடுத்துக் கொள்ள முடியுமாயினும் மனச்சாட்சிக்கு மதிப்பளித்து நடந்து கொள்கின்றனர். பேரூந்துகளில் நடத்துனர்கள் இருப்பதில்லை. இருப்பினும் பயணச் சீட்டை பேரூந்துகள், தரிப்பிடங்களில் உள்ள தானியங்கி இயந்திரங்கள் மூலமாகப் பெற்றுக் கொள்கிறார்கள்.

சுவிஸ் நாட்டின் ஜெனிவா நகரத்தில் வெஸ்னா என்ற இடத்துக்கு ஒவ்வொருநாளும் பிற்பகல் வேளைகளில் முதியவர் ஒருவர் வருகை தருகிறார். அவர் பேரூந்து தரிப்பிடத்தில் பயணிகளால் போடப்படும் கழிவுப் பொருட்களை எடுத்து அதற்குரிய குப்பைத் தொட்டியினுள் போடுகின்றார். இவர் ஓய்வூதியம் பெறுகின்ற ஒரு சுவீஸ் பிரஜை. நாட்டுப் பற்றுக்கொண்ட இவர் சமூக சேவையாக நீண்ட காலமாக இதனை செய்து வருகின்றார். இந்த பேரூந்து தரிப்பிடத்தை கூடுதலாக வெளிநாட்டுப் பயணிகள் பயன்படுத்துவதும் குறிப்பிடத்தக்கது.

சூழலை சுத்தமாக வைத்திருத்தல், சட்டங்களை மதித்தல், மனச்சாட்சிக்கு மதிப்பளித்தல், சேவை மனப்பான்மை போன்ற பண்புகளில் மேலைநாட்டினர் நல்ல நிலையில் இருக்கின்றனர். இலங்கை இந்திய மக்களிடம் இது குறைவான நிலையிலேயே இருக்கிறது. பொது இடங்களில் வெற்றிலை எச்சில் துப்புதல், மலசலம் கழித்தல், கழிவுப் பொருட்களை வீசுதல் போன்ற அநாகரிகமான செயல்களில் வெகு இயல்பாக ஈடுபடுகின்றனர். இலஞ்சம் வாங்குதல், பயணச்சீட்டுக்கள் இல்லாமல் பயணம் செய்தல் ஏமாற்றுதல், திருடுதல், கடத்தல், கப்பம் கோரல், பாலியற் பலாத்காரம் போன்ற மானிட விரோதச் செயல்களும் இலங்கை, இந்திய நாடுகளில் பெருமளவில் நடைபெற்று வருகின்றன. புலம் பெயர்நாடுகளில் வாழும் தமிழர்கள் ஓரளவுக்கு இந்த ஒழுக்கங்களில் மேலைத்தேய கலாசாரப் பண்புகளைப் பின்பற்றி வருகின்றனர்.

தமிழர்கள் தங்களுக்கிடையே உரையாடும் போதோ அல்லது

தொலைபேசியில் உரையாடும் போதோ அதிக சத்தமாகப் பேசும் பழக்கமுடையவர்களாக இருக்கிறார்கள். தமக்கு அருகில் உள்ளவர்களைப் பற்றிக் கவலை கொள்வதில்லை. மேலை நாட்டினர் இவ்வாறான சந்தர்ப்பங்களில் மற்றவர்களுக்கு இடையூறு கொடுக்காமல் மென்மையாக உரையாடிக் கொள்கிறார்கள். மற்றவர் உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் பண்பினை இது வெளிக்காட்டுவதாக இருக்கிறது.

இலங்கை இந்திய நாடுகளில் பொதுச்சொத்துக்களின் மீது குறிப்பாக பேருந்து இருக்கைகள், மலசலகூடங்கள், பாடசாலை, பல்கலைக்கழக சுவர்கள் என்பவற்றில் ஆபாசமான படங்கள், வார்த்தைகள், மற்றவர்களைக் கேலி செய்தல் போன்ற கருத்து வெளிப்பாடுகளை படங்களாகவும் வசனங்களாகவும் வரைந்தும் எழுதியும் விடுகின்றனர். மேலை நாடுகளில் இவ்வாறாக பொதுச் சொத்துக்களில் அவற்றை எழுதியும் வரைந்தும் ஆசையைப் பூர்த்தி செய்ய வேண்டிய அவசியம் இருக்கவில்லை ஆயினும் பத்திரிகைகள் திரைப்படங்கள் என்பவற்றில் அதிகமாக பாலியற்படங்கள் இடம்பிடித்து விடுகின்றன.

தமிழ்க் குடும்பங்களில் ஆணாதிக்கம் வலுப்பெற்றிருக்கிறது. பல குடும்பங்களில் கணவன்மாரால் மனைவியர் துன்புறுத்தப்படுகின்றனர். சில சந்தர்ப்பங்களில் அடிகாயங்களுக்கும் உள்ளாகின்றனர். பெற்றோர்களால் பிள்ளைகள் கடும் கண்டிப்புக்குள்ளாகின்றனர். சில பெற்றோர்களால் பிள்ளைகள் சித்திரவதைகளுக்கும் உள்ளாக்கப்படு கின்றனர். வெள்ளையர்களின் கலாசாரத்தில் குடும்பங்களில் உடல்ரீதியான தண்டனைகள் வழங்கப்படுவது சட்ட ரீதியாகவே தடைசெய்யப்பட்டி ருக்கிறது. கணவன் மனைவியருக்கிடையே கருத்து மோதல்கள் வந்தால் விவாகரத்துப் பெற்றுக் கொள்கிறார்கள். பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு உடல்ரீதியான தண்டனைகள் வழங்கினால் பெற்றோர்கள் பொலிசாரால் தண்டனைக்குள்ளாக்கப்படுகிறார்கள். பொதுவாக இவர்களின் குடும்பங்களில் குடும்பத்துக்குள்ளான தண்டனை வழங்கும் முறைகள் மிகக் குறைவாகவே காணப்படுகிறது.

உலகின் பலவகையான கலாசாரங்கள் காணப்பட்டாலும் எந்தக் கலாசாரம் நல்லது எது கெட்டது என கருத்துக் கூறுவது தவறானதாகும். தமிழரின் கலாசாரத்தில் என்ன நல்ல விடயங்கள் இருக்கின்றன என்பதை தமிழ்மக்கள் சீர்தூக்கிப்பார்க்க வேண்டும். அதேபோல மேலைத் தேசத்தவர்களின் கலாசாரத்தில் உள்ள நல்ல விடயங்கள் எவை தவறான

விடயங்கள் எவை என்பதையும் எடைபோட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். எந்தக் கலாசாரத்திலும் உள்ள நல்ல விடயங்களை எடுத்துக்கொள்ளவும் தவறானவற்றை தவிர்த்துக் கொள்ளுவதற்குமான மனப்பக்குவம் ஏற்பட வேண்டும்.

தமிழ்கலாசாரத்தினர் மேல்நாட்டு கலாசாரத்தாரிடம் காணும் குற்றச் சாட்டுக்கள் அல்லது குறைபாடுகள்.

* கற்பொழுக்கத்தினை கடைப்பிடிப்பவர்கள் அல்ல. ஒன்றுக்கும் மேற்பட்டவர்களுடன் பாலியற் தொடர்புகளை வைத்திருக் கின்றனர்.
* திருமணம் செய்யாமலே சேர்ந்து வாழ்கின்றனர். பின்னர் பிரிகின்றனர். அதன் பின் வேறு திருமணங்கள் செய்து கொள்கின்றனர்.
* காலைக் கடன்களை முடித்துக் கொண்டபின் நீர் கொண்டு சுத்தம் செய்யாதவர்கள்.

மேல்நாட்டுக் கலாசாரத்தினர் தமிழ்கலாசாரத்தில் காணும் குறைபாடுகள்.

* சுத்தமற்றவர்கள் :- சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்திருப்பதில் அக்கறையற்றவர்கள்
* காலைக்கடன்களை முடித்தபின் கைகளைப் பயன்படுத்தி சுத்தம் செய்பவர்கள்
* உணவுகளை கைகளால் தொட்டு எடுத்து சாப்பிடுபவர்கள்
* பாலியல் உணர்வுகளை அடக்கிவைத்திருப்பவர்கள் அதனால் பிறழ்வான நடத்தைகளில் ஈடுபடுகின்றனர்.
* உழைக்கும் பணத்தை செலவழித்து மகிழ்ச்சியாக வாழாமல் சேமித்து வாழ்க்கையின் இன்பங்களை இழக்கின்றனர்.

புலம்பெயர் நாடுகளின் தமிழர்கள் தமது கலாசாரத்துக்கும் மேற்கத்தேய கலாசாரத்துக்கும் இடையே ஒரு உடன்பாட்டைக் காணமுடியாதவர்களாக இருக்கிறார்கள். தங்கள் பிள்ளைகளை மேற்கத்தேய நாடுகளில் வளர்த்தெடுப்பதில் அச்சப்படுகிறார்கள். மேலை நாட்டுக் கலாசார குறைபாடுகள் பற்றி தமது பிள்ளைகளுக்கு எடுத்துச் சொல்லும் பெற்றோர்கள் ஒருபோதும் தமது கலாசார குறைபாடுகளை எடுத்துச் சொல்லி அவற்றை தவிர்த்துக் கொள்ள ஆலோசனைகள் வழங்குவ தில்லை. அத்துடன் ஏனைய கலாசாரங்களில் உள்ள நல்ல விடயங்களைச் சொல்லி அவற்றை ஊக்கப்படுத்துவதும் இல்லை.

அதனால் மீண்டும் மீண்டும் முரண்பாடுகள் நிறைந்த கலாசார சூழலிலேயே வாழவேண்டியவர்களாகின்றனர்.

என்னால் என்னருகில் உள்ளவர்களைப் பேதமில்லாமல் நேசிக்க முடிகிறதா. அவ்வாறு முடியுமானால் உலகில் உள்ள எல்லோர் மீதும் என்னால் அன்புகாட்ட முடியும். மாறாகப் பேதங்கள் பார்ப்பேனாகின் நான் மற்றவர்களால் வெறுக்கப்படுவேன். நான் வெறுக்கப்படுவேனானால் எனது கலாசாரத்தில் குறைபாடு உண்டு என்பதை நான் ஏற்றுக் கொண்டுதானாக வேண்டும். மற்றவர்களின் கலாசாரத்தில் குறைபாடு காணும் நான் எனது கலாசாரத்தில் குறைகாணாமல் இருப்பதேன்? முரண்பாடுகள் நிறைந்த இந்த உலகத்தில் உடன்பாடுகளைக் காண்பது மிகக் கடினமானது. இருப்பினும் ஒவ்வொருவரும் தமது கலாசாரத்தினுள் புரையோடிப் போயிருக்கும் பேதமைகளை இனங்கண்டு நிராகரித்தாலே சிறப்பான கலாசாரமொன்றைக் கட்டியெழுப்ப முடியும்.

8

## புலம் பெயர்வாழ்வில் புதிய தேவைகள்

தமிழர் குடும்ப வாழ்வியலில் வயதான முதியவர்கள் வீடுகளில் வைத்தே பராமரிக்கப்படுகின்றனர். தாயக வாழ்வில் வீடுகளில் முதியவர்கள் இருப்பது பிரச்சினைக்கான ஒரு விடயமல்ல. வீட்டில் போதுமான இடவசதி, பராமரிப்பதற்கான மனிதவளம், குறைவான செலவீனம் என்பன சாதகமாக இருக்கின்றன. புலம் பெயர் நாடுகளில் வாழ்வோர் தற்காலத்தில் தமது பெற்றோர்களை தாயகத்தில் இருந்து வரவழைத்து தம்முடன் வைத்திருப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். பல பெற்றோர்கள் இவ்வாறு புலம்பெயர் நாடுகளுக்கு வந்து பிள்ளைகளுடன் வாழ்ந்து வருகின்றனர். இம் முதியவர்கள் தாயக வாழ்க்கைக்கும் புதிய புலம்பெயர்

வாழ்க்கைக்கும் பாரிய முரண்பாட்டைக் காண்கின்றனர். ஒடுங்கிய வீடுகளுக்குள் தாம் சிறையிருப்பதாகக் கருதுகிறார்கள். பிள்ளைகள் வேலைகளுக்கு சென்றுவிட வீடுகளில் தனியாக இருந்து மனம் வருந்திக் கொண்டிருக்கிறார்கள். இவர்களின் உளநலன்களில் அதிக அக்கறை காட்டப்பட வேண்டும். அதற்காக புலம்பெயர் நாடுகளில் தமிழ் மக்களுக்காக முதியவர் காப்பகங்கள் அமைக்கப்பட வேண்டும். இந்தக் காப்பகங்களில் முதியவர்களுக்கான சகல பொழுது போக்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். இக்காப்பகங்களுக்கு இவர்கள் தாம் விரும்பிய நேரங்களில் போய் தங்கி வருவதற்கான வரதிகளைப் பிள்ளைகள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறான புதிய காப்பகங்கள் வயதான முதியவர்களுக்கு புதிய நண்பர்களை உருவாக்கிக் கொடுப்பதுடன் அவர்களுடன் மனம் விட்டுப்பேசி ஆறுதல் அடைந்து கொள்ளவும் வழியேற்படுகிறது. இக் காப்பகங்கள் தமிழர் கலாசார முறைப்படி நிர்வகிக்கப்பட்டு அங்கு தாயக உணவு வகைகள், தாராளமாகக் கிடைப்பதற்கும் வழியேற்படுத்த வேண்டும் இவ் இல்லங்களில் இருந்து முதியவர்கள் களச்சுற்றுலாக்களுக்கு அழைத்துச் செல்வது அவர்களின் உளநலத்துக்கு ஆரோக்கியமானதாக இருக்கும். தமிழர் கலாசாரத்தில் முதியவர்கள் காப்பகங்களில் விடப்படுவது நாகரிகமற்ற செயலாக கருதப்பட்டாலும் புலம் பெயர் நாடுகளில் இத்தகைய நிலையங்கள் தவிர்க்க முடியாதளவுக்கு அவசியம் பெற்றிருக்கிறது.

புலம் பெயர்நாடுகளில் பலர் தனித்துவாழ்ந்து வருகின்றனர். தொழில்களால் ஏற்படும் சோர்வு, விருப்பமான உணவுகள் கிடைக்காமை, அன்பு ஆதரவு கிடைக்காமை, உறவுகளைப் பிரிந்திருக்கும் துயரம் என்பன அவர்களை மனதியல் ரீதியாகப் பலவீனம் அடைந்தவர்களாக மாற்றிவிடுகிறது. இத்துன்பியல் வாழ்வில் இருந்து விடுபட குடிபோதைகளுக்கு அடிமையாதல், தவறான பாலியல் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளல் சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுதல் போன்ற செயல்களிலும் சிலர் ஈடுபடுகின்றனர். குடும்பமாக வாழ்பவர்களிடமும் இன்று இப்பிரச்சினைகள் அதிகரித்து வருவதை அவதானிக்க கூடியதாக இருக்கிறது. குடும்பத்துக்குள் முரண்பாடுகள், பிரிந்து வாழ்தல், விவாகரத்துப் பெறுதல் என்பன தெளிவாக அதிகரித்துச் செல்கிறது. பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் அன்பு வழித் தொடர்பு குறைவடைந்து செல்கிறது. இவ்வகையான முரண்பாடுகளை நிவர்த்தி செய்து கொள்ளவும் வாழ்க்கையை மகிழ்வித்து அனுபவிக்கச் செய்யவும்

ஓர் இணக்கப்பாட்டைப் புலம்பெயர் நாடுகளில் ஏற்படுத்தவேண்டிய தேவை உணரப்படுகிறது. இதற்காக தமிழர் கலாசாரம் தழுவிய வழிகாட்டல் ஆலோசனை சேவைகள் ஆரம்பிக்கப்படுவது அவசியமாகிறது. இதற்கு புலம்பெயர கல்வி உளவியலாளர்கள், வழிகாட்டல் சேவையாளர்கள் மருத்துவர்கள் இணைந்து இச்சேவையை உருவாக்கி நடைமுறைப்படுத்துவது ஆரோக்கியமாக அமையும்.

புலம்பெயர் தமிழர்கள் தங்கள் தாயக வாழ்க்கை வரலாறுகள், கலாசாரங்கள், இலக்கியங்கள் என்பவற்றைத் தெளிவாக விளங்கிக் கொள்ள தமிழ் நூலகங்கள் ஏற்படுத்தப்படுவது முக்கியம் பெறுகிறது. தமிழ் மொழிப்பற்று ஏற்படவும் தாயக நேசிப்பு தொடர்ந்து கொள்ளவும் இத்தகைய வாசிப்பு நிலையங்கள் பேருதவியாக அமையும். புலம் பெயர்ந்தவர்கள் ஆக்க இலக்கியங்களில் ஈடுபடவும் அதன்மூலமாக தமிழ்மொழியில் இருந்து பிறமொழிகளுக்கு மொழிபெயர்த்துக் கொள்வதற்குமானதொரு புறநிலையை இந் நூலகங்களால் உருவாக்கிக் கொள்ள முடியும்.

புலம்பெயர்நாடுகளில் தமிழர்களின் அருங்காட்சியகங்கள் திறக்கப்படுவது காலத்தின் தேவையாக இருக்கின்றது. தமிழர் பண்பாடுகளில் இருந்து பல பயன்பாட்டுப் பொருட்கள் அருகிச் செல்கின்றன. இவ்வாறு மறைந்த, மறைந்து கொண்டிருக்கின்ற தொல்பொருட்கள், தாயக பாரம்பரிய பாவனைப் பொருட்கள் என்பன இங்கு வைத்து பராமரிக்கப்படுவதோடு புலம் பெயர் தமிழ் இளையோர்களுக்கும் வெளிநாட்டினருக்கும் அதனைக் காட்சிப் படுத்துவது தமிழர்களின் வரலாறுகளையும் அவர்களது சிறப்புக்களையும் வெளிக்காட்டுவதாக அமையும்.

புலம்பெயர் நாடுகளில் தமிழ்க்கல்வி, கலாசாரம், விளையாட்டு போன்ற நிகழ்வுகளில் பரவலாக ஈடுபட்டுவருகின்றனர். புலம் பெயர்ந்தவர்களின் இத்தகைய நிகழ்வுகளை ஒழுங்கமைத்து உலகளாவிய நிலையில் அவற்றை வலிமைப்படுத்துவதற்கு ஒழுங்கமைப்பு மையமொன்று உருவாக்கிச் செயற்படுத்துவது பொருத்தமானதாக அமையும். பரீட்சைகள், போட்டிகள் என்பவற்றை நடாத்துவதோடு கல்வி கலாசார விளையாட்டு முயற்சிகளுக்கு இம்மையத்தினால் ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து செயற்படவும் முடியும்.

பிடுங்கி நடப்பட்டவை அதிக செழிப்பைக் கொடுப்பதுபோல் பன்னாட்டுச் சூழலில் நாற்றாக ஊன்றப்பட்ட புலம்பெயர் தமிழர்கள் அந்தந்த விளைநிலங்களில் செழித்திருப்பதற்கும் நிலைத்துப் பயன் தருவதற்குமாக செயற்பாட்டுத் தளங்களைக் கண்டறிந்து ஆற்றுகைகளை மேற்கொள்ள வேண்டும். புலம் பெயர்ந்து சேர்த்துக்கொண்ட பலம் தாயக நிலம் சார்ந்த விளைவுகளுக்கு உரமாக அமைவதே இனம் சார்ந்த விளைவுகளை மேன்மைப்படுத்தும்.

12 –
13 –
16 –
18 –
19 –
37 –
43 –
44 –
46 –
47 –
55 –
57 –
65 –
67 –
75 –



## மண் வாசம்

ஒற்றைப்பனை வயல் வெளியே
ஓடித் திரிந்த குளக் கரையே
ஒரு நாள் நான் வருவேன்
உன்னை அள்ளி முத்தமிட

காலைச் சுடர்ப் பனித்துளியில்
காலடித்து நான் மகிழ்வேன்
மாலை வெயில் மர நிழலில்
மணல் மீது படுத்திருப்பேன்

வட்டநிலா இரவொளியில்
வந்திருந்து கதை கேட்பேன்
பட்ட மரக் கிளியோடும்
பதிலிறுத்து மொழி பயில்வேன்

பூவரசு இலை எடுத்து
புதுக் குழல்தான் செய்வேன்
மின்மினிப் பூச்சிகளால்
மின்னொளி நான் செய்வேன்

வயலோரம் நான் நடந்து
நெல்லோடு தான் பேசி
வரம்போடு போராடி
நீரோடு உறவாவேன்

என் வீட்டு முற்றத்து
எரிந்த மர வேர் பிடுங்கி
தொலைந்து போன உறவுகளை
கண்ணீரில் தேடுவேன்.